www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 145 ஏப். 30 - மே 13 , 1998 விலை ரூபா 10.00

# முறுகலுறும் மூதூர் !

பொத்துவில் தொகுதி முஸ்லிம்கள்:

# அரசியல் அனாதைகள் ?

# ராணுவத் தபால் சேவை

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை :

# ஐ.தே.க. வுக்கு மட்டுமல்ல !

# சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சினார் ரோஹண

-லயனல் போபகே-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு!

திருகோணமலை உப்புவெளிப் பொலிஸ்நிருவாக எல்லைக்குள் உத்தியோகபூர்வமற்ற ஊரடங்கு 18.04.98 தொடக்கம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. அன்புவழிபுரம், செல்வ நாயகபுரம், புளியங்குளம், அலஸ் தோட்டம், சல்லி, சாம்பல்தீவு, ஆறாம் கட்டை ஆகிய பகுதிகளில் இரவு எட்டுமணி தொடக்கம் காலை ஆறுமணி வரை மக்கள் நடமாடுவது தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள் ளது. விடுதலைப் புலிகளின் நடமாட் டம் அதிகரித்துள்ளமை குறித்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் பொதுமக்களே இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

16ம்திகதி இரவு எஸ்.நடராசா என்ற 72 வயது முதியவர் ஊரடங்குச் சட்டம் காரணமாக உயிரிழக்க நேரிட்டி ருக்கிறது. திடீரென ஏற்பட்ட மார டைப்புக் காரணமாக இவர் உயிர் பிரிந்திருக்கிறது. உறவினர்கள் நோயாளியை ஆஸ்பத்திரிக்கு எடுத் துச் செல்லப் பாதுகாப்புத் தரப்பாரிடம் அனுமதிக்காக நின்ற வேளையில் அவ் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை மூன்றாம் கட்டை காவலரண் பொறுப்பாளர் மீது பொதுமக்கள் காரசாரமான குற்றச் சாட்டுக்களைத் தெரிவிக்கின்றனர். ஜயவீரசிங்ஹ என்றழைக்கப்படும் இவ்வதிகாரி போவோர் வருவோ ரிடம் பணம் பறிப்பதிலேயே குறியாக இருக்கிறாராம். மீன், கருவாடு, மரக்கறி, தேங்காய் என்று எவர் எதைக் கொண்டு போனாலும் கை கூசாமல் தனக்கென ஒரு பங்கை எடுத்துக் கொள்கிறாராம். இவருக்கு லீலசேன என்பவர் உதவியாக இருப்பதாகத் தெரிகிறது. அதிகாரி யால் உடன் அறவிடப்பட முடியாத லஞ்சப் பொருட்களைச் சம்பந்தப் பட்ட பொது மக்களுடன் சென்று அறவிட்டு வரும் பணியை இந்த லீலசேன செய்து வருவதாகக் கூறப் படுகிறது. உப்புவெளிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் இவர் எச்சரிக்கப்பட்டும் தனது தொழிலைக் கைவிடவில்லை எனக்கூறும் பொது மக்கள், இவர் பொலிஸ் உத்தியோ கத்தை சைட் பிஸினசாக வைத்துக் கொண்டு தட்டிப் பறிப்பதை பிரதான தொழிலாகக் கொண்டுள்ளாரோ என்று கேட்கின்றனர்.

## இடம் பெயர்க்கப்பட்ட இவர்கள்...

உப்பாறிலிருந்து வெளியேறிய குடும்பங்கள் ஆலங்கேணி விநாயகர் வித்தியாலயத்தில் தஞ்சமடைந் துள்ளன. இவர்களுக்கு உலர் நிவா ரணப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. தனித்தனியாக குடிசை கள் அமைத்துக் கொடுக்க அரச அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். 44 தமிழ்க்குடும்பங்கள் ஆலங்கேணி யிலும், 11 முஸ்லிம் குடும்பங்கள் கிண்ணியாவிலும் இருக்கின்றன.

இவர்களது வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தோட்டங்க ளில் சுமார் இருபதாயிரம் கால் நடைகளையும் இவர்கள் கைவிட்டு வந்துள்ளார்கள். இவர்களோடு இவர்களது தொழில் சார்ந்து வாழும் ஆலங்கேணிக் குடும்பங்கள் பலவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இத்திக்குளம், சின்னக்குளம், மரவட் டைக்குளம் சார்ந்த 174 குடும்பங் களும் இராணுவ உத்தவுரப்படி இடம்பெயர்ந்து அயற்கிராமங்களில் தங்கியுள்ளனர். பயிர்ச்செய்கையை நம்பிய இந்தக்குடும்பங்களும் மிகவும் பாதிப்படைந்துள்ளன.

அங்கிருந்து கிடைக்கும் செய்திகளின் படி ஏப்ரல் 4ம்திகதி இத்திக்குளம் கிராமத்தில் குண்டுகள் போடப்பட்டி ருக்கின்றன. ஆலங்குளம் என்ற கிராமமும் குண்டுத்தாக்குதலுக் குள்ளாகி இருக்கிறது. சேதவிபரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. அயற் கிராம மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருக் கின்றார்கள்.

**திரிபுரன்**

## புலிகளின் 'ஆயுதக்' கண்காட்சி!

திருகோணமலையில் கைதுகள் அதிகரித்துள்ளன. தினமும் ஒன்றிரண்டு பேராவது புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்படுகிறார்கள். பலர் பலநாள் விசாரணையின் பின் விடுதலையாக, மற்றவர்கள் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த வாரம் இரண்டு கிராம உத்தியோகத்தர்கள் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார் கள். இதில் சிவானந்தம் என்பவர் தீவிர விசாரணைக்குப் பின் விடுவிக் கப்பட்டிருக்கிறார். மற்றவர் தேவக டாட்சம். செய்தி எழுதும்வரை அவருக்கான விசாரணைகள் முடிய வில்லை. இன்றோ நாளையோ அவர் விடுதலையாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு மாதகாலத்துக்குள் இரண்டு பொலிஸ் முகாம்கள் தாக்குதலுக்குள் ளாகியிருக்கின்றன. தங்கள் தரப்பில் இழப்புக்கள் குறைவு என்று பொலிசார் கூறிக்கொண்ட போதிலும் இரண்டு முகாம்களும் விடுதலைப் புலிகளால் முற்றுமுழுதாக நிர்மூல மாக்கப்பட்டதை அவர்களால் மறுக்க முடியவில்லை.

மார்ச் 9ம்திகதி அதிகாலை ஒரு முகாம் தாக்கப்பட்டது. மூதூரிலிருந்து தெற்கே நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பச்சனூர் என்ற கிராமத்தில் இருதயபுரம் பாடசா லையின் ஒரு பகுதியில் இது அமைந் திருக்கிறது. உடனடியாக புலிகளிடம் முகாம் வீழ்ச்சி கண்டது. நிதானமாக உள்நுழைந்த புலிகள் கதவுகளை உடைத்து சகல பொருட்களையும் அகற்றிச் சென்றிருக்கிறார்கள்.

இந்த மோதலில் மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர். இந்தத் தேதியிலி ருந்து இரு வாரங்களுக்கு முன்னர் மல்லிகைத் தீவுக்கருகில் இரண்டு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்ட தால் முகாம்கள் கட்டாயத் தாக்கு தலுக்குள்ளாகும் எனப்பொலிசார் எதிர்ப்பார்த்திருந்ததாலேயே இழப் புக்கள் குறைந்தன என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

அடுத்த முகாம், ஏப்ரல் 2 அதிகாலை 12.30க்கு இடம்பெற்றிருக்கிறது. இந்த முகாம் தோப்பூர் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் அமைந்தி ருக்கிறது. தாக்குதல் ஆரம்பித்ததும் எதிர்ப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவு இல்லாமலேயே முகாம் வீழ்ச்சி கண்டது. பக்கத்திலுள்ள குளம் ஒன்றில் இரவிரவாகக் கழுத்தளவு தண்ணீரில் மறைந்திருந்து பொலிஸார் உயிரைக் காத்துக் கொண்டனர்.

முகாமுள் புகுந்த விடுதலைப் புலிகள் பல ஆயுதங்களையும், வேறு பல பொருட்களையும் அள்ளி பாதுகாப் புக் கருதி இரவு தரிப்புக்காக நிறுத்தப் பட்டிருந்த இ.போ.ச. பஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்று விட்டனர். ஏனைய பொருட்களை ஒன்றாகப் போட்டு தீ மூட்டினர். விடிந்ததும் முகாமைப் பார்க்க வந்த பொலிசாரில் மிதி வெடிகளில் சிக்குண்டு நால்வர் காயமடைந்தார்கள். மிதிவெடிகளைப் புலிகள் புதைத்து விட்டுச் சென்றதாக பொலிசார் கூறினர்.

இதைத்தொடர்ந்து புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் உள்ளபாடசாலை யொன்றில் 3ம்திகதி முகாமில் கைப் பற்றப்பட்ட பொருட்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. ஒலிபெருக்கி மூலம் மக்கள் அழைக் கப்பட்டு இந்தக்காட்சி இடம்பெற்றது.

## வழிகாட்டியவர் யார்?

இலங்கைக் கிரிக்கெட் குழு உலக சாம்பியன் ஆன பின்பு அதன் கோப்பையை தூக்கிக் கொண்டு போய் பௌத்த பீடாதி பதிகளிடம் ஆசீர்வதிக்க கொடுத் தது. - தான் இலங்கையின் கிரிக் கெட் குழு அல்ல சிங்கள பௌத்தர் களின் கிரிக்கெட் குழு தான் என்பதை உணர்த்துவது போல. இலங்கை அரச தொ(ல்)லைக் காட்சியும் அதைக்காட்டோ காட்டு எனக் காட்டித் தள்ளியது. இப்போது தென்னாபிரிக்காவில் படுதோல்வியை சந்தித்து விட்டு வந்திருக்கிறது. இதுக்கும் போய் ஆசீர்வாதம் கேட்க வேண்டியது தானே. வெல்லுவதற்குக் காரணம் பௌத்த பீடங்களின் வழிகாட்டல் என்றால் தோல்விக்கு மட்டும் யார் காரணமாம்? போதாததற்கு இம் முறை இன்னொரு குற்றச்சாட்டு வேறு. தென்னாபிரிக்காவுடனான இறுதிப் போட்டிக்கு முதல் நாள், இரவிலிருந்து அதிகாலை வரை குடி குடிஎன்று குடித்து விட்டு கும்மாளமும் போட்டிருக்கிறார்க ளாம் எனும் குற்றச்சாட்டு. குற்றச் சாட்டு உண்மை என்றால் அப்போ அதற்கும் வழிகாட்டியது..?

## 'அற்புத' விளக்கம்!

ராஜினியின் கொலைக்கு புலிகள் அல்ல இந்திய அரசும், ஈ.பி.ஆர்.எல்.எப்.புமே காரணம் என்கிறார் அற்புதன். தினமுரசு இதழ் 252இல் ஈ.பி.ஆர். எல். எப்.ஐச் சேர்ந்த ராபீக் என்பவராலேயே இக் கொலை செய்யப்பட்டது என எழுதியிருந்தார் அவர். இவ்வளவு நாளும் இருந்து விட்டு அற்புதன் (எனும் பெயரில் எழுதும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா அற்புதராஜா) அவர்கள் எங்கிருந்து இந்தத் திடீர்த் தகவலைப் பொறுக்கினாரோ தெரியவில்லை. தனது கட்டுரைத் தொடரில் போகிற போக்கில் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார். அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'மக்களின் குரல்' சேவையை நடாத்திய போது புலிகள் தான் காரணம் என்று என்ன மாதிரி மனித உரிமை மீது அக்கறை கொண்டு குரல் கம்ம சூளுரைத்திருந்தார். இப்போது மட்டும் எப்படி இதுதான் உண்மை என்று கண்டு பிடித்தாரோ தெரியவில்லை. அப்படித்தான் அவர் எழுதியிருப்பது போல இக் கொலைக்ககு ஈ.பி.ஆர். எல். எப். தான் காரணம் என்றால் அது வெறுமனே போகிற போக்கில் சொல்லி விட்டுக் போகிற ஒரு சமாச்சாரம் அல்ல. அதுவும் அவரது பத்திரிகை இதை ஒரு பெரிய குண்டாகவே தூக்கிப் போட்டு வியாபாரம் பண்ணியிருக்கும். ஆனால் பத்திரிகையில் வேறெங்கும் அதைப்பற்றிச் சொல்லாமல் அவரது வரலாற்றுத் (திரிப்புத்) தொடரில் இதைச் சொல்லி விட்டிருக்கிறார். அற்புதமான கதையளப்புக்குப் பேர் போன பேனா அவரது பேனா. அவரை விட்டு விடுவோம். ஆனால் புலிகள் தான் ராஜினியின் கொலைக்கு காரணம் எனக் கூறும் யாழ். பல்லைக்கழக மனித உரிமைகள் ஆசிரியர் குழுவும், பிற மனித உரிமைகள் அமைப்புகளும் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றன? இதுவரை அவர்கள் யாரும் மூச்சுக் காட்டியதாகத் தெரியவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டும் ஒரு மறுப்பை(?) மத்திய குழு உறுப்பினர் தம்பிராசா சுபத்திரன் என்பவரின் பெயரில் அற்புதனுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இம் மறுப்பிலே இக்கொலைக்குப் புலிகள் தான் காரணம் என்று தெரிவித்திருக்கிறார்கள். எதிர்பார்த்தபடியே இதற்கு அளந்த[illegible] ஆதாரத்தையும் இவர்கள் தெரிவிக்கவில்லை. இக்கடிதத்திலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால் அற்புதனால் இக்கொலைக்குப் பொறுப்பானவர் என்று குற்றம் சாட்டப்பட்ட ராபிக் இப்பொழுது தமது கட்சியை விட்டு விலக்கப்பட்டு விட்டாரென்றபடியால் அற்புதனின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்று கூறியிருப்பது தான்.! என்ன பொறுப்பான மத்திய குழு. இந்த மத்திய குழுத் தர்க்கத்தின்படி பிரபாகரன் கூட பல தவறுகட்குப் பொறுப்பானவர்கள் இப்போது தம்முடன் இல்லை, அல்லது இறந்து விட்டார்கள் என்பதால் தாமோ தமது இயக்கமோ எந்தத் தவறுகட்கும் பொறுப்பில்லை என்று கூறி விடலாம்: பத்மநாபா கொலை உட்பட.! ஆனாலும் பெரிய மனது வைத்து சுபத்திரன் அவர்கள் தமது 'முன்னைநாள்' தோழருக்கும் கொலைக்கும் சம்பந்தம் இல்லையென்று 'சேர்டிபிக்கற்' வழங்கியிருக்கிறார். தானாடாவிட்டாலும் சதையாடும் அல்லவா?

இன்னொரு கேள்வியையும் கேட்கத் தோன்றுகிறது: ஆக, அற்புதன் சொன்னவற்றுள் ராபிக் விடயம் தொடர்பாக மட்டும் தான் ஈ.பி.ஆர்.எல். எப்புக்கு உடன்பட முடியவில்லை. மற்றெல்லாவற்றிலும் உடன்பாடு தானோ?

யார் எவரோ, மக்களுக்கான குரலாக ஒலித்த ராஜினியின் குரல் வளையை நெரித்தவர்களின் நோக்கம் மட்டும் நிறைவேறி விட்டது. ஏனென்றால் அதன் பின் எமது தமிழ் முஸ்லிம் மக்களிடம் இருந்து மனித உரிமைகள் தொடர்பாக உருப்படியான குரல் இன்னமும் ஒலிக்கவில்லை.

## நாவிழந்தார் நலன்!

அறிவித்தாலும் அறிவித்தார் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில். கொழும்பு வரும், நீண்ட நாட்கள் தங்கும் தமிழ் மக்களிற்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படும் என. எங்களுடயடை நக்குண்டு பெருவாழ்வு வாழும் தமிழ் எம்.பி.க்கள் மெய்சிலிர்த்துப் போய் விட்டார்கள். இனித் தமிழ் மக்களிற்கு இன்னொரு சுமையும் கூடப்போகிறது. பாஸ், அடையாள அட்டை, பொலிஸ் பதிவு, இவற்றோடு புது அடையாள அட்டையும் கொண்டு போகவேணும். ஆனால் இது ஒரு மட்டமான மனித உரிமை மீறல் என்பதும், தமிழ் மக்களை மூன்றாந்தரப் பிரஜைகளாக நடாத்த முயலும் செயல் என்பதும் நக்கிப்பிழைப்பவர்களிற்கு தெரியவில்லைப் போலும். பீரிஸ் சொல்கிறார் பொலிஸ் மா அதிபர்களின் மகாநாட்டின் போது அவர்கள் தான் இந்தத் திட்டத்தை சொன்னார்களாம். எதேச்சாதிகாரம் கொண்ட, தமிழ் மக்களினை எந்தப்பாதக செயலிற்கும் உட்படுத்தத் தயங்காத பொலிஸ் படையின் அதிகாரிகள் தான் தமிழ் மக்களிற்காக கருணை கொண்டு திட்டம் தயாரிக்கிறார்கள். அப்படியயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் , அதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை. பொலிஸ் ரிப்போட் எடுத்த பிறகும், தேசிய அடையாள அட்டை வைத்திருந்த பிறகும் தமிழ் மக்கள் கைது எந்தளவிற்கு நடந்ததோ அந்தளவிற்குத் தான் இது வந்த பிறகும் நடக்கும். மற்றும் இது புலிகளின் ஊடுருவலையும் தடுக்கப் போவதில்லை. தாக்குதலையும் தடுக்கப் போவதில்லை. தமிழ் மக்கள் மீதான இராணுவ, அரசியல் கலாசார அடக்குமுறைகள் தொடரும் வரை புலிகளின் தாக்குதலை நிறுத்தவும் முடியாது. இந்த அடையாள அட்டை முறை மிக இலகுவாகத் தமிழ் மக்களை இனங்கண்டு ஏனையோரிடம் இருந்து பிரித்தெடுத்து அவர்கள் மீதான அடக்கு முறைகளை மேற்கொள்ளவே உதவும். அப்படி நடந்தாலும் இந்த ரோசம் கெட்ட தமிழ் எம்.பி க்கள் மெய்சிலிர்த்து வாய் பொத்தி நிற்பர். அப்போது தான் அரச விருந்துகளிலும், களியாட்டங்களிலும் நக்குவதற்கு முடியும்!

_ கா.கு.த்ரன் _

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை: அவர்களுக்கு மட்டுமல்ல!



பட்டலந்த சித்திரவதைக்கூடம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை தற்போது வெளிவந்துள்ளது. அரசாங்கம் இதுவரை அவ் அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை. எனினும், பத்திரிகைகளில் அத்தீர்மானங்கள் முடிவுகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அத்தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் அன்றைய அரசாங்கத்திற்கு மட்டுமன்றி இன்றைய அரசாங்கத்துக்கும் பொருத்தமான விதத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன மட்டுமல்லாமல் எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் கூட இம்முகாம் பற்றி தெரிந்திருந்தது என்று அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. அதேபோல் பொலிஸ் அதிகாரி டக்ளஸ் பீரிஸ் உட்பட பொலிஸ் அதிகாரிகள் பலர் இச்சித்திரவதைக் கூடத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதுவும் நேரடியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு ஏற்ப குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் ஆனால் இதற்கு முன்னர் வெளிவந்த காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு அறிக்கையின் எந்தச் சட்ட நடவடிக்கைகளையும் எடுக்காத ஒரு அரசாங்கம் இவ்வறிக்கை தொடர்பாக உடனடியாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்குமா என்பது சந்தேகமே. எவ்வாறாயினும் இவ்வறிக்கையில் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய இன்னொரு விடயமும் உள்ளது. ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகளுக்கு முகம் கொடுப்பது தொடர்பாக இந்நாட்டு அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஆணைக்குழு முன்வைத்துள்ள விதந்துரைகள் மிகவும் முக்கியமானவையாகும் ஆணைக்குழு இவ்வாறு குறிப்பிடுகின்றது.

அன்று மிக விசேடமான நிலைமை காணப்பட்டது என்பதுவும் அதனால் விசேடமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாக இருந்ததென்பதுவும் உண்மைதான். நாட்டை அராஜகத்தில் இருந்து காப்பாற்றியதிலும் கடமையாற்றிய பொலிஸ் இராணுவத்தினருக்கும் இந்நாடு கடன்பட்டுள்ளது எனினும் இவ் ஆணைக்குழுவில் வீற்றிக்கின்ற நீதிபதிகளான எம்மால் ஜே.வி.பி.-டி.ஜே.வி.பி தீவிரவாதத்தை அழித்தல் எனும் பேரில் இடம் பெற்ற அத்துமீறல்களை அனுமதிக்க முடியாது.

அரசின் நலன்களை அடிப்படையாகக் கொண்டேயாயினும் சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்படும் கொலைகள், காணாமல் போதல் மற்றும் சித்திரவதைகள் என்பனவற்றை நியாயப்படுத்த முடியாது.

......இந்நிலைமைக்கு அரச அதிகாரத்தை கொண்டிருக்கும் நபர்களே பொறுப்பானவர்கள்...

இங்கு கூறப்பட்டுள்ளவை அன்று அரசாங்கம் நடத்திய ஐ.தே.க.விற்கும் இன்று அரசாங்கம் நடாத்தும் பொ.ஐ.மு.வுக்கும் பொருத்தமானதாகும் அன்று இடம்பெற்ற பட்டலந்த சித்திரவதைக் கூடத்திற்குப் பதிலாக இன்று வடக்கு கிழக்கு இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாகும் முகாமின் பெயர்கள் முன்னுரைக்கப்படும் போது அதன் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிகழ்கால அரச தலைவர்களின் மீது வீழ்வதை தடுக்க முடியாது. தமது நிர்வாகத்தின் கீழ் யாழில் காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தற்போது அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது. இதில் 18 பேர் வழக்கு விசாரிப்பின்றி கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றனது. சித்திரவதை தொடர்பான சாட்சிகள் வேண்டிய மட்டும் உள்ளன. ஜே.வி.பி. தீவிரவாதம் போன்று அதனை இல்லாமலாக்குவது என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அதனைப் போன்று புலிகள் தீவிரவாதத்தை இல்லாமலாக்குவது என்ற பேரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் என்றாவது ஒரு நாள் வரலாற்றின் தீர்ப்புக்குள்ளாகும் என்பது உறுதி. எனினும் அச்சந்தர்ப்பத்தில் அழிவுகள் ஏற்பட்டுமுடிந்திருக்கும் ஆயுத கிளர்ச்சியோ அல்லது தீவிரவாத அமைப்போ அதனை அடக்க முயற்சிக்கும் போது எந்தவொரு அரசாங்கமும் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் தொடர்பாக ஆணைக்குழு தன் அறிக்கையில் குறிப்பிடுகின்றது. அரசியல்வாதிகளால் தவறான தகவல் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரச பாதுகாப்பு அலுவலர்கள் கடமைப்பட்டுள்ளனர் எனக்கூற முடியாதென ஆணைக்குழு அறிக்கை தெரிவித்துள்ளது. பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின்படி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என சந்தேகிக்க பல காரணங்கள் உண்டு. இந்த அரசாங்கம் பதவிக்கு வரும் போது அறிவித்த பல உறுதிமொழிகளை பதவியில் வேர்விட்டதும் மறந்து விட்டது. பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றின் அறிக்கைகளும் வெளிவந்தன. ஆனால் இதுவரை அந்த அறிக்கைகள் தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் இந்த ஆணைக்குழுக்களை நியமிக்க எது காரணமாக இருந்ததோ அதை நிறைவேற்றிக் கொண்டது. அது தான் அரசியல் ரீதியாக ஐ.தே.க.வை அம்பலப்படுத்துவதாகும். ஆனால் இந்த ஆணைகுழுக்களின் தீர்வுகளில் அரச படையினர் சம்பந்தப்பட்டிருந்தாலோ அதுவும் இன்று யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் யாராவது சம்பந்தப்பட்டிருந்தாலோ அவை நிச்சயமாக நடைமுறைக்கு போவதில்லை. வெறுமனே ஐ.தே.க. அரசியல்வாதிகள் மட்டும் சம்பந்தப்பட்டிருப்பின் அவை நடைமுறைக்கு வந்துவிடும்.

இதற்கு நல்ல உதாரணம், விஜேபால மெண்டிசின் குடியியல் உரிமைகளை பறிக்க எடுக்கப்படும் முயற்சியாகும். எவ்வாறாயினும், இந்த அறிக்கை ஐ.தே.க.வை மட்டும் அம்பலப்படுத்தவில்லை. இன்றைய அரசாங்கத்திற்கு கவனமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்வதாகவும் அமைந்துள்ளது.

ஜனநாயக விரோத வழிகளில் ஒரு அமைப்பு இயங்குகிறது என்பதற்காக அதை அடக்குவதற்கு அதே ஜனநாயக விரோத வழிமுறைகளை கடைப்பிடிப்பதை நியாயப்படுத்த முடியாது என அது அறிவித்திருக்கிறது.

சோகம் என்னவென்றால், ஆணைக்குழுவுக்கு தெரிந்தவிடயம் நமது மனித உரிமைக் குழுக்கள் பலவற்றுக்கு தெரியாமல் இருப்பது தான்!

- ரஞ்னா

# அவருக்குக் குடிப்பதற்கு சுடுநீர் கூட வழங்கப்படவில்லை!

கடந்த வருடம் 31-10-97 அன்று வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இப்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 மாத கர்ப்பிணியான சியாமளாவதி விஜயசுந்தரம் கர்ப்ப காலத்தில் கிடைக்க வேண்டிய அடிப்படை வைத்திய சிகிச்சைகள் கூட இல்லாது கடும் துயரங்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் மத்தியில் சிறையனுபவித்து வருவதாகத் தெரிய வருகிறது.

இவர் பற்றி மேலும் தெரியவருவதாவது, இவரது இரண்டு கால்களும் வீங்கியுள்ளன. இறுதியாக இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இவரைக் கவனித்த வைத்தியர் இவரை இரத்தம் மற்றும் சிறுநீர் சோதனைகட்கு உட்படுத்துமாறு பணித்திருந்தார். ஆயினும், இவரைக் கூட்டிச் சென்ற சிறைச்சாலை அதிகாரிகள் இவற்றை செய்வதற்கு அனுமதிக்கவில்லை.

ஏனைய கைதிகளைப் போலவே இவரும் இவரது எல்லாச் சாப்பாட்டு வேளைகளின் போதும் அவர்களுடன் நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டியுள்ளது. இப்போதைய அவரது உடல் நிலை காரணமாக அவரால் நீண்ட நேரம் நிற்க முடியாது இருப்பதால் இவர் தனது உணவுப் பங்கீட்டைப் பல தடவைகளில் பெற்றுக் கொள்ளாமல் விட வேண்டியேற்பட்டுள்ளது. சிறைச்சாலையில் இவரும் ஏனையோரைப் போலவே உறங்குவதற்கான இடத்தை ஏனைய கைதிகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதால், அவரால் அவருக்குத் தேவையான முழுமையான ஓய்வை எடுத்துக்கொள்ள முடிவதில்லை. இது கர்ப்பிணித் தாயொருவருக்குப் பரிந்துரைக்கப்பட்ட அளவு தூக்க நேரத்தைக் கூட அவரால் நிறைவு செய்ய முடிவதில்லை.

குடிப்பதற்கும் ஏனைய தேவைகட்குமாக வழங்கப்படும் சுடுநீர் பங்கீடு கூட அவருக்கு மறுக்கப்பட்டுள்ளது. அவரது கணவர் நிலக்கண்ணிவெடி ஒன்றின் காரணமாகத் தனது ஒரு பாதத்தை இழந்துள்ளதுடன், அவரும் கூடவே களுத்துறை புதிய தடுப்புச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சியாமளாவின் பெற்றோர்கள் வவுனியாவிலேயே இருப்பதால், அவர்களால், இவரைப் பார்க்க வந்து போக முடிவதில்லை. இவரது ஒன்றரை வயது குழந்தையொன்று வவுனியாவிலுள்ள இவரது பெற்றோர்களுடனேயே வளர்ந்து வருகிறது.

மே. 17ஆம் திகதியளவில் இவருக்கு குழந்தை பிறக்கக் கூடுமென வைத்தியர் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. ○

# முறுகலுறும் மூதூர் நிலை!

மூதூர் பிரதேசத்தில் நிலைமை வர வர முறுகலடைந்து வருகிறது. புலிகளின் பலம் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

ஒரு மாத காலத்துக்குள் மூன்று பொலிஸ் அரண்கள் தாக்கியழிக்கப்பட்டிருக்கின்றன. மார்ச் 9ம்திகதி பச்சனூர் காவல் நிலையமும், ஏப்ரல் 2ல் தோப்பூர் காவல் நிலையமும், ஏப்ரல் 14ல் 64ம்கட்டைக் காவல் நிலையமும் மிக இலகுவாக எதிர்ப்புகளின்றித் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றன. முன்னைய இரண்டும் அதிகாலை வேளையிலும், பின்னையது பட்டப் பகலிலும் தாக்கப்பட்டிருக்கின்றன.

64ம் கட்டைக் காவலரண் தாக்குதலில் ஈடுபட்டோர் இராணுவச் சீருடையில் நிதானமாகச் சென்றே தாக்கியிருப்பதாக நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். இத்தாக்குதலுக்கு வசதியாக கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் மீதும் புலிகள் ஷெல் ஏவி அவர்களது கவனத்தையும் திசை திருப்பியிருக்கிறார்கள். இயங்குவது போல் பகலில் பாவனை செய்து விட்டு இரவு வேளைகளில் பொலிஸார் பின்வாங்கி விடுவதாக சிறிது காலம் இருந்த அக்காவலரண் தற்போது மீளப் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக சாபிநகர் காவலரண் பொலிசார், ஏப்ரல் 18ம்திகதி மாலை தங்கள் பொலிஸ் முகாம் உடைமைகளை ட்ரக்டர் ஒன்றில் ஏற்றிக்கொண்டு தாயின் சிறகைத் தேடிக் குஞ்சுகள் வந்தது போல் மூதூர் பொலிஸ் நிலையத்துக்கு வந்து விட்டார்கள். ''ஏன் வந்தீர்கள்?' என்று பொறுப்பதிகாரி கேட்டதற்கு அவர்கள் பதில், ''புலிகளின் அடுத்த இலக்கு எங்கள் காவலரணாக இருக்கும் என நினைக்கிறோம். அவர்களுடன் சண்டை செய்யும் பலம் எங்களிடம் இல்லை'' என்பதாகவே இருந்தது. பொறுப்பதிகாரி இவர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாகக் கேள்வி.

இதேவேளை மூதூர் நகருக்குள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்துக்கு வந்து தாங்கள் குறிவைத்தவர்களைத் தேடியழிக்கும் சக்தியும் விடுதலைப் புலிகளிடம் முன்னர் இருந்ததை விடக் கூடுதலாக இருப்பதாகத் தெரிகிறது. இறக்கக்கண்டியில் கடற்புலிகள் கைதாவதற்குக் காரணமானவர் எனக் கருதப்படும் ஹசன் என்பவர் அவரது வீட்டில் வைத்தே 7ம்திகதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அடுத்த நாள் ஹஜ்ஜுப்பெருநாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறக்கக்கண்டியில் கடற்புலிகள் காட்டிக் கொடுக்கப்பட்டதும், 39 கிராமவாசிகள் விடுதலைப் புலிகளின் கடத்தலுக்குள்ளானதும், அவர்களில் 7 பேர் பன்னிரண்டு நாட்கள் கழித்து 14.7.97 இலும், 12 பேர் 30.9.97அன்றும், மீதி 20 பேர் 22.11.97 அன்றும் விடுதலை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மார்ச் மாத இறுதியில் நான்கு முஸ்லிம் வியாபாரிகள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டனர். இதுவும் நகருக்குள்ளேயே இடம்பெற்றது. பாதுகாப்புத் தரப்பினரின் பயமுறுத்தும் விதிகளை உதாசீனம் செய்து விட்டு கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டே அவர்களை விடுவித்தனர்.

ஏப்ரல் 14ம்திகதியன்று இரவு மூதூர் நகரில் வைத்து பஷீர் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இது விடுதலைப் புலிகளின் வேலையாக இருக்குமோ என்ற சந்தேகம் வழக்கம் போல் ஏற்பட்டிருந்த போதிலும், கொல்லப்பட்டவரின் வீடுதேடிவந்த புலிகள், தாங்கள் அக்கொலையைச் செய்யவில்லை என்று கூறியதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இதேவேளை 20ம்திகதி இரவு 7.30மணிக்கு சம்பூர்ராசா என்பவரின் கடை, இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்கானது. இத்தகைய சம்பவங்கள் மூதூர் நகரிலுள்ள தமிழர், முஸ்லிம்கள் நல்லுறவைக் குலைத்து லாபமடைய விரும்பும் தீயசக்திகளின் செயலாக இருக்குமோ என்ற அச்சம் பரவியுள்ளது.

கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் அடிக்கடி சீண்டிப் பார்க்கத் தொடங்கியிருப்பதாகக் கூறும் கிராமவாசிகள், இது ஒரு ஆபத்துக்கான தொடக்கம் என்றும் பயந்து போயிருக்கிறார்கள். மொத்தத்தில் மூதூரில் எந்தக் கணத்திலும் எதுவும் நிகழலாம் என்ற நிலையே காணப்படுகிறது.

திரிபுரன்

www.tamilarangam.net



# ஒரு பீஷ்மனின் மறைவு!

பேராசிரியர் கா. சிவத்தம்பி

சார்ள்ஸ் அபேசேகரா மறைந்து மாதம் ஒன்றாகப் போகிறது.

கொழும்பில் உணரப்படும் நெருக்கடிகளினூடே அரசியற் போலிகளும், போலி அரசியலும் வட்டாடும் சந்தடிகளினிடையே ''சாளி''யின் மறைவு உணரப்பட வேண்டிய அளவுக்கு உணரப்படுகின்றதா என்பது கேள்விக்குரிய ஒரு விடயம் தான்.

இலங்கையின் ''உத்தியோகபூர்வ பேச்சாளர்களின்'' மனங்கள் உணர்ந்துள்ளனவோ என்னவோ சார்ள்ஸ் அபேசேகரா என்ற ஒரு தனிமனிதரின் மறைவு இலங்கை இனப் பிரச்சினையின் நியாயமான தீர்வுக்கான பிரயத்தனங்களின் மீது விழுந்த ஒரு பாரிய அடி என்பது மறுக்க முடியாத உண்மை.

''சாளி'' என்று நண்பர்களால், உரிமையுடனும், அந்நியோந்நியத்துடனும் அழைக்கப்பட்ட இந்த மனிதனின் மரணம் மானுடத்தின் ஒவ்வொரு நரம்பிலும் தெரிகிறது. சாளியின் மறைவினால் மானுடம் பலவீனப்பட்டு நிற்கிறது.

ஏறத்தாழ இருபத்தைந்து வருடகால நண்பன் என்கின்ற வகையில், இந்த மறைவில், மரணத்தின் சூறையாடலில், அந்த மனிதத்துவத்தின் இழப்பே முதலில் தெரிகிறது.

எத்தகைய பெருமனிதன்!

மாத்தளையின் பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். மிகச்சாதாரண மனிதனாகவே வாழ்ந்தார். அவர் எளிமையில் நேர்மை இருந்தது.

உபரி எனத் தனக்கு எதுவுமே வேண்டாத பிறவி. நண்பர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் (தான்) ''நினைத்து'' உதவுபவர்.

சாளியின் சித்தம் கலாரசனையில் தோய்ந்தது. உலகின் சிந்தனை யாவற்றையும் ரசிக்கும் மன பக்குவம் அவரிடம் இருந்தது.

வெப்பம மிக்க விவாதங்களிடையே சாளியின் குறிப்புரைகள் நெருப்பு அணைக்கும்.

சுற்றிச் சுழன்று தறிகெட்டு ஓடிய வாதங்களின் சுருக்கத்தைச் சாளி தான் எழுதுவார். சாளி எழுதினால், பிளவுகளூடே தொக்கி நின்ற இணைவு தெரியும். முன்னேற்றத்துக்கான ஒரு தடயம் விழும்.

அந்த எழுத்து வன்மை வன்மையல்ல. அது ஒரு லாவண்யம். நண்பர்கள் எல்லோருக்கும் தெரிந்தது, பயன்படுத்தியது. தன் பெயரில் நூல் எதுவும் தனியே எழுதாத சாளி (பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். கட்டுரைகளை எழுதியுள்ளார்) தன் நண்பர்களின் நூல்களின் நடைக்குள் இலை மறை காய் (அல்ல, தனி) ஆக இருப்பார். அவ்வந்நூல்களில் சார்ள்ஸ் அபேசேகராவுக்கு கூறப்பட்டுள்ள நன்றிகள் இந்த உண்மைக்குச் சாட்சி. தன் பிள்ளைகளை நண்பர்கள் போல் வளர்த்தவர். நண்பர்கள் நலனை தகப்பன் போல் பார்த்தவர்.

எஸ்.எஸ்.ஏ. எனப்படும் இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். கருத்து நிலைதெளிவுள்ள இடதுசாரிச் சிந்தனையாளர்.

எதைச் சொல்வது? எதை விடுவது?

சாளி என்ற மகா மனிதன் இத்தகைய விவரிப்புகளுக்கு அப்பாற்பட்டவன்.

கூடிப் பழகியவர்கள் எவருக்கும் இந்த மனித இழப்புத் தான் முதலில் படும்.

ஆனால், இந்த மனிதனின் வழலாற்றுப் பெறுமதி, இந்த மனிதத்துவத்தை ஓர் அரசியல் நடைமுறையாக நடத்த எடுத்த முயற்சிகளிலேயே - நியாயமான நேர்மையான முயற்சிகளிலேயே - தெரிந்தது.

தமிழ் - சிங்களப் பிரச்சினையை இனச்சமத்துவத்தின் அடிப்படையிலேயே தீர்க்க வேண்டும் என்பதிலேயே சாளி நிலை குலையாது நின்றார். சிறுபான்மை, பெரும்பான்மை உறவு சமத்துவத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பது சாளியின் வாதம்.

1994ல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று முழுதாக நம்பினார். அந்த மாற்றம் ஏற்படுவதற்காக முழு மூச்சாகப் பாடுபட்டார். சாளியின் எழுத்துக்கள் மாற்றத்துக்கான அறவலுவை வழங்கின.

1994ல் பேச்சுவார்த்தைகள் எத்துணை மென்மையான தடத்தில் நடத்தப்பட்டது என்பது சாளிக்குத் தெரியும். ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் செயல்நிலைப் பிரயோகங்கள் பற்றி அறிய சாளி அந்த நாட்களில் யாழ்ப்பாணம் வந்தார். சாளியின் ஆழுமை பற்றி இருந்த பரிச்சயம் காரணமாகப் பலர் தமது நெஞ்சங்களைத் திறந்து பேசினர்.

பேச்சுவார்த்தையின் இறுதிக்கட்டத்தில் (இறுதிச் சந்திப்பில் என்று நம்புகிறேன்) சாளி அரச பக்க பேச்சாளராக, அந்தக் குழுவில் அங்கத்தவராக வந்தார்.

எப்படியும் பேச்சுவார்த்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆதங்கம் அவருக்கு இருந்தது.

அதுவரை நடுநிலை வகித்த ஒருவர். அப்படி வந்திருக்கலாமா என்ற வாதப்பிரதிவாதம் பின்னர் எழுந்தது. சாளியின் ஆளுமையில் உடைவு வரக்கூடாதே என்பதற்காக, நான் கூட சாளியுடன் நீண்ட நேரம் உரையாடினேன்.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது என்பது வரலாறு.

ஆனால், அத்துடன் சாளியின் ஆளுமை பற்றிய கணிப்பில் உடைவு ஏற்படவில்லை.


இவற்றைப் பற்றி யோசிக்கும் பொழுது தான் சாளியின் 'ரிஷி'த்துவம் தெரிகிறது.

இனங்களுக்கிடையே, நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவர் சாளி.

அந்தப் பதவிக்கு அவர் இருக்கும் வரையில், (உண்மையில்) வேறு எவருக்குமே அதன் தலைவராக இருப்பதற்கான தகுதி இருந்திருக்க முடியாது.

அந்த இயக்கத்தினுள்ளும் நெருக்குவாரங்களும், அமுக்கங்களும் இல்லாமல் போகவில்லை. வந்த நெருப்பையெல்லாம் தான் ''உண்டு கொண்ட'' அவர், தனது நடைமுறைகளின் தண்ணளியை என்றும் இழக்கவில்லை.

சாளி புதிய அரசினால், அரச அலுவல்கள் மொழிகளுக்கான ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். தமிழ் மொழி அமுலாக்கம் பற்றிய பிரச்சினைகளை நியாயப்படி தீர்ப்பதற்கான முயற்சிகள் பலவற்றை எடுத்தார். →20



# சார்ளிக்குப் பிரியாவிடை!

- சேரன்

சார்ள்ஸ் அபேசேகரா காலமாகி விட்டார் என்பது ஒரு வெறும் தகவலாக இலங்கையின் தினசரிப் பத்திரிகைகளிலும் பெருமளவு விற்பனையாகும் வார இதழ்களிலும் ஒரு மூலையிலே பிரசுரிக்கப்பட்டிருந்தது, என்பது இந்தத் தொடர்பூடகங்களின் அவல நிலையைச் சுட்டுவதற்குப் போதுமானதாகும்.

இருபது வருடங்களாக சமூக விஞ்ஞானங்கள், சமூக நீதி, மனித உரிமைகள், இனங்களுக்கிடையே சமத்துவம் போன்ற பல தளங்களில் அயராது செயலாற்றி வந்த ஒரு உயர்ந்த மனிதர் தனது 72வது வயதில் திடீரென இறந்து போனமை எமக்கிடையே ஒரு பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

சார்ள்ஸ் ஒரு நல்ல நண்பர். இங்கிதமான மனிதர்; பண்பாட்டில் ஊறிய சிந்தனையாளர். எல்லாவற்றுக்கும் மேலாக எல்லோரையும் அரவணைத்துச் செல்கிற பொறுமையாளர்.

ஆனந்தக் கல்லூரியிலும் கொழும்புப் பல்கலைக் கழத்திலும் பட்டம் பெற்றிருந்த சார்ள்ஸ் ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். 1977இல் அரச சேவையிலிருந்து இளைப்பாறுகிற போது அவர் உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர்.

குறுகிய காலம் பிதா திஸ்ஸ பாலசூரியவின் சமய, சமூக நடுநிலையத்தில் பணிபுரிந்த பின்னர் இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த சமூக ஆய்வு நிறுவனமான சமூக விஞ்ஞானிகள் சங்கத்தை குமாரி ஜயவர்த்தன, கலாநிதி கைலாசபதி, நியூட்டன் குணசிங்க, எஸ்.பீ.டி. சில்வா ஆகியோருடன் இணைந்து நிறுவினார். பேரினவாதத்துக்கு எதிரான வரன்முறையான சமூக வரலாற்று ஆய்வைத் தீர்க்கமானதும், சிறியதுமான முறையில் வளர்த்தெடுத்ததில் சமூக விஞ்ஞானிகள் சங்கம் ஆற்றி வந்த பணி ஒப்புவமை அற்றதாகும்.

சமூக விஞ்ஞானிகள் சங்கத்தூடாக அவர் தொகுத்து வெளியிட்ட நூல்கள் தமிழிலும், சிங்களத்திலும் வெளியாகி ஒரு புதிய இளைய தலைமுறையை ஆர்வமான ஈடுபாட்டோடு சமூக விஞ்ஞானங்களை நோக்கி ஆற்றுப் படுத்தியது.

புலமையும், சமூக நீதிக்கான போராட்டமும், மார்க்ஸியமும் வேறு வேறாகப் பிரிந்திருந்ததில்லை என்பதற்கு சமூக விஞ்ஞானிகள் சங்கமும் சார்ள்ஸும் நல்ல உதாரணங்கள்.

மோசமடைந்து வந்த இனத்துவ உறவுகள் 1983 ஜூலையில் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிடப்பட்ட படுகொலைகளாக மாற்றம் பெற்ற போது சார்ள்ஸ் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அன்றிலிருந்து இறக்கும் வரை பல்வேறு நெருக்கடிகள், விமர்சனங்கள், குழப்பங்கள் மத்தியிலும் தளராது தலைவராகப் பணியாற்றினார். ''சரிநிகர்'' பத்திரிகை வெளிவருவதிலும் சார்ள்ஸ் முக்கியமான பங்காற்றினார்.

சார்ள்ஸ் அபேசேகரவின் கடப்பாடும், இனத்துவ சமத்துவத்துக்கான அவரது விட்டுக்கொடுப்பற்ற பங்களிப்பும், சிங்களப் பேரினவாதக் கருத்தியல் மற்றும் சக்திகளுக்கெதிரான அவரது சளைக்காத போராட்டமும், சிங்களப் புத்திசீவிகளில் ஒரு சாராரையும், தீவிரவாத சிங்கள பௌத்தர்களையும் அவருக்கு எதிரியாக்கிற்று. 'திவயின', The Island போன்ற பத்திரிகைகளிலும் ஐ.தே.க பத்திரிகைகளிலும் அவருக்கு எதிரான மோசமான கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. நளின் டி சில்வா, குணதாச அமரசேகரா, எச்.எல்.டி மகிந்தபால தயான் ஜயதிலக்கா (முன்னாள் லங்கா கார்டியன் ஆசிரியர்) போன்றோர் சிங்கள இனவாதத் தளத்தில் நின்று சார்ள்ஸ் அபேசேகரவை வன்மையாகத் தாக்கி வந்தனர்.

இவற்றையெல்லாம் ஒரு மெல்லிய புன்னகையோடும் தன்னுடைய சுருட்டுப்புகையோடும் உரிய முறையில் உதாசீனம் செய்து விட்டார் சார்ள்ஸ்.

ஒரு பலமான சிவில் சமூகமே உண்மையான ஜனநாயகத்தின் அடித்தளம் என்பதும் மாற்றுக் கருத்துக்களுக்கான மதிப்பும் இடமும் இல்லாமல் சிவில் சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியாது என்பதுமே சாள்ஸின் அடிப்படையான கருத்தாக இருந்தது. அவருடைய எல்லா நடவடிக்கைகளும் இதனை ஒட்டியதாகவும் வலுப்படுத்துவதாகவுமே அமைந்தன. மனித உரிமைகளுக்கான மதிப்பு, மனித உரிமைகள் பேணப்பட வேண்டும். அதற்காகப் போராட வேண்டும் என்ற அவருடைய நிலைப்பாடு, சிவில் சமூகத்தில் சாத்தியப்பாடு, வலுப்பாடு என்பவற்றின் இன்றியமையாமையிலிருந்தே எழுந்ததாகும்.

அவருடைய இந்த ஈடுபாட்டுக்கும், கடப்பாட்டுக்கும் இன்னொரு முக்கியமான தளமும் இருந்தது. அதுதான் பண்பாட்டு அரசியல் மற்றும் கலை, இலக்கியங்கள் தொடர்பான அவரது ஆளுமை.

சார்ள்ஸ் அபேசேகர உண்மையில் தனது கலைத்துவத்தை முற்று முழுதாக சமூக வாழ்விற்கும் தன்னுடைய வாழ்க்கை முறைக்கும் அர்ப்பணித்தவர். படைப்பாளியாகப் பிரதானம் பெறுவதை விடுத்துச் சுவைஞனாகவும், அதேநேரம் அச்சுவைப்பு நுண்ணுணர்வூடாகச் சமூகநீதி, அரசியல் போராட்டங்கள் ஆகிய தளங்களுக்கு ஈர்க்கப்பட்டவர். இந்த அம்சம் தான் அவர் காலத்தைய பல புத்திசீவிகள் அறிஞர்களிடமிருந்து அவரை ஒரு உன்னதமான நிலைக்கு உயர்த்தியது. நல்ல சினிமா, நல்ல இலக்கியம், நல்ல சங்கீதம், நல்ல நாடகம், ஆழ்ந்த வாசிப்பு இவற்றை அளவற்று நேசித்தவர் சார்ள்ஸ்.

ɹ94இல் சந்திரிகா அரசு பதவிக்கு வந்த பிற்பாடு விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை ஒன்றுக்கு யாழ்ப்பாணம் சென்றவர் சார்ள்ஸ். சமாதானத்தைக் கொண்டு வருவதில் எந்த வழியாயினும் சரி என்ற ஒரு மனிதாபிமான நிலைப்பாட்டில் அவர் அரசு தரப்பில் தூதுசென்றார் என்றாலும் அவருடைய சுயாதீனமான நடுநிலைப்பாடான கடப்பாடுக்கு அது பங்கம் விளைவித்து விட்டது என்ற எங்களுடையு குற்றச்சாட்டை அவர் பின்னர் ஏற்றுக்கொண்டு மனம் வருந்தினார்.

சந்திரிகா அரசு மற்றைய இலங்கை அரசுகளைப் போலவே சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் ஒழிப்பதில் எவ்விதமான தயக்கத்தையும் காட்ட மாட்டாது என்பதையும், இவ்வரசின் மீது தான் வைத்திருந்த கடைசிக்கைப்பிடியளவு நம்பிக்கையையும் இறப்பதற்குப் பல மாதங்கள் முன்பாவே சார்ள்ஸ் காற்றில் வீசிவிட்டார்.

அவருடன் நடாத்திய நீண்ட உரையாடல்களும், ஜெனிவாவிலும், கொழும்பிலும் தொறன்ரோவிலும் அவருடன் இணைந்து பார்க்க முடிந்த பல திரைப்படங்கள், நாடகங்களும் அவற்றுக்குப் பின்பான சுவாரசியமான வாதங்களும் அவருடனான கருத்தியல் சமர்களும் என்றென்றும் நினைவில் நிற்கும் என்று எழுதுவது ஒரு சுருக்கமான வசனம். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# எழுப்பப்படாத கேள்விகளும் அளிக்கப்படாத பதில்களும்

# பொத்துவில் தொகுதி முஸ்லிம் பிரதிநிதித்துவம்: யாரை நம்பி...?

ஸிராஜ் மஷ்ஹூர்



**"அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதன் மூலம் சிங்களவர்களையே தெரிவு செய்கிறார்கள் என்று தேர்தல் மேடைகளில் பிரச்சாரம் செய்கின்ற அதே ஸ்ரீ.ல.மு.கா. தான் பொத்துவில் தொகுதி முஸ்லிம்களின் நியாயமான உரிமையை மறுத்துவிட்டு மற்றொரு சிங்களவரான அசித்த பெரேராவை எம்.பி.யாக்கியது. இந்த முரண் நகையான விடயத்துக்கு ஸ்ரீ.ல.மு.கா. என்ன நியாயம் சொல்லப்போகிறது?"**

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் தொடர்ந்தும் சிங்களவர்களையே பாராளுமன்ற அங்கத்தவர்களாகத் தெரிவு செய்கின்றனர் என முஸ்லிம் காங்கிரஸ் அடிக்கடி குற்றம் சுமத்தி வருகின்றது. இது முற்று முழுக்க உண்மையான ஒரு கருத்து: 1994 பொதுத் தேர்தல் முடிவுகளின் படி ஐ.தே.க. அம்பாறை மாவட்டத்தில் 78,767 வாக்குகளையும், ஸ்ரீ.ல.மு.கா. 75,092 வாக்குகளையும் பெற்றன. இதன்படி 3675 வாக்குகளை ஐ.தே.க. கூடுதலாகப் பெற்றது. இந்த 3675 வாக்குகளும் முஸ்லிம் வாக்குகளாக இருந்தால் அதனது அரைவாசியான 1838 வாக்குகள் மட்டும் ஸ்ரீ.ல.மு.கா வுக்குக் கிடைத்திருந்தால் அது 3 ஆசனங்களைப் பெற்றிருக்கும். ஆனால் ஒரே ஒரு சிங்களப் பெரும்பான்மைத் தொகுதியான அம்பாறையில் ஐ.தே.க பெற்ற மொத்த வாக்குகள் 42,100 மட்டுமே. ஏனைய 3 முஸ்லிம் பெரும்பான்மைத் தொகுதிகளிலிருந்தும் ஐ.தே.க. மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 34,222 ஆகும். இதில் சிங்கள, தமிழ், வாக்குகளும் கணிசமான அளவு உள்ளன என்ற போதிலும், மிகப்பெரும்பாலான வாக்குகள் முஸ்லிம் வாக்குகளே.

தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறையின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தொகுதிகளில் இருந்து 3 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், அம்பாறைத் தொகுதியில் இருந்து ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும், இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் இருந்து ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும், தெரிவு செய்யப்படுவர். ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக அம்பாறை மாவட்டத்திலிருந்து தொடர்ச்சியாக இரு பாராளுமன்றங்களில் பொத்துவில் தொகுதி முஸ்லிம் பிரதிநிதித்துவம் அற்றுப் போயுள்ளது.

1989 பொதுத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரசில் இருந்து அஷ்ரஃப்பும், ஐ.தே.கவிலிருந்து தயாரத்ன, பக்மீவெல, கலப்பதி ஆகியோரும், டெலோவிலிருந்து திவ்வியநாதனும் எம்.பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அஷ்ரஃப் கல்முனைத் தொகுதியைச் சேர்ந்தவர் இதன்படி பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்ய எம்.பிக்கள் இல்லாத நிலை தோன்றும் அபாயம் ஏற்பட்டது. எனினும் அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள், கல்முனையைச் சேர்ந்த மன்சூர், சம்மாந்துறையைச் சேர்ந்த மஜீத் ஆகியோரைத் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமித்தார். இதன்படி கல்முனைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த இரு முஸ்லிம்களும் சம்மாந்துறைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்த ஒரு முஸ்லிமும் இருந்தனர். ஆனால் பொத்துவில் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு முஸ்லிமும் இருக்கவில்லை.

1989 பொதுத்தேர்தலில் மு.கா.வுக்கு மிக அதிகளவு வாக்களித்து ஒரு எம்.பி கிடைக்க வழிவகுத்தவர்கள் பொத்துவில் தொகுதி மக்களே. அஷ்ரஃப்புக்கு வாக்களிக்காமல் அப்போதைய முஸ்லிம் காங்கிரசின் தவிசாளராக இருந்த சேகு இஸ்ஸதீனுக்கு மட்டும் பொத்துவில் தொகுதி மக்கள் வாக்களித்திருந்தால் அஷ்ரஃப் எம்.பி யாகி இருக்க முடியாது என்பது பகிரங்க இரகசியமாகும். ஏனெனில் சம்மாந்துறை , கல்முனை ஆகிய தொகுதிகளில் அஷ்ரஃப்புக்கு மிகச் சொற்பளவு வாக்குகளே கிடைத்தன. அப்போதைய தேசியப்பட்டியலின் மூலம் ஸ்ரீ.ல.மு.கா.வுக்கு ஒரு ஆசனம் கிடைத்தது. அதற்காவது ஸ்ரீ.ல.மு.கா. பொத்துவில் தொகுதியிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யவில்லை. புஹார்த்தின் ஹாஜியாரே அதற்குத் தெரிவு செய்யப்பட்டார். ஸ்ரீ.ல.மு.கா.வின் வளர்ச்சிக்கு அவர் நிறைய நிதியுதவி செய்தார். எனவே அவரைக் கட்டாயமாக எம்.பி. ஆக்க வேண்டும் என அப்போது நியாயம் கூறப்பட்டது.

1994 பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற வாக்குகளின்படி (பார்க்க அட்டவணை-1) ஐ.தே.க 3 ஆசனங்களையும், ஸ்ரீ.ல.மு.கா. 2 ஆசனங்களையும் பொ.ஐ.மு. ஒரு ஆசனத்தையும் பெற்றன. இம்முறை ஒரு முஸ்லிம் ஆசனமும், ஒரு தமிழ் ஆசனமும் பறிபோயின. இவ்விரு ஆசனங்களும் இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவில் தொகுதியிலிருந்தே இழக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் ஒன்பதாம் பத்தாம் பாராளுமன்றங்களில் தொடர்ச்சியாக இருமுறை பொத்துவில் தொகுதி முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்துவம் இழக்கப்பட்டது.

1994இல் முழு இலங்கையிலுமே ஸ்ரீ.ல.மு.கா.வுக்கு ஆகக் கூடிய அளவு வாக்களை அளித்தவர்கள் பொத்துவில் தொகுதி முஸ்லிம்களே. (பார்க்க அட்டவணை -2) 1994இலும் ஸ்ரீ.ல.மு.கா.வுக்கு தேசியப் பட்டியல் மூலம் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தத. தேசியப் பட்டியலில் ஸ்ரீ.ல.மு.கா.வுக்குக் கிடைத்து. 1,43,307 வாக்குகளில் கூடியளவு வாக்குகளை அளித்தவர்கள் பொத்துவில் தொகுதி முஸ்லிம்களே. (28,851 வாக்குகள்) தார்மீக அடிப்படையிலாவது இழக்கப்பட்ட பொத்துவில் தொகுதி முஸ்லிம்களது நியாயமான உரிமையான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இத்தேசியப் பட்டியல் மூலமாவது ஸ்ரீ.ல.மு.கா. ஈடுசெய்திருக்கலாம். தேர்தல் காலத்தில் பொத்துவில்த் தொகுதி ஆசனம் இழக்கப்பட்டால் தேசியப்பட்டியல் மூலம் அது வழங்கப்படும் என ஸ்ரீ.ல.மு.கா. தரப்பால் கூறப்பட்டது.

ஆனால் எல்லோரையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையில் லிபரல் கட்சியைச் சேர்ந்த அசித்த பெரேரா ஸ்ரீ.ல.மு.கா.வின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்கப்பட்டார். ஸ்ரீ.ல.மு.கா., பொ.ஐ.முவுடன் செய்து கொண்ட தேர்தல் உடன்பாட்டின்படி, பொ.ஐ.மு. தேசியப்பட்டியலிலிருந்த எம்.எம். ஸுஹைர், குழுக்களின் பிரதித்தலைவரான ரவூப் ஹகிம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதிலாவது ஒருவரை பொத்துவில் தொகுதி சார்பாக நியமிக்காமல் ஸ்ரீ.ல.மு.கா. வேண்டுமென்றே நிராகரித்து விட்டது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதன் மூலம் சிங்களவர்களையே தெரிவுசெய்கிறார்கள் என்று தேர்தல் மேடைகளில் பிரச்சாரம் செய்கின்ற அதே ஸ்ரீ.ல.மு.கா. தான் பொத்துவில் தொகுதி முஸ்லிம்களின் நியாயமான உரிமையை மறுத்துவிட்டு மற்றொரு சிங்களவரான அசித்த பெரேராவை எம்.பி.யாக்கியது. இந்த முரண் நகையான விடயத்துக்கு ஸ்ரீ.ல.மு.கா. என்ன நியாயம் சொல்லப்போகிறது?

இது இவ்வாறிருக்க, இந்த அசித்த பெரேரா பாராளுமன்றத்தில் இதுவரை உருப்படியாக என்ன பேசிக் கிழித்திருக்கிறார்? ஆகக்குறைந்தது ஸ்ரீ.ல.மு.கா. பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் பற்றி ஒரு வார்த்தையாவது அவர் பேசியிருக்கிறாரா? இங்கு அசித்த பெரேராவைக்குற்றம் சுமத்திப் பிரயோசனம் இல்லை. இதற்கான முழுப்பொறுப்பையும் ஸ்ரீ.ல.மு.கா.வும் அதனது தலைமைத்துவமுமே ஏற்க வேண்டும்.

முஸ்லிம்களது காதில் பூச்சுற்றுவது போல் அசித்த பெரேரா இஸ்லாதிற்கு மதம் மாறிவிட்டார் என்ற ஒரு கட்டுக்கதையையும் ஸ்ரீ.ல.மு.கா. அவிழ்த்து விட்டது. அவரது பெயரை அப்துல் அஸிஸ் என மாற்றி விட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

அசித்த பெரேராவுக்கு 'கத்னா' செய்து விட்டதாகவும் மு.கா.ஆதரவாளர்கள் அனல் பறக்கப்பேசினார்கள்.

லிபரல் கட்சித் தலைவராக அப்போதிருந்த சானக அமரதுங்கவுக்கு தான் பல இஸ்லாமிய நூல்களை வாங்கிக் கொடுத்துள்ளதாகவும், அவர் விரைவில் இஸ்லாத்துக்கு வந்து விடுவார் எனவும் அஷ்ரஃப் பொதுக் கூட்டங்களில் பேசினார். சந்திரிகா கூட குர்ஆன் மொழி பெயர்ப்பை வாசித்துக் கொண்டிருப்பதாகவும். கதை விட்டார். இந்தப் பூச்சுற்றல்கள் எல்லாம் அப்போதே மிக வேடிக்கையாக எடுத்துக்கொள்ளப்பட்டதையும் இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமாக அமையும்.

அசித்த பெரேரா பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னணி குறித்து பலத்த சந்தேகங்கள் உள்ளன. பலரும் கருதுவது போல் அதில் பணம் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்களும் உள்ளன. எது எப்படியோ அஷ்ரஃப் சொல்வது போல் பாராளுமன்றக் கதிரைக்கு பாரமாகவே அசித்த பெரேரா இருக்கின்றார்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு அஷ்ரஃப் சூறாவளி சுற்றுப் பிரயாணம் செய்தபோதும் கூட சிங்களவர்களை எம்.பி.யாக்காதீர்கள் என்ற பழைய புராணமே பாடப்பட்டது. இவ்வாறு கேட்பதற்கு மு.கா.வுக்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது? 1989இலிருந்து 12 வருடங்களாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவ உரிமையை இழந்திருக்கும் பொத்துவில் தொகுதி முஸ்லிம்களை அரசியல் அநாதைகளாக மாற்றுவதே மு.கா.வின் குறிக்கோளா?

**அட்டவணை -1**

**அம்பாறை மாவட்டத் தேர்தல் முடிவுகள் - 1994**

| தொகுதி | ஐ.தே.க | மு.கா. | பொ.ஐ.மு. | த.வி.கூ. |
|---|---|---|---|---|
| அம்பாறை | 42,100 | 72 | 42,819 | 65 |
| சம்மாந்துறை | 9,874 | 21,997 | 889 | 4,355 |
| கல்முனை | 7,631 | 22,653 | 584 | 6,294 |
| பொத்துவில் | 16,717 | 28,851 | 7,959 | 13,532 |
| தபால் வாக்குகள் | 2,445 | 1,519 | 1,899 | 280 |
| மொத்தம் | 78,767 | 75,092 | 54,150 | 24,526 |
| வீகிதம் | 32.7% | 31.2% | 22.5% | 10.2% |

**அட்டவணை -2**

**தொகுதி அடிப்படையில் ஸ்ரீ.ல.மு.கா. பெற்ற வாக்குகள்**

| | | |
|---|---|---|
| 01. பொத்துவில் | - | 28,851 |
| 02. கல்முனை | - | 22,653 |
| 03. சம்மாந்துறை | - | 21,997 |
| 04. மட்டக்களப்பு | - | 19,368 |
| 05. மூதூர் | - | 18,677 |
| 06. கல்குடா | - | 11,179 |
| 07. மன்னார் | - | 5,785 |
| 08. திருகோணமலை | - | 5,710 |
| 09.சேருவிலை | - | 1,870 |
| 10. வவுனியா | - | 1,412 |
| 11. முல்லைத்தீவு | - | 906 |
| தேசியப்பட்டியல் | - | 1,43,307 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் 27வது நினைவு

# அன்றைய புரட்சியாளர்கள் இன்று...

இலங்கையின் வரலாற்றில் சோஷலிசத்தில் நம்பிக்கை கொண்ட இளைஞர்களின் ஆயுதந் தாங்கிய முதற் புரட்சி 1971 இல் நடந்தேறியது. நாடு முழுவதும் ஒரே நேரத்தில் திடரென்று தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்த அன்றைய சிறிமா அரசாங்கம் கடும் கலக்கத்துக்குள்ளாகியிருந்தது. அமெரிக்கா, எகிப்து, ரஷ்யா, சீனா, இந்தியா உட்பட பல நாடுகளின் இராணுவ உதவிகளோடு கொடூரமாக இதனை அடக்கியது. ஏறத்தாழ 15 ஆயிரம் தொடக்கம் 20ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் கொல்லப்பட்டனர். 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் சிறைச்சாலைகளுக்கும், தடுப்பு முகாம்களுக்கும், வதைமுகாம்களுக்கும் அனுப்பப்பட்டனர்.

இதனை விசாரிக்கவென்று 1971 மே 17இல் அமைக்கப்பட்ட விசேட குற்றவியல் ஆணைக்குழுவின் முன் முக்கிய சந்தேக நபர்கள் 41 பேரின் மீது விசாரணை நடத்தப்பட்டது. 1974 டிசம்பர் வரை விசாரணை நடத்தப்பட்டது. 1977 பெப்ரவரியில் இதுகுறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த 41 பேரில் 3 பேர் ஜே.வி.பி.யைச் சேர்ந்தவர்களல்லர். விராஜ் பிரேம லக்பிரிய பெர்ணாண்டோ எனும் 17வது சந்தேக நபர் வெறும் ஆதரவாளராக இருந்து வந்தவர். வழக்கிலிருந்து விடுதலையான பின்னர் இன்று தனது பொறியியல் தொழிலை செய்து வருகிறார். 20ஆவது சந்தேக நபரான செமுவேல் டயஸ் பண்டாரநாயக்க விடுதலையானதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டார். 77ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர் 1989ஆம் ஆண்டு ஸ்ரீ.ல.சு.க.விலிருந்து ஆரியபுலேகொடவுடன் விலகிக் கொண்டார். 24ஆவது சந்தேக நபரான சுசில் சிறிவர்தன ஆதரவாளராக மட்டுமே இருந்தவர். விடுதலையானதும் மாவத்தை எனும் மாற்று சஞ்சிகைக்குழுவில் பணியாற்றினார். பிற்காலங்களில் வீடமைப்பு திணைக்களத்தில் உயர் பதவி வகித்து வந்த இவர் பின்னர் பிரேமதாசவின் ஜனசவிய ஆணையாளராக நியமிக்கப்பட்டார். பிரேமதாசவின் மரணத்தின் பின் அப்பதவியிலிருந்து விலத்தப்பட்டார்.

நான்கு சந்தேக நபர்கள் 71இல் கொல்லப்பட்டு விட்டனர். 33வது சந்தேக நபர் விஜேசேன வித்தாரண (சனத்) கட்சியின் ஸ்தாபக உறுப்பினர். அரசியல் குழுவைச் சேர்ந்த இவர் எல்பிட்டியவில் நடத்திய தாக்குதலின் போது சுட்டுக் கொல்லப்பட்டார். 34வது சந்தேக நபரான சுசில் விக்கிரம மாத்தறை கோட்டையைத் தாக்கிக்கொண்டிருக்கையில் கொல்லப்பட்டார். 35வது சந்தேக நபரான சரத் விஜேசிங்க கேகாலை கெடியமுல்லையில் நடந்த தாக்குதலின் போது கொல்லப்பட்டார். அத்தாக்குதலுக்குப் பொறுப்பு வகித்தவரும் இவரே. 36வது சந்தேக நபரான மில்டன் கடவத்தை பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது பொலிஸாரினால் கொல்லப்பட்டார். அப்போது இவருக்கு வயது 20 கூட இல்லை. 4வது சந்தேக நபரான ஜே.ஏ.ஜீ.ஜயக்கொடி விடுதலை செய்யப்பட்டார். 37, 38, 39வது சந்தேக நபர்கள் முறையே டபிள்யூ.டி.கருணாரத்ன, ஹேவ பட்டகே பிரேமலால், நயணானந்த விஜேதிலக்க ஆகியோர் காலம் பிந்தியே கைது செய்யப்பட்டனர். 1972 யூலை 22ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போது ஆணைக்குழுவின் முன்னிலையில் 32 பேர் மீது மட்டுமே விசாரணைகள் அரம்பமானது. இவர்களில் பலரை பொலிஸார் வலுக் கட்டாயமாக குற்றத்தை ஒப்புக்கொள்ள நிர்ப்பந்தித்தனர். ஆனால் அது சாத்தியப்படவில்லை. தண்டனை பெற்று சிறைத் தண்டனை அனுபவித்து வந்த போது சிறைக்குள் நடந்த கருத்து மோதல் காரணமாக விரக்தியுற்றும், சோர்வடைந்தும், நம்பிக்கையிழந்த நிலையிலும் பலர் ஜே.வி.பி.யை விட்டு விலகினர். அவ்வாறு விலகிய சிலர் முதலாளித்துவ கட்சிகளுடன் இணைந்து கொண்டனர். சிலர் தங்களது வர்த்தக, வியாபார நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். சிலர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குப் பலியாகினர். 1971ஆம் ஆண்டு ஏப்ரல் புரட்சியின் 27ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அதில் ஈடுபட்டவர்கள் குறிப்பாக அந்த 41 பேரில் இன்று எம்மால் தொடர்பு கொள்ளக்கூடியவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்? அவர்களின் அன்றைய பாத்திரமென்ன? அவர்களின் இன்றைய கருத்துக்கள் என்ன? என்பதுகுறித்து தொடர்ச்சியான நேர்காணலை காணும் நோக்கில் இந்த இதழில் லயனல் போபகேயின் நேர்காணல் வெளியாகிறது.

## லயனல் போபகே

'லய்யா" என அன்புடன் சக தோழர்களால் அழைப்பட்ட லயனல் போபகே. ஜே.வி.பி. இயக்கத்தின் முன்னை நாள் பொதுச் செயலாளர். அண்மையில் இலங்கை வந்திருந்தார். ஏப்ரல் 1971 கிளர்ச்சியின் நினைவாக இங்கு அவரது நேர்காணல் பிரசுரமாகிறது. 71 கிளர்ச்சியில் விசேட குற்றவியல் ஆணைக்குழுவினால் குற்றஞ் சாட்டப்பட்ட 41 சந்தேக நபர்களில் 2வது சந்தேக நபர் போபகே. பல்வேறு நூல்களில் வெளிவந்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு அவர் பற்றிய அறிமுகத்தை இங்கு தருகிறோம்.

வெலிகமயைச் சேர்ந்த கடை உரிமையாளரின் மகன். தகப்பனார் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். குடும்பத்தில் உடன் பிறப்புகள் 5 பேர். வெலிகம சித்தார்த்த வித்தியாலயத்தில் சாதாரண தர கல்வியைப் பயின்ற இவர் உயர் தரக் கல்வியை (விஞ்ஞானம்) மாத்தறை ராகுல வித்தியாலயத்திலும், காலியில் ரிச்மன்ட் வித்தியாலயத்திலும் பயின்றார். இரு வாரங்களளவில் தெஹிவளை மக்கள் வங்கியில் தொழில் புரிந்து விட்டு, அம்பாறை ஹாடி நிறுவனத்தில் இயந்திரவியல் பயிற்சி பெற்றார். 1965ஆம் ஆண்டு போராதனைப் பல்கலைக்கழத்தில் பொறியியல் பீடத்தில் அனுமதி கிடைத்தது. இதன் பின் அரச உலோகப் பொருட் கூட்டுத்தாபனத்திலும் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்திலும் தொழில் புரிந்தார். பின்னர் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்திலும், எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திலும் தொழில் புரிந்தார். இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தில் அதிகாரியாகவும் இருந்தார். சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிய விஜேவீர தலைமையிலான இளைஞர் அணியில் இவரும் ஒருவர். ஜே.வி.பி. அரசியலில் ஈடுபாடு கொள்ளச் செய்தவர் தற்போதைய அமைச்சர் நிமலசிறி ஜயதுங்க (அப்போது கட்சிக்குள் லொக்கு அத்துல என்று அழைக்கப்பட்டவர்). 1969ஆம் ஆண்டு (நீர்கொழும்பில்) 50 பேரைக் கொண்டு முதலாவது தடவையாக கூட்டப்பட்ட ரகசியக் கூட்டத்தில் மத்தியகுழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யில் முழு நேர ஊழியராவதற்காக தனது தொழிலிலிருந்து விலகினார் (அப்போது அவரின் வயது 26). 1971 கிளர்ச்சிக்கான நிதி திரட்டலின் போது போபகே இலங்கை வங்கியின் யோர்க் வீதி கிளையில் நடந்த கொள்ளையில் பங்கேற்றிருந்தார். ஆயுதத் தயாரிப்புகளுக்கான திட்டங்களும் போபகே தலைமையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொழும்பு தாக்குதல் நடவடிக்கைகளுக்கு போபகேவும், ஜயதேவ உயங்கொடவும் பொறுப்பாக இருந்தனர்.

ஏப்ரல் கிளர்ச்சி தோல்வியுற்றதன் பின் யூன் 19ஆம் திகதி பாணந்துறையிலுள்ள ஒரு விகாரையில் வைத்து போபகே கைது செய்யப்பட்டார். சிறையில் வைத்துக் கட்சியைப் புனரமைக்கும் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். சிறைக்குள்ளிருந்தே கட்சி பற்றியும், ஏப்ரல் கிளர்ச்சி குறித்தும் சுயவிமர்சனம் செய்யும் பணி போபகேயிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. (ஆனால் போபகேயினால் தயாரிக்கப்பட்ட சுயவிமர்சன அறிக்கை விஜேவீரவினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அது வேறு ஒருவரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.) கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் 1977ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டதன் பின் 78ஆம் ஆண்டு தொடக்கம் 1983 வரை போபகே ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளராக இருந்தார்.

இனப்பிரச்சினை குறித்த விவகாரங்களை ஆராயும் பொறுப்பு கட்சியினால் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் நிமித்தம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து இவர் எழுதிய "இலங்கையின் இனப்பிரச்சினை" எனும் நூல் மத்தியகுழுவின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது. இந்நூல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டிருந்தது. இந் நூலினை பிற்காலத்தில் ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை. சுயநிர்ணய உரிமையை எதிர்த்து சுயநிர்ணய உரிமைக்கெதிரான கற்பிதங்களை உள்ளடக்கிய விஜேவீரவின் "தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு" எனும் நூல் இதன் நிமித்தமே எழுதப்பட்டது எனப் பரவலாகப் பேசப்படுகிறது. இன்று ஜே.வி.பி. போபகேவினால் எழுதப்பட்ட நூலை கட்சியின் நூலாகக் கொள்வதில்லை. கட்சிக்குள் கருத்து ரீதியாக நடத்தப்பட்டு வந்த உட்கட்சிப் போராட்டத்தின் விளைவாக இறுதியில் 1984 பெப்ரவரி 29ஆம் திகதி கட்சியின் அரசியல் குழு, மத்திய குழு, மற்றும் உறுப்பினர்களை விழித்து எழுதப்பட்ட நீண்ட விமர்சனங்கள் அடங்கிய (இதில் இனப்பிரச்சினை குறித்த ஜே.வி.பி.யின் இனவாதப் போக்கு குறித்த விமர்சனங்களும் அடங்கும்) கடிதத்தின் மூலம் அவர் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் பதவி உட்பட சகல பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாகக் கூறி கட்சியின் சகல சொத்துக்களையும், ஆவணங்களையும் ஒப்படைத்தார். விரக்தியும் ஏமாற்றமும் அடைந்த நிலையில் 1989 ஆம் ஆண்டு வரை எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாத இவர் 1989ஆம் ஆண்டு இலங்கையின் பாதுகாப்பற்ற நிலையின் காரணமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றார். அங்கு அரச திணைக்களமொன்றில் தனது பொறியியல் தொழிலை மேற்கொண்டு வருகிறார். தற்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றுக்கான முயற்சி தொடர்பாக அவுஸ்திரேலியாவில் செயற்பட்டு வரும் குசநைனௌ குழச ீநயஉந ைஞசை டுயமெய எனும் ஒரு அமைப்பின் செயற்குழு உறுப்பினராக் இருந்து வருகிறார். சரிநிகர் கடந்த 3 வருட காலமாக இவருடன் தொடர்புகொள்ள முயன்ற போதும் கிடைக்கவில்லை. தற்செயலாக அவர் இலங்கை வந்த செய்தி கிடைத்ததும் அவருடன் நடத்திய கலந்துரையாடலின் சுருக்கத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

ஜே.வி.பி.க்கு எதிராக இவரின் விமர்சனங்களைப் பயன்படுத்தும் நோக்கில் அரச தொடர்பு சாதனங்களும் இவரிடமிருந்து பேட்டியெடுத்து வெளிப்படுத்தின என்பதும் உண்மையே. ஆனால் இன்னமும் புரட்சியில் நம்பிக்கை கொண்டவராகவும் ஜே.வி.பி.யின் அகரீதியான குறைகளை களைவதற்கு ஏதுவான வகையிலும் விமர்சனங்களை முன்வைக்க முனைவதையும் இவரின் எச்சரிக்கையும் பொறுப்பும் மிகுந்த கருத்துக்களிலிருந்து அவதானிக்க முடிகிறது.



## 1971 ஏப்ரலை திரும்பிப் பார்ப்போம்!

**கட்சியிலிருந்து விலகக் காரணம் என்ன?**

நான் கட்சியிலிருந்து 1984இல் விலகினேன். எனது விலகல் குறித்து நான் எழுதிய கடிதத்தில் பல விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தேன். குறிப்பாக கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவம் செயற்படுத்தப்பட்ட விதம் குறித்து எழுந்த பிரச்சினை, கட்சியின் தலைமைக்குக் கட்டுப்படாத போக்கானது ஒருபுறம் கட்சியின் இருப்பின் மீது பாதிப்பைச் செலுத்தி வந்த அதே நேரம், தலைமையிடம் அதிகாரத்துவம் இறுகிக் கொண்டே சென்றது. இதைத் தவிர முக்கியமாக, இனப்பிரச்சினை குறித்த கட்சியின் நிலைப்பாடு பற்றியும், கடந்தகால சுயவிமர்சனத்தில் காணப்பட்ட குறைபாடுகள் பற்றியும் இன்னும் பல விடயங்கள் குறித்தும் விளக்கியிருந்தேன். மேலும் கடந்த கால செயற்பாடுகள் அனைத்தின் போதும் தனித்து நின்று செயற்பட்டதும், ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்து செயற்படுவதில் காட்டிய வெறுப்பு, கட்சிக்கு வெளியிலிருந்து வருகின்ற கருத்துக்களை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பது, கட்சியின் முடிவு என்றும் சரியானது என்ற பிடிவாதம் என்பன கட்சியின் சரியான போக்கை அடையாளம் காணத் தடையாக இருந்தது.

**1971 கிளர்ச்சி குறித்துச் சுருக்கமாக விளக்குங்களேன்?**

கட்சி அமைக்கப்பட்ட அந்தக் காலப்பகுதியில் கட்சிக்குள் பல்வேறு குழுக்கள் காணப்பட்டன. தர்மசேகர, சரத் விஜேசிங்க, லொக்கு அத்துல போன்றவர்கள் இவ்வாறான அணிகளாக இருந்தனர். இப்போது அதனைத் திரும்பிப் பார்த்தால் அப்போது அந்த கருத்துப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு கட்சியென்ற அளவில் ஆர்வம் காட்டியிருக்கவில்லையென்றே தோன்றுகிறது. அப்போது மக்கள் எங்கள் அமைப்பை சேகுவேரா இயக்கம் என்று தான் அழைத்தனர். எங்கள் மத்தியில் கூட ஆரம்பத்தில் "இயக்கம்" என்று தான் எங்களை அழைத்துக் கொண்டோம். 70இலிருந்து தான் மக்கள் விடுதலை முன்னணி எனப் பெயரிட்டோம்.

71 புரட்சிக்கு உந்துதலாக நாட்டுக்கு வெளியிலும் உள்ளும் சில காரணிகள் தொழிற்பட்டன. புறக்காரணியாக 60களில் இந்தோனேசியாவில் புரட்சிகர எழுச்சியும் அதன் மீதான ஒடுக்குமுறை, சிலியில் நடந்த ஆட்சி மாற்றம், கியூபா, மற்றும் லத்தின் அமெரிக்காவில் ஏற்பட்ட எழுச்சிகள் எங்களுக்கு ஆதர்சமாக இருந்தன. உள்நாட்டு அளவில் எடுத்துக்கொண்டால் கட்சி அங்கத்தவர்கள் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டிருந்தது. சேகுவேராவின் கருத்தின்படி எதிரி எம்மீது தாக்க முன்பு நாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்பதற்கிணங்க நாங்களும் ஆயுதங்களை சேகரிக்கத் தொடங்கினோம், பின்னர் ஆயுதங்களை பறிக்கத் தொடங்கினோம். 70இல் இது சிறிது குறைந்தது. தோழர் விஜேவீரவும் கைது செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்டதும் நாடு முழுவதும் பல கூட்டங்களை ஒழுங்கு செய்தோம். பலமான வரவேற்பு எமக்கிருந்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பவை எங்களை சீ.ஐ.ஏ. ஏஜெண்டுகள் எனப் பிரச்சாரம் செய்தன. எங்களுக்கெதிராக அரசாங்கத்தைத் தூண்டிவிட்டன. அதே வேளை எம்மீதான அரசாங்கத்தின் பாய்ச்சலும் அதிகரித்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஆதர் ரத்னவேல் என்பவர் நியமிக்கப்பட்டவுடன் அவர் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார், ஜே.வி.பி. என்பது மக்களின் "நம்பர் வன்" எதிரி, அதனை முற்றுமுழுதாக அழிக்க வேண்டுமென்றார். இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் இளைஞர்களாக இருந்த எம்மைப் போன்றவர்களுக்கு "இனி இவர்கள் எம்மை அழிக்கப் போகிறார்கள். எனவே நாங்கள் மேலும் ஆயுதம் சேகரிக்க வேண்டும்" என உந்தித் தள்ளியது. அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றினோம். ஆயுதங்களைச் சேகரிப்பதற்கு இலகு வழிமுறையாக பொலிஸ் நிலையங்களைத் தாக்குவது என்ற கருத்து எம்மிடமிருந்தது. ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருந்த அதேநேரம் சுமுகமாக அரசாங்கத்துடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த முயற்சிகளையும்


→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுயவிமர்சனமின்றி புரட்சிகரப் பாய்ச்சலில்லை!



மேற்கொண்ட போதும் அவை தோல்வியிலேயே முடிந்தன. எமது இயக்கத்திலிருந்த ஒஸ்மன்டின் தாய் சீலவத்தி -இவர் ல.ச.ச.க.விலிருந்து விலகி எம்முடன் இணைந்திருந்தார்.- என்.எம்.பெரேராவைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார். அவருடன் உரையாடிய போது "எங்களை ஏன் சீ.ஐ.ஏ. இயக்கம் என்று கூறுகிறீர்கள்" என்று கேட்டதற்கு அவர், சீ.ஐ.ஏ. உங்களுக்கு அனுப்பிய காசோலையொன்று உள்ளது என்று கூறினார். சீ.ஐ.ஏ. எங்களுக்கு காசோலை அனுப்புமளவுக்கு ஒரு முட்டாள்தனமான அமைப்பில்லையே. அந்த காசோலையைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படி கோரினோம். அப்படி எதுவும் செய்யப்படவில்லை. வேறும் அரசாங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினோம். சிலர் எம்முடன் இது குறித்து உரையாட மறுத்தனர். 1971 மார்ச் அளவில் தோழர் விஜேவீர கைது செய்யப்பட்டார். அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் 3வது விதியை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகள் பிரகடனப்படுத்தப்பட்டன. அதாவது மரணப் பரிசோதனையின்றி சடலங்களைத் தகனம் செய்யும் விதி அது. இது தான் உண்மையில் 71 புரட்சிக்கு முக்கிய உந்துதலாக இருந்தது. இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. எனவே நாங்கள் இது குறித்துக் கட்சிக்குள் ஆராய்ந்தோம். இனி அரசாங்கம் படுகொலைகளை நடத்த ஆயத்தமாகி விட்டது. இதே வேளை கட்சிக்குள் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. அதாவது பதுளை, மொனராகலை, சிலாபம், அனுராதபுரம் போன்ற இடங்களைச் சேர்ந்த தோழர்கள் தங்களைத் தொடர்ச்சியாகக் கைது செய்து வருவதாகவும், தாங்கள் காடுகளை நோக்கித் தலைமறைவாகத் தொடங்கியிருப்பதாகவும், தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரினர். அது வரை எல்லோருக்கும் அப்படித்தான் கற்பிக்கப்பட்டிருந்தது. கொழும்பு போன்ற இடங்களிலிருந்து அது போன்ற கோரிக்கைகள் எழுப்பப்படவுமில்லை. அவ்வாறான ஒரு நிலைக்குத் தயாராக இருக்கவுமில்லை. ஆனால் கட்சிக்குள் பிரதான அலையாக இந்தக் கோரிக்கை எழுந்ததும் கட்சிக்குள் தாக்குதல் தீர்மானத்தை எடுக்க நேரிட்டது.

*எதிரியை முந்திக்கொண்டு முழு அளவில் தாக்க வேண்டும் என்ற அந்த கருத்துடன் உங்களுக்கு உடன்பாடுண்டா?*

இல்லை. ஆயுத ரீதியான அடக்குமுறையொன்றுக்கு எதிர்நடவடிக்கையில் ஈடுபட முன்பு செய்யப்பட வேண்டிய வேலைகள் இருக்கிறது. மக்கள் மத்தியில் காலூன்ற வேண்டும். இடதுசாரி நட்பு சக்திகளுடன் ஐக்கிய முன்னணி கட்டியிருக்க வேண்டும். சிவில் அமைப்புகளுடன் -அதாவது மனித உரிமைகள் அமைப்புகள் போன்றவை- செயற்பட வேண்டும். இப்படி ஒரு மக்கள் அமைப்பாகக் கட்டப்பட்டிருந்தால் இவ்வாறான அடக்குமுறையானது மக்களுக்கெதிரான அடக்குமுறையாக மாறியிருக்கும், முழு மக்களும் அவ்வடக்குமுறையை முறியடிக்கும் பொறுப்பையுடையவர்களாக இருந்திருப்பர். தனிமைப்பட வேண்டியிருந்திருக்காது.

1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்லின் போது தேர்தல் பிரச்சாரத்துக்காக நான் யாழ் பல்கலைக்கழகத்தினருகில் உரையாற்றினேன். அப்போது கூட்டத்தில் இருந்த வரதராஜப் பெருமாள் எழுந்து ஏன் லத்தீன் அமெரிக்காவில் தற்போது நடப்பதைப் போன்ற ஆயுதப் புரட்சியொன்றை நடத்துவதற்குப் பதிலாக இப்படிப் பாராளுமன்ற வழிமுறையை நாடியிருக்கிறீர்கள்? என்று வினவினார். லத்தீன் அமெரிக்காவில் தற்போதைய நிலையில் ஒரு தேர்தலை நடத்தமுடியாத அளவுக்கு மோசமான சூழல் நிலவுகிறது. ஆனால் இங்கு அப்படியல்ல தேர்தலொன்று நடைபெறுகையில் அந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து ஏன் நாங்கள் மக்கள் மத்தியில் இயங்க முடியாது என நான் வினவினேன். அவர் அதனை நிராகரித்து கூட்டத்தில் களேபரமே பண்ணியிருந்தார்.

1971இல் அவசரகாலச் சட்ட விதிமுறைகள் குறித்து நாங்கள் சட்ட ஆலோசனைகள் பெற்ற போது அவர்கள் 1918ஆம் ஆண்டு பிரித்தானியா அமுல்படுத்தியபின் இவ்வாறான ஒரு விதி வரலாற்றில் தற்போது தான் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் எனவே எந்த நம்பிக்கையும் கொள்ளத்தக்க சூழ்நிலை தற்போது இல்லை என்பதை. தெரிவித்தனர். தாக்குதலை நடத்த வேண்டும் என்ற கருத்து மேலும் பலமடைய இதுவும் முக்கிய காரணமாக இருந்தது. அதன்படி ஏப்ரல் 5ஆம் திகதியன்றே தாக்குதலை நடத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் விளைவுகளை நீங்கள் அறிந்திருப்பீர்களே.

சிறைச்சாலைக்குள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டோம். பல கருத்துகள் பற்றியும் விவாதித்தோம். ஆனால் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்ட கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. அவ்வாறு ஒரு கருத்து முன்வைக்கப்பட்டால், அது குழப்பப்பட்டது. கண்டிக்கப்பட்டது. எதிர்க்கப்பட்டது. சில சமயங்களில் சக தோழர்களாலேயே தாக்கப்பட்டனர். சகிப்புத்தன்மை பலரிடம் இருக்கவில்லை. இதன் காரணமாக சிறையிலேயே பல பிளவுகள் உருவாகின. இதற்கான காரணம் வரட்டுத்தனமாக நாங்கள் சில முடிந்த முடிவாக, மத சூத்திரங்களைப் போல விட்டுக்கொடாத கருத்துக்களைக் கொண்டிருந்ததே.

*இந்தக் கருத்துப் பிரச்சினைகளில் இனப்பிரச்சினை குறித்த விடயம் எந்தளவு பாத்திரம் வகித்திருந்தது?*

சிறைக்குள் இருந்த போது தான் முதற் தடவையாக இனப்பிரச்சினை குறித்த அறிவைப் பெற முடிந்தது. 71க்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியில் தொழிற்படுவதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் குறைவு. சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விஜேவீர விலகிய போது சண் ஒரு தமிழராக இருந்ததால் தான் விஜேவீர விலகி வந்தார் எனப் பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தது. அது காரணமாயிருந்திருந்தால் அதற்கு முன் விஜேவீர அவருடன் இணைந்து வேலை செய்திருக்க முடியாதே. கருத்து ரீதியான பிரச்சினையினால் தான் விஜேவீர ஒதுங்கினார். இந்த பிரச்சாரமும் தமிழ் மக்கள் மத்தியில் செல்லத் தடையாக இருந்தது. ஆங்காங்கு தமிழ்த் தோழர்களுடன் உரையாடல்களை நடத்தியிருந்தோம். ஆனாலும் அவை போதுமானதாயிருக்கவில்லை.

அதேவேளை நாங்கள் நடத்தியிருந்த வகுப்புகள் ஐந்தில் இந்திய விஸ்தரிப்புவாதமும் ஒன்று. அதில் இந்திய வம்சாவழி மக்களைப் புரட்சிக்கு எதிரான சக்தியாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது. உங்களுக்குத் தெரியும் இந்திய விஸ்தரிப்புவாதமென்பது மாவோவால் முன்வைக்கப்பட்ட கருத்து. அதே கருத்தை நாங்களும் கொண்டிருந்தோம். இந்திய வம்சாவழியினர் புரட்சிக்கு சாதகமானவர்களா என்ற கருத்துக் குறித்த கலந்துரையாடலின் போது சில தோழர்கள் குறிப்பாக பியதிலக்க போன்றவர்களால், இந்திய வம்சாவழியினர் தங்களது நாடாக இலங்கையைக் கருதவில்லையென்றும், அவர்களின் வீடுகளில் கூட இந்தியத் தலைவர்களினதும், திராவிட நாடு கேட்கும் திராவிட இயக்கத் தலைவர்களினதும் புகைப்படங்கள் தான் தொங்கவிடப்பட்டுள்ளன என்றும், எனவே இந்த மக்களை அவர்கள் எந்த நேரத்திலும் அவர்களின் நலன்களுக்காக பயன்படுத்தக்கூடும் என்பன போன்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால் இக்கருத்து கட்சியின் கருத்தாக இருக்கவில்லை. ஆங்காங்கு சில தோழர்களிடம் இருந்த கருத்துக்கள் மாத்திரம் தான் இவை.

*இந்தியவம்சாவழி மக்களை 'ஐந்தாம் படை' என்ற வகையிலான ஜே.வி.பி.யின் முன்னைய ஆவணங்கள் இருக்கின்றனவே?*

கொள்கையளவில் அப்படியான கருத்துக்கள் கட்சிக்கு இருக்கவில்லை. ஆனால் சில வகுப்புகளில் இது குறித்துத் தீவிரமான கருத்தாடல்கள் இடம்பெற்றிருந்தன. அப்படியான ஒரு கருத்து கட்சியின் கருத்தாக இருந்திருந்தால் அப்போது இந்திய வம்சாவழி மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருப்பார்களே. ஆனால் அப்படி அவர்களுக்கு எதிராக எதுவும் இடம் பெற்றிருக்கவில்லை.

சிறையில் இருக்கையில்தான், 1972ஆக இருக்க வேண்டும். கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களைச் சந்திக்க நேர்ந்தது. சந்ததியார் போன்றவர்களுடன் கண்டி போகம்பர சிறைச்சாலையில் வைத்து தொடர்ச்சியாக உரையாடியிருந்தேன். அப்போது தான் முதற்தடவையாக இப்பிரச்சினை குறித்த விளக்கம் ஏற்பட்டது. இது குறித்த எமது பாத்திரம் என்ன என்பது குறித்துக் கலந்துரையாடினோம். அது குறித்து ஆராயத் தொடங்கினோம். இதன் விளைவாகத் தான் 1977 ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி ரஷ்யப் புரட்சியின் நினைவாக நடத்தப்பட்ட கூட்டத்தில் வைத்து கட்சியின் "புரட்சிகர கொள்கைப் பிரகடன"த்தை வெளியிட்டிருந்தோம். அதில் மதம், மொழி, சுயநிர்ணய உரிமை என்பன குறித்து தனித்தனியான விளக்கங்களை அளித்தோம். இது சிறைக்குள்ளிருந்த போது தயாரிக்கப்பட்டது. இனப்பிரச்சினை குறித்து கட்சியின் கொள்கையை ஆராய என்னிடம் தான் அரசியல் குழு பொறுப்பளித்திருந்தது.

*இந்திய விஸ்தரிப்புவாதம் குறித்த விடயத்தில் இலங்கை திராவிடக் கழகம் குறித்தும் அதன் தலைவர் இளஞ்செழியன் குறித்தும் கூட வகுப்புகளில் உரையாடப்பட்டிருக்கிறதல்லவா?*

இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றிய பிரதான கருத்தை எடுத்துக் கொண்டால், முதலாளித்துவ நாடொன்று என்ற வகையில் உலகச் சந்தையில் ஏனைய ஏகாதிபத்திய நாடுகளுடன் போட்டியிட முடியாத நிலையில், சந்தைப்படுத்தலுக்காக சிறு, சிறு நாடுகளை நாடிநிற்க வேண்டியிருக்கிறது. இந்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் இதற்காக தம்மைச் சூழ்ந்துள்ள நாடுகளில் இதற்கான சந்தை வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள எத்தனிக்கின்றனர். எனவே காலூன்றலுக்கான வாய்ப்புகளை அமைத்துக் கொள்ளவும் அதனைப் பலப்படுத்தவும் முயல்கின்றனர். இதனைத் தவிர தமிழ் நாட்டிலுள்ள திராவிட இயக்கங்கள் தமிழ் நாட்டோடு சேர்த்து இலங்கையின் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களை இணைத்து ஒரு நாடாக ஆக்க இருக்கிறது என்ற கருத்தும் பலப்படத் தொடங்கியது. இந்திய விஸ்தரிப்புவாதக் கருத்துக்கு இவையெல்லாம் துணையாகின. இந்த இந்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் தமது நலன்களுக்காக இக்கருத்துக்களையும், இந்திய வம்சாவழியினரையும் பயன்படுத்த விளைகிறதா? இந்திய வம்சாவழியினர் இதற்குப் பழியாவார்களா? என்பது போன்ற விடயங்கள் பேசப்பட்டன.

*71 புரட்சியின் போது இளஞ்செழியனும் திராவிடக் கழகத்தவர்களும் சேர்ந்து கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்களல்லவா? ஜே.வி.பி.க்கு எதிர்விரோத சக்திகளாக இருந்த இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்ன?*

தோழர் இளஞ்செழியனுடன் அன்று கட்சி என்ற வகையில் ஹட்டனில் வைத்து பல கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. வி.எல்.பெரைரா போன்ற வேறும் சில மலையக அமைப்புகளுடன் அப்போது எங்களுக்கு தொடர்பு இருந்தது. அவர்களுடன் தொடர்ச்சியான உரையாடல்களையும் நடத்தியிருக்கிறோம்.

*நீங்கள் இனப்பிரச்சினை குறித்து ஒரு நூலை வெளியிட்டிருந்தீர்கள். அது கட்சியின் அனுமதியுடன் வெளியிடப்பட்ட ஒன்றா?*

ஆம், அது கட்சியின் மத்திய குழுவின் அனுமதியுடன் வெளியிடப்பட்ட நூல். அது இனப்பிரச்சினை பற்றிக் கட்சியினால் பயன்படுத்தப்பட்ட நூல். இனப்பிரச்சினையைத் தூண்டிவிடவும், அதனை வளர்த்து விடவும் தென்னிலங்கை முதலாளித்துவ வர்க்கத்தினர் வகித்த பாத்திரம், வடக்கில் முதலாளித்துவ வர்க்கத்தினர் வகித்த பாத்திரம் என்பன குறித்தும் ஆராயப்பட்டிருந்தது. வர்க்க நலன்களுக்காக இதனை இந்நிலைமைக்கு வளர்த்து வந்திருந்தார்கள். மேலும் ஒவ்வொரு சமூகங்களுக்குமுள்ள தனித்துவமான அடையாளங்கள், அச்சமூகங்களின் மத, மொழி, பண்பாட்டு உரிமைகள் பற்றியும் பேசப்பட்டுள்ளது. இலங்கையர் என்கின்ற இனமொன்று இருக்கிறதா? அல்லது பல்லினங்கள் தத்தமக்குரிய அடையாளங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனவா? அடிமை நிலைச் சமூக அமைப்பில் இனம் என்றிருக்கவில்லை. முதலாளித்துவ வளர்ச்சிகளூடு தான் இனத்துவ சிந்தனைகள் வளரத் தொடங்குகின்றன. இலங்கையில் கூட சிங்கள, தமிழ் அரசுகள் இருந்திருக்கின்றனவே. சிறிது காலம் தான் இவையெல்லாம் சேர்ந்த ஒரே நாடாக இருந்திருகிறது. அது காலனித்துவத்தின் கீழ். ஆனால் அதனைத் தொடர்ச்சியாதப் பேண முடியாது போனது. சிங்கள இனம் தம்மை இனமாக அடையாளப்படுத்த காட்டும் காரணிகள் அனைத்தும் தமிழ் இனத்துக்கும் இருக்கிறதே. சுயநிர்ணய உரிமையை அந்நூலில் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால் இப்பிரச்சினைக்கான தீர்வு பிரிந்து போவது மட்டுமே என நாங்கள் கூறவில்லை.

*இனப்பிரச்சினை பற்றிய அதற்கு முன்னைய நிலைப்பாடு குறித்து சுயவிமர்சனம் செய்து கொண்டதுண்டா?*

சிறையில் இருக்கும் போது 1970, 71 காலப்பகுதியில் இனப்பிரச்சினை குறித்த கட்சியின் நிலைப்பாட்டில் போதாமை இருந்ததை விமர்சனபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை முன்வைத்திருந்தேன். அதன் விளைவாகவே தனியாக அது குறித்து சிறிய ஆவணங்களைத் தயாரிக்க நேரிட்டது. 1978ஆம் ஆண்டில் முதலாவது மாநாட்டில் சமர்ப்பிக்கவென சுயவிமர்சனத்தைத் தயாரிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் அந்நகலைத் தயாரிக்கும் போது கட்சிக்குள்ளிருந்து முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை மட்டுமன்றி கட்சிக்கு வெளியில் இருந்து முன்வைக்கப்பட்டவற்றில் நியாயமானவை எனக் கருதப்பட்ட கண்டனங்கள், விமர்சனங்களையும் கவனத்திற்கெடுத்திருந்தேன். அதனை மத்திய குழுவுக்குச் சமர்ப்பித்த போது அதிலடங்கியிருந்த சிலவற்றை விஜேவீர ஏற்றுக் கொள்ளவில்லை. போராட்ட வடிவம், இந்திய விஸ்தரிப்புவாதம், இனப்பிரச்சினை...என்பன குறித்து நான் குறிப்பிட்டிருந்த விடயங்களுக்கு கருத்து ரீதியான பதிலை அளிக்க தோழர் விஜேவீர முன்வரவில்லை. இதனை எதிரிகள் சாதகமாக்கிக் கொள்வார்கள் என்ற தர்க்கத்தை மட்டுமே அவர் முன்வைத்தார். எமது பிழையான வழிமுறைகள் என்பதை நாங்கள் நேர்மையாக சுயவிமர்சனம் செய்கையில் அதனை எதிரி பயன்படுத்துவது குறித்து, நாங்கள் பொருட்படுத்தத் தேவையில்லை, ஏனையோரை விட்டுவிட்டு, மக்கள் அதற்குத் தரும் பிரதிபலிப்பு மட்டும் தான் எமக்கு முக்கியமானது என நான் தெரிவித்திருந்தேன். மத்திய குழுவில் பெரும்பான்மையானோர் இதனை ஏற்க மறுத்தனர். எனவே இதனைத் தொடர்ந்து செய்யும் பணி தோழர் தயா வன்னியாராச்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் தோழர் தயா வன்னியாரச்சி அண்மையில் கருத்து வெளியிடும் போது அந்த சுயவிமர்சனத்தை நானோ அல்லது விஜேவீரவோ தான் தயாரித்திருக்க வேண்டும் என கூறியிருக்கிறார். ஆனால் அவர் அன்று இக்கருத்தை மத்திய குழுவுக்கு முன்வைக்கவில்லை. அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். இறுதியில் அடுத்த மத்திய குழு கூட்டத்தின் போது அது தொலைந்துவிட்டது என்று கூறினார். அது அன்று வெளியிடப்பட்டிருந்தால், உறுப்பினர்களுக்கு மிகுந்த பயனளித்திருக்கும். என்னிடமிருந்த குறைபாடு என்னவென்றால் நானும் அன்று அதற்காக வாதாடியிருக்க வேண்டும்.

*அப்படியென்றால் கட்சியால் பிற்காலங்களில் வெளியிடப்பட்ட 'சுயவிமர்சனம்' குறித்த நூல்?*

அது தோழர் றோகண விஜேவீரவால் தயாரித்து பொதுவாக வெளியிடப்பட்டது. என்றாலும் அது பூரண ஒன்றல்ல.

*நீங்கள் தயாரித்த.சுயவிமர்சன நகலில் இனப் பிரச்சினை குறித்த விடயத்தைக் கட்சி எதிர்கொண்ட விதம் பற்றி...?*

சிறைக்குள்ளிருந்த போது "புரட்சிகர கொள்கைப் பிரகடனம்" பற்றிய ஆவணத்தை தயாரித்துக் கொண்டிருந்த போது இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்த விடயம் பற்றி தோழர் விஜேவீர "இந்தக் கருத்தை வெளியிட்டால், சிங்கள சமூகம் ஏற்றுக் கொள்ளாது, சிங்கள சமூகத்தின் மத்தியில் செயற்படுவதற்கு தடையாக இருக்கும்" என்று கூறினார். தனிப்பட்ட முறையில் தோழர் விஜேவீர சுயநிர்ணய உரிமை குறித்த விடயங்களை ஏற்றுக் கொண்டாலும் கூட, சிங்கள சமூகத்தின் மத்தியிலிருந்து வெளிக்கிளம்பக் கூடிய எதிர்ப்புகளுக்கு அஞ்சினார். எனவே கொள்கைப் பிரகடனத்தில் வேறு எச்சரிக்கையான சொற் பிரயோகத்தைக் கையாள வேண்டுமென்று கூறினார். அதன்படி பலாத்காரமாக இனங்களை சேர்த்து வைத்திருப்பதையும், பலாத்காரமாக பிரிந்து போவதையும் எதிர்க்கிறது என்ற வகையில் இடப்பட்டது. சுயநிர்ண உரிமையை அங்கீகரிப்பதாக அவர் கூட்டங்களிலும் கூறியிருக்கிறார். ஆனால் பிற்காலங்களில் அதிலிருந்து அவர் விலகியதைக் காணக்கூடியதாக இருந்தது.

*நீங்கள் இனப்பிரச்சினை குறித்து தயாரித்த நூலுக்கும் பின்னர் விஜேவீர தயாரித்த நூலுக்கும் அடிப்படை வித்தியாசம் என்ன இருக்கிறது?*

நான் கட்சியிலிருந்து விலகியதன் பின்னர் தான் தோழர் விஜேவீரவின் அந்நூல் வெளியிடப்பட்டது. அந்நூல் ஒரு வகையில் இனவாதத் தன்மையைக் கொண்டது எனச் சுருக்கமாகக் கூறலாம். எனக்குத் தெரிந்த வரையில் தற்போது ஜே.வி.பி. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை. அடிப்படை ஜனநாயக உரிமையை மறுத்துக் கொண்டு எவ்வாறு மக்கள் மத்தியில் இயங்க முடியுமோ எனக்குத் தெரியவில்லை. தமிழ் மக்களெல்லோரும் சேர்ந்து எங்களது இந்த உரிமையை அங்கீகரி என்று கூறினால் கட்சியால் என்ன பண்ண இயலும்?

*ஜே.வி.பி.யில் இது வரை காலம் பல உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. நீங்கள் பலரும் கொள்கை ரீதியான பிரச்சினையினாலேயே பிளவுற்றிருக்கின்றீர்கள். இந்நிலைமைக்கு உட்கட்சிப் போராட்டத்துக்கான பொறிமுறையின்மை ஒரு முக்கிய காரணமாக இருக்குமா?*

70, 71இல் தலைமையிலிருந்த பலரும் விலகியதும் இந்த காரணங்களினால் தான். பொதுவாகவே தலைமையிலிருந்த குறைபாடென்பதை விஜேவீரவும் ஏற்றுக்கொண்டிருந்தார். தொண்டர்களை தலைமைக்கு தயார்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. ஜே.வி.பி. போன்ற அமைப்புக்கு தலைமைக்கு தயார்படுத்துவதற்கு சரியான காலம் செல்லும், தொண்டர்களுடன் பணியாற்றி, உள, உடல், கருத்து ரீதியான தயாரிப்புக்கு தொடர்ச்சியான பயிற்சிளிக்கப்பட்டு தலைமைக்கு வர காலம் செல்லும். கட்சிக்குள் இப்படி நன்கு தயார்படுத்தப்பட்ட தலைமை இருக்கவில்லை. இது பொதுவாக புரட்சிகர அமைப்புகளுக்கு உள்ள சிக்கலான பிரச்சினை தான். வேறு வழியின்றி, இருக்கின்ற உறுப்பினர்களை தலைமைக்கு கொண்டுவர நேரிட்டது. உதாரணத்திற்கு விவசாயத்துறை, இனப்பிரச்சினை பற்றிய விவாதம் கட்சிக்குள் நடைபெற்ற போது கட்சிக்குள் விவாதம் நடந்தது எனக்கும் தோழர் விஜேவீரவுக்குமிடையில் மட்டும்தான். ஏனையோர் பார்வையாளர்களாக மட்டுமே இருந்தனர். கட்சிக்குள் உட்கட்சிப் போராட்டத்துக்கு இதுவும் ஒரு காரணம். பெரும்பான்மையினர் கட்சியின் பிரதான அலையுடன் அடிபட்டுப் போபவர்களாக இருக்கும் போது சிறுபான்மையினரின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாயினும் கூட அது எடுபடாது போகவே கட்சியிலிருந்து விலகுவது தவிர்க்க முடியாததாக இருக்கவே செய்யும். எனக்கும் கூட அது தான் நேர்ந்தது. நான் காண்கின்ற பிரதான குறைபாடும் கூட இது தான். சுயவிமர்சனம் செய்வதில் காட்டுகின்ற தயக்கம் காரணமாக இது மட்டுமன்றி பல்வேறு பின்னடைவுகளை தொடர்ச்சியாகவே சந்திக்க நேருவது தவிர்க்க இயலாது.

**தொகுப்பு: கோமதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டுநகர்:
# சுதாகரனுக்கு நடந்தது என்ன?

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் வாராவாரம் படை முகாம்களுக்குச் சென்று கையொப்ப மிடுதல், அங்கு செல்பவர்களை வயது, தொழில் வித்தியாசமின்றி அடிமைத்தனமாக முகாம்களில் வேலையில் ஈடுபடுத்தல், மாணவ மாணவிகளை புலனாய்வுக்குட்படுத்தல் போன்ற இராணுவத்தினரின் இந் நிகழ்வுகள் இளைஞர்கள், மாண வர்கள் மத்தியில் பாரிய விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இன்று இந்தக் கையொப்பமிடுதல் என்கிற விடயம் பலரை மனநோயா ளர்களாக மாற்றி விட்டது. சனி இரவு தூங்கும்போது 'விடிந்தால் ஞாயிறு, நேரத்துக்கு சென்றால் தான் வேலைகளை முடித்து விட்டு நேரத்துக்கு வீட்டுக்கு வரலாம்', 'நான் சென்ற கிழமை போகவில்லை. இந்த கிழமை என்னத்தால் அடிக்கின்றார்களோ' என்ற மன உழைச்சலுடனே படுக்கைக்குச் செல்கின்றனர் இவர்கள். இது நாளா வட்டத்தில் அவனை/ அவளை ஒரு பைத்தியக்காரன்/ பைத்தியக்காரி ஆக்கி விடவும் கூடும்.

உண்மையில் இராணுவத்தினர் இச்செயற்பாடுகள் மூலமாக தங்களுக்கான பாதுகாப்பைத் தேடிக் கொள்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் மறைமுகமாக இளைஞர்கள் மத்தியில் உளவியல் ரீதியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அந்தந்தப் பிரதேசத்தில் இராணுவ பலத்தை மேலோங்கச் செய்வதுடன், ஒரு வகையான இன அழிப்பை மேற்கொள்வதுமே அவர்களது நோக்கமாகும்.

இதற்குக் காரைதீவு விசேட அதிரடிப் படை முகாமுக்குக் கையொப்பமிடச் சென்ற சோமசுந்தரம் சுதாகரன் (25) சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நல்லதொரு எடுத்துக் காட்டாகும். சுதாகரன் இராணுவக் கட்டுப்பாடில்லாத பிரதேசமான பழுகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பகால புளொட் உறுப்பினர். இவர் காரைதீவில் திருமணம் செய்திருந்தார். கடந்த ஆறு மாதங்களுக்கு முன் இவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார். அன்றிலிருந்து பிரதி ஞாயிறு தோறும் முகாமுக்குச் சென்று கையொப்பமிட வேண்டும். அது மட்டுமல்லாமல் காரைதீவை விட்டு வெளியே செல்வதென்றால் முகாமுக்குச் சென்று அனுமதி பெற்றுக் கையொப்பமிட்டே செல்ல வேண்டும். சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு (05.04.98) இருதினங்களுக்கு முன்னும் தன்து சொந்த ஊருக்கு வரும் போது முகாமுக்குச் சென்றே வந்திருக்கிறார். சம்பவதினம் 5.4.98 ஞாயிறு காலை முகாமுக்கு கையொப்பம் இடச்சென்ற போது இவர் மட்டும் தனியாக அழைத்துச் செல்லப்பட்டு கறுப்பு உடை அணிவித்து துப்பாக்கியையும் கையில் கொடுத்து புகைப்படம் எடுத்த பின் ஜீப்பில் ஏற்றி பெரிய நீலாவணை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பெரிய நீலாவணை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பெரிய நீலாவணை மத்திய வீதியினூடாக மு.ப.11 மணியளவில் ஜீப்பில் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். அங்கு வைத்தே சுதாகரன் சுடப்பட்டிருக்கிறார்.

சுதாகரனின் மனைவி வசந்தி கல்முனை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி இ. மனோகரன் அவர்கள் காரைதீவு அதிரடிப்படை முகாம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். நாணயக்காரவிடம் தொடர்பு கொண்டபோது, சுதாகரன் வழமையாக முகாமுக்கு வந்து கையொப்பமிடுபவர். சம்பவ தினமும் கையொப்பமிட வந்தவர். புலிகளைக் காட்டுவதகாக் கூறி துறைநீலாவணைக்கு எங்களைக் கூட்டிச் சென்றார். அங்கே மறைந்திருந்த புலிகள் தாக்குதல் நடத்திய போதே சுதாகரன் கொல்லப்பட்டார் எனக் கூறியுள்ளார். உண்மையில் சம்பவ தினம் விசேட அதிரடிப்படையினர் துறைநீலாவணைக்கு செல்லவுமில்லை, அங்கு எதுவித தாக்குதலும் நடைபெறவுமில்லை. உண்மையில் இவர்கள் துறைநீலாவணைக்குத் தான் சென்றார்கள். அங்கு தாக்குதல் நடந்தது என்றும் வைத்துக் கொண்டால், புலிகளால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சுதாகரனை மட்டும் சுடுவதற்காக நடத்தப்பட்ட தாக்குதலா? அல்லது தவறுதலாக சுதாகரன் சுடப்பட்டாரா? அவ்வாறாயின் நடத்தப்பட்ட தாக்குதலில் ஜீப்பில் சுதாகரனை அழைத்து வந்த ஆறு படையினருக்கும் எதுவித காயங்களுமே ஏற்படவில்லையா? என்ற பல்வேறுபட்ட கேள்விகள் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. எது எவ்வாறிருப்பினும் சுதாகரனின் சம்பவத்தில் ஏதோ ஒரு மர்மம் இருக்கவே செய்கின்றது என்கின்றனர் விடயம் அறிந்தோர்.

இதேநேரத்தில் காரைதீவு முகாமைப் பொறுத்தமட்டில் கமால் பெரேரா என்ற அதிகாரி இரத்த வெறிபிடித்தவர் போலவே மக்களுடன் நடந்து கொள்கிறார் என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அன்னை பூபதி தினமான 19ம்திகதி படை முகாம்களுக்கு கையொப்பமிடச் சென்ற இளைஞர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அக்கரைப்பற்று நகர்பகுதி, மட்டக்களப்பு நகர் பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

நடந்து முடிந்த க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான சங்கீத வாய்மூல பரீட்சைக்கு வாகரையில் இருந்து மூன்று மாணவர்களை (அனுமதி அட்டையும் வைத்திருந்தனர்.) மார்ச் மாதம் 31ம்திகதி மாலை அவர்கள் ஆசிரியருடன் தங்கியிருந்த வீட்டில் வைத்து கைது செய்து பழைய கல்முனை வீதியிலுள்ள கல்லடி முகாமுக்கு கொண்டு சென்று நையப் புடைத்து மறுநாள் விடுதலை செய்துள்ளனர். இதனால் இம்மாதம் 23ம்திகதி நடைபெற்ற தொழிநுட்ப பாடசெய்முறைப் பரீட்சைக்கு ஒரு மாணவன் தோற்றவில்லை. இன்னொரு மாணவனுக்கு காது இரண்டாலும் சீழ்வடிகிறதாம். இதுதான் இன்றைக்கு மாணவர்களின் நிலை.

- சடாயு -




## தொற்றுநீக்கி

கடந்த வாரங்களில் நாடுமுழுவதுமான வைரஸ் காய்ச்சலுக்குப் பலர் பலியாகிக் கொண்டிருப்பது பற்றி பத்திரிகைளில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கையில் எனது உறவினர்கள் சிலரும் அதில் சிக்கிய செய்திகளையும் கேட்க நேர்ந்தது. கொழும்பில் மாத்திரம் ஒரே கிழமையில் எனது உறவினர்கள் ஐந்து பேரின் மரணச் சடங்குகளுக்குச் சென்று வந்தேன். ஒரே வீட்டில் இருவர் பலியான செய்தி துயரத்தை அளித்தது. அவர்களில் ஒருவர் தனலட்சுமி. சிறிது சித்தசுவாதீனமற்றவர். கடந்த வருடம் தான் அவருக்கு திருமணம் முடிந்தது. மரணிக்கையில் அவர் கர்ப்பிணி. அவரது வீட்டில் அக்காவின் கணவர் நோய் கண்டு இறந்து விடவே, அடுத்த நாள், அதே நோயினால் தனலச்சுமியும் இறந்து போனார். அவரது அக்காவுக்கு அண்மையில் நீரிழிவு நோயின் காரணமாக இரண்டு கால்களை அகற்றியிருந்தார்கள். அக்காவின் இரு மகன்களும் பிறப்பிலேயே பேச்சை இழந்தவர்கள். இந்தச் செய்தி உலகத்தைப் பொறுத்தவரை வைரஸ் நோயினால் மரணமான நூற்றுக்கணக்கானோரில் சராசரி சிலர் மட்டுமே.

ஆனால் இந்த நோய்க்குப் பின்னால் இருந்த சமூகக் காரணங்கள் பற்றி எவரும் கண்டுமிருக்க மாட்டார்கள். சேரி வாழ்க்கையை வாழ்ந்து வரும் இவர்களின் மத்தியில் புரை'யோடிப்போயுள்ள நோய்கள் குறித்து எத்தனை தூரம் எத்தனை பேர் அறிந்திருப்பர்? அவர்களின் சுகாதார சூழல், போசாக்குக் குறைபாடுகள், மந்தபோசனம், என்பன விரைவாக நோய் தொற்றிவிடவும், அவை பரவவும், அதை எதிர்க்கக் கூடிய உடற்பலமுமற்ற நிலைமை உடையவர்கள் என்பவை குறித்தும் எத்தனை பேர் அறிந்திருப்பர்?

இந்த வாழ்நிலை அவர்களாகத் தேடிக் கொண்ட வாழ்க்கையா? அல்லது அவர்கள் மேல் நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்க்கையா? பலரும் சொல்வதைப் போல் இவர்கள் வெறும் சராசரி வைரஸ் நோயினால் பலியாக்கப்பட்டவர்களா? அல்லது, சமூக கட்டமைப்பின் குரூரமான அவல விதிகளுக்குப் பலியாக்கப்பட்டவர்களா? நாடு முழுவதும் இன்னும் எத்தனை சேரிகளில் எத்தனை மரணங்கள் இதுவரை நிகழ்ந்துள்ளனவோ தெரியவில்லை. ஆனால் இந்த சமூக நோய்களுக்கு மேலோட்டமாக பிளாஸ்திரி போட்டு குணமடையச் செய்து விடலாம் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா? அல்லது அதற்கு அடிப்படையான மூலத்தை கண்டறிந்து அந்த வைரஸ்களை ஒட்டுமொத்தமாக தொற்று நீக்கிவிட்டு இனியும் சிக்கல் கொடுக்காத வண்ணம் சீர்செய்வதா? என்பதே கேள்வி.

----------0----------0----------0----------

## சிங்களமயமாதல்

அண்மையில் நான் தொடர்ச்சியாக அவதானித்து வரும் விடயங்களில் ஒன்று அருந்ததியச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் சிங்களமயமாகிக் கொண்டிருப்பது.

சிங்கள மக்களுடனான கலப்பு மணங்களில் ஈடுபடுதல், பிள்ளைகளை சிங்கள மொழிப் பாடசாலைகளில் படிப்பித்தல், வீட்டிலே கூட சிங்களத்திலேயே பேசுதல், சிங்கள சமூகத்தவரோடு கூடுதலான உறவைப் பேணுதல், பலப்படுத்துதல் என்பனவற்றைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனால் இந்தக் கலப்புகள் கூடியளவில் சிங்கள விளிம்பு நிலை (அதிலும் குறிப்பாக சிங்கள் கிறிஸ்தவ) மக்களுடனேயே நடக்கிறது என்பது அவதானிக்கத்தக்கது. சிங்களச் சமூகத்தில் நிலவுகின்ற சாதியம் என்பது தமிழ் சமூக சாதியமைப்போடு ஒப்பிடுகையில் ஓரளவு நெகிழ்வானது. அங்கு தீண்டாமை என்பதைக் காண முடியாது. சில இடங்களில் மிகச் சிறிய அளவில் நிலவிய போதும் அது சித்தாந்தப் பலத்தை கொண்டியங்கவில்லை என்பது முக்கியமானது.

ஆனால் இங்கு நான் குறிப்பிடுகின்ற கலப்பு என்பது அடிநிலை மக்கள் மத்தியில் நிலவுகின்ற கலப்பே. ஆரம்பத்தில் இது காதலுறவுகளுக்கூடாக வளர்ந்த நிலை போய் இப்போது அது பெற்றோர்களால் பேசி தீர்மானிக்கின்ற திருமணங்களாக வளர்ந்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. இங்கு இரு சாராரும் சாதியத்தின் பெயரால் ஓரங்கட்டப்பட்ட விளிம்பினர் என்பதால் இது சாத்தியப்படுகின்றது. என்ற போதும் கருத்து ரீதியில் அருந்ததியர்கள் பலர் இந்த (பொதுவாக அருந்ததியர்களுக்கு வெளியிலிருந்து வரும்) கலப்பை ஏற்றுக்கொள்வதில் பயமிருப்பதைக் காணமுடிகிறது. "என்னதான் இருந்தாலும் சொந்தத்துக்குள் உரிமை பேசுவதைப் போல ஆகுமா...? அவர்களை எவ்வளவு தூரம் நம்புவது? சொந்தபந்தங்களிலிருந்து அந்நியப்பட வேண்டி வருமே...!" என்பன போன்ற கருத்துக்கள் பொதுவாகவே நிலவுகின்றன. இந்தப் பீதிக்கு இன்னுமொரு காரணம் கூட்டுக் குடும்ப வாழ்நிலைக்குப் பழக்கப்பட்ட இவர்களால் அதற்கு வெளியில் உள்ள குடும்ப கட்டமைப்புகளால் தனிமைப்பட்டுவிடுவோம் என்கின்ற பயமே.

சிங்களச் சமூகத்துடனான கலப்பானது வடகிழக்கு, மற்றும் மலையகப் பிரதேசங்களில் நிகழ்வதை தற்செயலாகவே காணமுடியும். ஆனால் அதற்கு வெளியில் உள்ள மாவட்டங்களில் இதனைப் பரவலாகக் காணலாம். வடமேற்குக் கரையாரங்களில் (முக்கியமாக வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம்...) வாழ்கின்ற சிங்கள தமிழ் சமூகங்களைப் பொறுத்தவரை இந்தக் கலப்பு ஒரு பொருட்டே இல்லை. கூடியளவில் கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற இந்த பகுதியில், ஏற்கெனவே தமிழ் சமூகத்தவர்கள் பலர் சிங்கள மொழி பேசுபவர்களாகவும், ஒரு வித புதிய பண்பாட்டை உருவகித்துக் கொண்டவர்களாகவும், புதிய பரம்பரையினருக்கு சிங்கள + கிறிஸ்தவ பெயர்களை இட்டு வருபவர்களாகவும், தமிழ்ச் சமூகத்தவர்கள் என்று கூறமுடியாதளவுக்கு தம்மை மாற்றிக் கொண்டவர்களாகவும் இருப்பதையும் காண முடிகிறது. 90களில் பிறந்த-பிறக்கின்ற குழந்தைகள் நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழ்ச் சமூக அடையாளங்களோடு (தனித்துவத்தோடு) இருக்கப் போவதில்லை என்பதை விளங்க முடிகிறது. எனவே இதே பிரதேசங்களில் வாழ்கின்ற நகரசுத்தித் தொழிலாள அருந்ததியர்கள் (அல்லது நகரசுத்தித் தொழிலாளர்களாக இருந்து வந்த அருந்ததியர்கள்) பலரும் எந்தவித இடைஞ்சலுமின்றி கலப்புக்குள்ளாகிறார்கள். இந்த கலப்பினால், மதம், இனம், சாதி என்பனவற்றைக் கடக்க முடிகிறது. அதன் மூலம் தமது ஒடுக்குமுறை சார்ந்த ஓரங்கட்டல்களிலிருந்து மீள்வதாக உணர்கிறார்கள். தமிழ்ச் சமூகத்திலிருந்து ஓட, ஓட விரட்டப்பட்டவர்களாக, அதிலிருந்து அசிங்கப்படுத்தப்பட்டவர்களாக, தூர விலத்தப்பட்டவர்களாக இருந்து வந்ததினால், இவற்றிலிருந்து தப்பிக்கக் கூடிய சிறு இடைவெளியும் அவர்களுக்கு சாதமாகமானதே.

"அடையாளங்களைத் தற்கொலை" செய்வதற்கு மத மாற்றம் ஒரு வழிமுறையாக எப்படிப் பாவிக்கப்படுகின்றதோ அதே போல இந்தச் சிங்களக் கலப்பும் வரவேற்கப்படுகின்றது.

இது தவிர, தென் மாகாணத்தில் வாழ்ந்து வரும் கணிசமான அருந்ததியர்களும் கூட இந்தக் கலப்புக்கு உள்ளாகியிருக்கின்ற போதும் அது பெரியளவில் நிலவவில்லை என்றே கூறமுடியும். அதற்கான முக்கிய காரணம், மேற்குறிப்பிட்ட வடமேற்குப் பிரதேசத்தில் இல்லாத அளவுக்கு தென் மாகாணங்களில் சிங்கள சமூகத்தவர் மத்தியில் சாதியம் (அது மட்டுமல்ல இனவாதமும்) பலமாக உள்ளது. இந்த நிலைமையின் கீழ் அருந்ததியர்கள் ஒரு புறம் அவர்களால் சக்கிலியர்கள் என்று தூற்றப்படுகின்ற அதே வேளை தமிழர்கள் என்கின்ற பகைமையுணர்வையும் கொண்டிருக்கின்றனர். சிங்கள கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகையில் சிங்கள பௌத்தர்கள் கலப்பு குறித்த எச்சரிக்கையுடையவர்களாகவும் இருக்கின்றனர். அதே போல் வடமத்திய மாகாணத்திலும், வட மேல் மாகாணத்தின் சில பகுதிகளிலும் வாழ்கின்ற அருந்ததியர்களும் இதற்கு கிட்டிய நிலைமையிலேயே உள்ளனர். எனவே இப்பிரதேசங்களில் கலப்பு அவ்வளவு தூரம் இடம் பெறாவிட்டாலும் கூட சிங்களமயமாதல் வேறு வழிகளில் இடம்பெற்று வருகிறது. அதாவது குறைந்தபட்சம் தமிழ் பேசுபவர்கள் என்ற ரீதியில் அனுபவிக்க வேண்டிய சில அத்தியாவசிய சேவைகள் கிடைக்காததினாலும், (குறிப்பாகக் கல்வி, அரசாங்க அலுவல்கள், மருத்துவம், போன்றவை) அங்கெல்லாம் சிங்கள பெரும்பான்மை மக்களின் தயவின்றி வாழமுடியாத நிலை நிலவுகின்றதாலும், சிங்களம் கற்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். தமது பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளுக்கே அனுப்பி வருகின்றனர். சிங்கள மொழியே அவர்களது புழக்கத்தில் உள்ள மொழியாக வளர்ந்து வருகின்றது. அவர்களின் முக்கிய அலுவல்களைப் பற்றிப் பேசக் கூட சிங்கள அரசியல் பிரதிநிதிகளையே நாடி நிற்கவேண்டிய நிலை. எனவே சிங்கள மக்களின் தயவின்றி வாழ முடியாத நிலை அங்குள்ளது.

தமிழ் சமூகத்தில் எப்படி சாதிய மூடிமறைப்புகளை செய்வதற்கான எத்தனிப்புகளில், உயர் சாதி பழக்க வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் வலிந்து கடைபிடிக்க முயல்கின்றனரோ அதே போல் சிங்கள விளிம்பு நிலை சாதியினரும் உயர் சாதிப் பழக்கவழக்கங்கங்களைப் பின்பற்ற முயல்வதைக் காணமுடியும். அண்மையில் எனது மைத்துனி ஒருவரது திருமணம் நடந்தது. திருமணம் செய்தவரும் அருந்ததிய சமூகத்தவராயிருந்தாலும் அவர்களுக்கு சிங்கள (விளிம்பு நிலை) கலப்புப் பின்னணி இருந்தது. முதலிரவின் பின் பெண்ணின் கன்னித்தன்மையைப் பரிசோதிப்பதற்காக சிங்கள உயர் சாதியினர் நடத்தும் சம்பிரதாயபூர்வமான "வெள்ளைத்துணிப் பரிசோதனை" இவருக்கும் நடத்தப்பட்டதை அறிந்த போது ஆச்சரியமாக இருந்தது. (இந்தப் பரிசோதனையின் போது படுக்கையில் வெள்ளைத்துணி விரித்து ரத்தக்கறை இருக்கிறதா என அடுத்தநாள் பரிசோதிப்பர். இரத்தக்கறை இல்லாதிருந்தால், பெண் ஏற்கெனவே கன்னித்தன்மையை இழந்தவள் எனும் ஐதீகம் அவர்களுக்கு உண்டு. இந்தப் பரீட்சையில் பெண் தேறாமல் போனால், வாழ்க்கை முழுவதும் அவள் ஒரு நடத்தைக்கெட்டவளாக கருதப்படுவாள்.)

இவ்வாறான நடத்தைகளையும், நடத்தைப் பண்புகளையும் உள்வாங்கிப் போகின்ற ஒரு போக்கைக் கொண்டதாக இருந்துவரும் இந்தச் சமூகத்தின் எதிர்காலம் அவ்வளவு எளிமையான நோக்கில் பார்க்கக் கூடிய ஒன்றல்ல. அது சிக்கல் நிறைந்த ஒன்று. இந்த நிமைகளுக்கு எவர் பொறுப்பேற்பர்? இனிமேலும் இந்நிலைமை குறித்து எவர் கவனம் செலுத்துவர்? நம்பிக்கை தரக்கூடிய சூழ்நிலைகளை காண இயலவில்லை.

இவ்வாறு பரவலாக பரவி வரும் சிங்களமயமாதல் என்பது அவ்வளவு எளிதாக தட்டிக் கழித்துவிடக்கூடிய விடயமல்ல. இது இன்னும் ஆழமாக ஆராய வேண்டிய விடயம்.

-அருந்ததியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1978 அரசியல் திட்டம் - தொடர்ச்சி...

# படுகொலை அரசியலுக்குத் திறக்கப்பட்ட கதவு !

அரசியல் யாப்புச் சட்டங்கள் வெறுமனவே எழுத்தில் இருந்து விட்டால் அதனால் எவ்வித விளைவும் ஏற்படப் போவதில்லை. நடைமுறையில் அது பிரயோகிக்கப்படும் போதே பல்வேறு விளைவுகளை அடையாளம் காணமுடியும். இலங்கையில் பேரின ஆதிக்கத்தையும், அதன் விழிப்ப நிலையையும் யாப்பின் பிரயோகத்தை அவதானிக்கும் போதே தெளிவாகக் கண்டு கொள்ள முடியும்.

இலங்கையில் பேரினவாதிகள் இச்செயற்பாட்டிற்கு இரு நடைமுறைகளைப் பின்பற்றினர். பேரினமயமாக்களை புகுத்துவதற்க்கு ஒரு வித நடைமுறையையும் தமிழர் நல செயற்பாடுகளை தடுப்பதற்கு இன்னோர் வித நடைமுறைகளையும் பின்பற்றினர். பேரினமயமாக்கலை புகுத்துவதற்கு பின்பற்றப்பட்டவையாவன.

1. பேரின மயமாக்கலுக்கான அம்சங்களை யாப்பில் சேர்த்தல்.

2. யாப்பு ஏற்பாடுகள் போதாமல் இருக்கும் போது பாரளுமன்றத்தினூடு அதற்கான சட்டங்களை உருவாக்குதல்.

3. சட்டங்களிலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பேரினமயமாக்கலை மேற் கொள்ளுதல்.

4. சட்டங்கள், ஓட்டைகள் என்பன சரிவராதபோது அவற்றையெல்லாம் மீறி பேரினமயமாக்கலை மேற்கொள்ளுதல்.

தமிழர்களது தொடர்ச்சியான போராட்டங்களினால் ஏற்பட்ட உள், வெளி நிர்ப்பந்தங்கள் அரசினருக்கு தமிழர்நல ஏற்பாடுகளை யாப்பில் சேர்க்க வேண்டிய நிலையை உருவாக்கியது. எனினும் இவை நடைமுறையில் பயனளிக்காத வகையில் மற்றோர் நடைமுறையை பின்பற்றினர் அவையாவன.

1. நடைமுறையில் அதிக பயன் தரக்கூடிய விடயங்களை யாப்பில் சேர்க்காது விடல்.
2. யாப்பிலுள்ள ஏற்பாடுகளில் மைய அரசு பிடிகளை வைத்திருப்பதன் மூலம் நடைமுறையில் செயற்பட விடாது தடுத்தல்.
3. யாப்பு ஏற்பாடுகளை பேரினமயப்படுத்தப்பட்ட நிர்வாகத் துறை நடைமுறையில் செயற்படுத்தாது விடுதல்.
4. தமிழ்த் தரப்பு தானாக அதற்கு முயற்சி செய்யும் போது அதனைச் செயற்படுத்த விடாது முட்டுக் கட்டைபோடுதல்.

மேற்கூறிய இரு வித நடைமுறைகளின் பின்புலத்திலேயே நாம் 1978ம் ஆண்டு யாப்பின் பியோகத்தினை அவதானித்துக் கொள்ள வேண்டும்.

### சட்டத்துறையில் யாப்பின் பிரயோகம்


இத்தொடரில் ஏற்கெனவே குறிப்பிட்டது போல இக்காலத்தில் பேரின வாதிகள் எதிர் நோக்கிய பிரதான பிரச்சினை வளர்ந்து வந்த தமிழர்களின் விடுதலைப் போராட்டமே. இதனால் இக்காலத்தில் சட்டத்துறையின் பிரதான பணியும் விடுதலைப்போராட்டத்தை நசுக்கக் கூடிய சட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதாகவே இருந்தது.

இவ்விடயத்தைப் பொறுத்த வரை அவசரகாலச்சட்டங்களை உருவாக்கும் ஏற்பாடுகள் காணப்பட்ட போதும் அவை பல போதாமைகளைக் கொண்டிருந்தது. மூன்று மாத காலத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்க வேண்டி இருந்தமையும், அவை முழுநாட்டிற்கும் பொதுவாக இருந்தமையும் அப்போதாமைகளில் பிரதானமானவையாக விளங்கின.

ஒவ்வொரு தடவை புதுப்பிப்பதற்கான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற போதும் அவை பல உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களை கொடுக்கக் கூடியனவாக இருந்தன. அதேவேளை ஏற்பாடுகள் முழுநாட்டிற்கும் பொதுவானதாக இருந்த போது சிங்கள மக்களும் அதனால் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. இது ஆட்சியாளர்களின் இருப்புக்கே அச்சத்தைத் தரக்கூடியதாகவும் இருந்தது.

இதனால் தமிழ் மக்களை மட்டும் பாதிக்கக் கூடியதாகவும் அவர்களது போராட்டத்தினை நசுக்கும் வல்லமை கொண்டதும் நிரந்தரமானதுமான புதிய சட்டங்களை உருவாக்க முன்வந்தனர். யாப்பு ரீதியாக தமக்குக் கிடைத்த பாராளுமன்ற அதிகாரத்தைக் கொண்டே அச் சட்டங்களை உருவாக்க முனைந்தனர். அவற்றுள் முக்கியமானது புலித்தடைச் சட்டமும், பயங்கர வாதத்தடைச் சட்டமும் ஆகும்.

இதில் புலித்தடைச்சட்டம் 1978ம் ஆண்டு ஆவணி மாதம் 19ம் திகதி கொண்டு வாரப்பட்டது. 1978 சித்திரை 25 இல் புலிகள் இயக்கம் தம்மை பகிரங்கமாக வெளிப்படுத்தியதைத் தொடர்ந்தே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. புலிகளின் பிரகடனப்படுத்தும் கடிதம் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவருக்கான காரியாலயத்திலிருந்து தட்டச்சு செய்யப்பட்டது என்பது சுவாரஸ்யமான விடயம். இச்சட்டம் பின்னர் பிரேமதாச காலத்தில் நீக்கப்பட்டு தற்போது சந்திரிகா காலத்தில் திரும்பவும் கொண்டு வரப்பட்டுள்ளது. 1978ம் ஆண்டின் 16ம் இலக்கச் சட்டம் என இது அழைக்கப்பட்டது.



இச்சட்டம் பற்றிய ஏற்பாடுகள் தற்போது பத்திரிகைகளில் விபரமாக வந்துள்ளமையினால், அவற்றை விபரிக்க வேண்டிய அவசியமில்லை. இச்சட்டத்தின் மூலம் தமிழ்மக்களைப் பொறுத்தவரை ஏற்பட்ட இழப்பு. பகிரங்க அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஆயுத அரசியல் நடவடிக்கைகளுக்கும் இடையிலான இணைப்பு இல்லாமல் செய்யப்பட்டது தான். இதற்குப் பின்னர் பகிரங்க அரசியலை மேற்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அதனைக் குற்றத்துக் கொண்டு சமரச அரசியலை நோக்கி நகரத் தொடங்கியது. தொடர்ந்து 1983ல் யாப்புத் திருத்தமான 6ஆவது திருத்தச் சட்டத்துடன் அது தளத்தினை விட்டு தமிழகத்திற்கும் நகரத் தொடங்கியது. பகிரங்க அரசியலில் ஈடுபட்ட தமிழ்ச் சமூக மேல் தட்டு அணியினரும் சற்று விலகத் தொடங்கினர்.

இரண்டாவது சட்டம் பயங்கரவாதச் தடைச் சட்டமாகும். இது 1979ல் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் தமிழ் மக்களை ஈனத்தனமாக நசுக்குவதாக இருந்தது. இச் சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு அளவு கடந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வருடக்கணக்கில் சிறைவைத்து சித்திரவதை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. சந்தேக நபர்கள் என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களை கைது செய்து கொலை செய்யும் உரிமையும் வழங்கப்பட்டது. கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை உறவினர்களுக்கு காட்டாமலேயே படையினர் அழிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

சட்டம் கொண்டு வரப்பட்டு ஒருசில தினங்களுக்குள்ளேயே நவாலியைச் சேர்ந்த இன்பம் எனும் இளைஞரும் அவரது மைத்துனரான செல்வரத்தினம் என்னும் ஒரு பிள்ளையின் தந்தையும் ஒரே இரவில் கோரமாகக் கொலை செய்யப்பட்டு பண்ணைக் கடற்கரையில் வீசப்பட்டனர். பரமேஸ்வரன், ராஜேஸ்வரன் என்னும் இரு சகோதரர்களும், பாலா என்னும் இளைஞரும் காணாமல் போயினர். சுற்றிவளைப்புகள் கைதுகள் என்பன தமிழ்ப்பகுதி எங்கும் தொடர்ந்தன. இப்பிரச்சினைகளை கையாளவென பாதுகாப்பு அமைச்சுக்கு புறம்பாக லலித் அத்துலத் முதலி தலைமையில் "தேசிய பந்தோபஸ்து அமைச்சு" எனும் தனியான அமைச்சும் உருவாக்கப்பட்டது. நவீன முறையில் விசாரணை செய்யவும் சித்திரவதை செய்யவும் என பூசா முகாம் திறக்கப்பட்டது. நாள்தோறும் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அங்கு அடைக்கப்பட்டனர்.

இவ்வொடுக்குமுறையின் தொடர்ச்சியாகவே 1983ல் திட்டமிட்ட இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. இன்று பாஸ் கெடுபிடி வரை அது தொடர்கின்றது.

### நிர்வாகத்துறையில் யாப்பின் பிரயோகம்

நிர்வாகத்துறையில் யாப்பின் பிரயோகம் அனைத்தும் தமிழர் போராட்டத்தின் அரசியல் அடிப்படைகளை இல்லாமல் செய்வதையே இலக்காகக் கொண்டிருந்தது. இவற்றில் குடியேற்றமே பிரதான விடயமாக இருந்தது.

இந்தத்தடவை குடியேற்ற விடயத்தில் பேரினவாதிகள் மிகவும் இலக்கோடு செயற்பட்டனர். தமிழ் மக்களின் பிரதேசங்களை அபகரிப்பதற்கும் புறம்பாக தாயகத் தொடர்ச்சியை சிதைக்கும் வகையில் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடைப்பட்ட பகுதியில் குடியேற்றங்களை மேற்கொள்வதிலேயே அக்கறை செலுத்தினர். இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இடையேயான மணலாற்றுப்பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். போராளிகள் வடக்குக் கிழக்கிற்கான போக்குவரத்திற்கு தரைப்பாதையை நம்பியிருந்த சமயம் அதனை முறியடிக்கும் வகையிலேயே இக்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு வெலிஓயா என பெயரும் இடப்பட்டது.

இக்குடியேற்றத்திற்காக தமிழர்களுக்கு சொந்தமான நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் அடங்கிய கென்ற் பண்ணை, டொலர் பண்ணை என்பனவும் அபகரிக்கப்பட்டன. இப்பண்ணைகளில் 1977 இன அழிப்பில் அதிகளான இந்திய வம்சாவழி தமிழர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், மனித முன்னேற்ற நடு நிலையம், காந்தீயம் போன்ற நிறுவனங்கள் அவ் அகதிகள் குடியேற்றத்திற்கு இலட்சக்கணக்கில் செலவு செய்து குடியிருப்புகளையும், விவசாயத் தோட்டங்களையும் அமைத்திருந்தன. இவையெல்லாம் அபகரிக்கப்பட்டதோடு அவர்களும் அவ்விடத்தினைவிட்டு துரத்தப்பட்டனர். அவ்விடங்களில் சாதாரண சிங்கள மக்கள் குடியிருக்க அஞ்சியதால் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கிரிமினல்களே அங்கு குடியேற்றப்பட்டனர்.

மலையக மக்களின் தலைவரான தொண்டமானும் செல்லச்சாமியும் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த போது இவை நடைபெற்றன என்பது தான் துரதிஷ்டமான விடயம். அவர்களும் பெயருக்கு சில கண்டன அறிக்கைகளோடு தமது செயற்பாட்டினை நிறுத்திக் கொண்டனர். தமது பதவி சுகத்திற்காக இதற்கு மேல் அழுத்தங்களைக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை.

இக் குடியேற்றத்திற்கு அனுராதபுரம் மாவட்டத்துடன் போக்குவரத்து செய்யக்கூடியதாக வீதிகள் உருவாக்கப்பட்டன. குடியேற்றத்தின் நலன்களைக் கவனிப்பதற்கான அலுவலகமும் அனுராதபுரம் மாவட்ட அரச செயலகத்தில் உருவாக்கப்பட்டது. சிவில் அதிகாரிகளோடு இராணுவ அதிகாரிகளும் இதன் செயற்பாடுகளுக்கென நியமிக்கப்பட்டனர். இப்பிரதேசத்தினை "வெலி ஓயா" மாவட்டம் என்ற பெயரில் தனி மாவட்டமாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

குடியேற்றங்களுடன் தொடர்புடைய இன்னொரு விடயம். மர்வட்ட சனத்தொகை வீதாசாரத்தை மாற்றும் வகையில் வெட்டி ஒட்டும் நடவடிக்கையாகும். யாப்பின் படி தேர்தல், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின்படி நடைபெறுவதால் இவ் வெட்டி ஒட்டல் நடவடிக்கைகள் மூலம் மாவட்ட சனத் தொகை விகிதாசாரத்தினை மாற்றி தேர்தல் மூலம் அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றுவதே இதன் பிரதான நோக்கமாகும். இவ்வாறான மாற்றத்தினால் விகிதாசார அடிப்படையில் பாராளுமன்றத்தில் அதிக அங்கத்துவம் கிடைப்பதோடு போனஸ் ஆசனமும் அவர்களின் கைக்கு சென்று விடும் நிலை இருந்தது.

திருமலை மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் இதற்கான நடவடிக்கைகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுர மாவட்டத்துடன் இணைந்து இருந்த சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் திருமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. சில கிராம சேவையாளர் பிரிவுகளும் இணைக்கப்பட்டன. இதில் முக்கிய விடயம் இணைக்கப்பட்ட இப் பிரதேசங்கள் நிர்வாக செயற்பாடுகளுக்கு அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. தேர்தல் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் திருமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் முன்னர் மொனாறாகலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த பதியத்தலாவ, மகா ஓயா எனும் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம் செயற்கையாக அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரம் மாற்றப்பட்டு மூன்றாம் நிலையில் இருந்த சிங்கள மக்கள் முதலாம் நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இதனால் அம்மாவட்டங்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் எவ்வாறு மாற்றப்பட்டு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியுடைந்தது என்பது பற்றி முன்னைய இதழ்களிலேயே விபரித்துள்ளேன்.

உண்மையில் இவ்வாறான வெட்டி ஒட்டல்களுக்கு யாப்பில் உள்ள ஓட்டைகளே பேரினவாதிகளுக்கு பெரிதும் பயன்பட்டன.

-அடுத்த இதழில் முடியும்

-செம்பாட்டான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்களின் ஹஜ் பெருநாள் தினத்துக்கு முந்திய இரவு அமைதியாகத்தான் இருந்தது. கொண்டாட்டத்துக்கான எந்த ஆரவாரங்களும் இல்லை. சீனவெடி கொளுத்துவது கூட பொலிசாரால் தடை செய்யப்பட்டிருந்தது. முன்பு போல் பள்ளிவாசல்களில் 'தக்பீர்' கூட ஒலிபரப் படவில்லை. கோடையடித்து புழுக்கம் நிறைந்த இரவில் மூதூர் மக்கள் நாளைய பெருநாளைக்காய் அமைதிகாத்து நின்றார்கள்.

திடீரென இந்த அமைதியைக் குலைத்து எதுவென்று பிரித்தறிய முடியாத வெடிச்சத்தம் கேட்டது. பெருநாளைக்கு யாரோ கள்ளத்தனமாக வெடிகொளுத்துகிறார்கள் எனத்தான் எல்லோரும் நினைத்தார்கள். பிறகுதான் தெரிந்தது ஊருக்குள் ஒருவரை புலிகள் கொன்று விட்டார்கள் என்று.

இரவுத் தொழுகையின் பின் 8.45 மணியளவில் தான் ஹஸன் என்ற நபர் அவரது தலைக்கு மட்டுமே வைக்கப்பட்ட புலிகளின் பன்னிரண்டு துப்பாக்கி வேட்டுக்களால் கொல்லப்பட்டார். முஸ்லிம்கள் போல் தொப்பியணிந்து வந்த நால்வரில் இருவர் வீதியில் நிற்க ஏனைய இருவரே வீட்டுக்குள் சென்று காய்ச்சலில் படுத்திருந்த இவரைக் கொன்றுள்ளனர்.

ஒரு ஊரின் பெருநாளையே அதிர்ச்சிக்குட்படுத்தும் வகையில் இவர் கொல்லப்பட்டதற்கான காரணம் என்ன என்பதுதான் எல்லோருக்கும் முதலில் எழுந்த கேள்வி.

சுமார் ஆறுமாதங்களுக்கு முன்னர் இறக்கக்கண்டியில் வைத்து புலிகளின் படகொன்றையும், அதில் பயணம் செய்த முக்கிய நபர்களையும் காட்டிக்கொடுத்தார்கள் என்று சில முஸ்லிம் மீனவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இவர்களைப் பிடிப்பதற்கென்று இறக்கக்கண்டியைச் சேர்ந்த பல முஸ்லிம்களை புலிகள் பணயக்கைதிகளாகப்பிடித்து வைத்திருந்து பின்னர் விடுவித்திருந்தனர். காட்டிக்கொடுத்தவர்கள் என்ற புலிகளின் சந்தேகத்தில் இருந்த நபரே கொல்லப்பட்ட ஹஸன் என்பவர் என்று சொல்லப்படுகிறது.

இவர் இறக்கக்கண்டியைச் சொந்த இடமாகக்கொண்டவர். மூதூரில் திருமணம் முடித்த இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. இவர்களில் ஒரு பிள்ளை தந்தைக்கு தீர்க்கப்பட்ட வேட்டுக்களில் சில வயிற்றில் பட்டு கடும் காயங்களுக்குள்ளாகி திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கொல்லப்பட்ட நபர் சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு முன்தினமே ஊரிலிருந்து வந்து சுகவீனமுற்ற நிலையில் வீட்டில் தங்கியிருந்துள்ளார். இவரை நீண்ட நாட்களாகவே பழிவாங்கக் காத்திருந்த புலிகள் பெருநாளைக்கு மனைவி, பிள்ளைகளிடத்தில் வருவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்து சந்தர்ப்பம் வாய்த்தபோது கொன்றிருக்கின்றனர்.

மூதூரின் மற்ற இடங்களைப்போன்று ஊர்வாசிகளல்லாதவர் அதிகம் நடமாடாத பகுதியான தக்வா நகருக்குள் புலிகள் எப்படி வந்தனர்? இவர் ஊருக்குள் வந்தது காய்ச்சலில் படுத்திருப்பது இவர் இருக்கும் வீடு எது என்பதெல்லாம் புலிகளுக்கு எப்படித் தெரிய வந்தது என்பது மக்களைப்போலவே இராணுவத்திற்குமுரிய கேள்விகளாகும். உள்ளூர் 'எட்டப்பன்' ஒருவனால்தான் இவர் காட்டிக்கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது இராணுவத்தின் முழு நம்பிக்கையுமாகும். பெருநாள் தினத்தன்று இவரின் சடலத்தைப் பார்க்க வந்த இராணுவப்


பொறுப்பாளர் ஒருவர் அங்கு நின்ற மக்களை ஒன்று கூட்டி இது பற்றி விசாரித்தார். 'உங்களில் ஒருவர் தான் இவரைக்காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? என அவர்அங்கு குழுமியிருந்தவர்களிடம் வினவி, காட்டிக் கொடுத்த நபர் எனக்குத்தெரியும். அவரை இப்போது கூட்டிச் செல்வேன். அதற்குமுதல்அவராக முன் வந்து சொல்லட்டும் என்றார். யாரும் முன்வாரததால் ஆள் மாறி ஆள் முகம்பார்த்துக்கொண்டிருந்தனர். பின்னர் அந்த இராணுவ அதிகாரி 'ஜஹார் என்பது யார்?' எனக்கேட்க வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் நான்தான் என்றான். 'எங்களோடு வா' என்று அவனை அழைத்துச் சென்ற இராணுவத்தினர் யாரும் முகாமுக்குத்தேடி வரவேண்டாம் என்றும் எச்சரித்துவிட்டுப் போயினர்.

இராணுவம் கூட்டிச்சென்ற இளைஞன் தான் ''புலிகள் பின்னாலுள்ள மரப்பாலத்தால் வந்து அந்த ஒழுங்கையால் நுழைந்து இருவர் வீட்டின் முன் நிற்க மற்ற இருவரும் வீட்டிற்குள் போய்ச் சுட்டனர்'' என்று விளாவாரியாக சம்பவத்தை விபரித்துக் கொண்டிருந்தவன்.

முஸ்லிம்கள் போன்று ஆடையுடுத்தி வந்ததாலும் சந்தேகப்படும்படி பெரிய ஆயுதங்களுடன் வராததாலும், ஹஸன் வெளியூர்க்காரர் என்பதால் வேறு நண்பர்களாயிருக்கலாம் என்று வந்தவர்களுக்கு குறித்த நபர் இடம் காட்டியிருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தாலும், இராணுவத்தினர் இது 'எட்டப்பன் வேலை' என்றே அடித்துச் சொல்கின்றனர்.

இராணுவம் சொல்வதன்படி புலிகளுக்கு ஜஹார் தகவல் சொல்லியிருக்கலாம். ஆனால் ஜஹார் பற்றி இராணுவத்திற்கு யார் சொன்னது என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 'நெருப்பில்லாமல் புகையாத சம்பவத்தில்.. புலிகளே ஜஹாரையும் வேறுமாதிரி பழிவாங்கத்திட்டம் தீட்டி இராணுவத்திற்கு அநாமதேயமாக தகவல் தெரிவித்திருக்கலாம் என்றும் சந்தேகப்படவும் செய்கிறார்கள் சிலர்.

ஏனெனில் மூதூரைப்பொறுத்தவரை முஸ்லிம்களுடனான புலிகளின் நடவடிக்கைகள் எந்த விதத்திலும் நன்மை தருவதாக இல்லை.



இவர்கள் கடத்தப்பட்டு விடுவிக்கப்படாததால் ஊர் சற்று பதற்றமடைந்திருந்தது. கடத்தப்பட்ட இவர்கள் இரண்டு நாட்களின் பின்னே விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் மூதூர் பொது மைதானத்திலிருந்து கண்களைக்கட்டி மிக நீண்ட தூரம் அழைத்துச் சென்றுள்ளனர். அத்துடன் இவர்கள் எதுவித தொல்லைப்படுத்தலுக்கும் உள்ளாகாதவகையில் நடந்து கொண்டனரென்றும் அறிய முடிகிறது.

மூதூருக்கு அண்மையிலுள்ள இன்னொரு முஸ்லிம் கிராமமான தோப்பூரிலும் முஸ்லிம்களைப்பாதிக்கின்ற பல சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. கடந்த

இவைதவிரவும் மீன்பிடித் தொழில் செய்யும் அநேக முஸ்லிம் மீனவர் களது படகுகளும் அடிக்கடி புலிகளினால் கடத்திச்செல்லப்பட்டு, விடுவிக்கப்படுவதற்கு அவர்களால் செலுத்த முடியாத அளவுக்கு பணம் கோரப்படுகிறது. மிக அண்மையில் கூட இரண்டு இயந்திரப்படகுகள் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு 'கவனிப்புக்களின்' பின்னர் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒரு மீன்பிடிப் படகில் சென்ற சுமார் எட்டு முஸ்லிம்களையும் அப்படகையும் புலிகள் பிடித்து வைத்துள்ளனர். இப்படகு சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமானதென்றும், எட்டு மீனவர்களும் கிண்ணியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்

துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இவர்களுடன் பெருநாள் தினத்தன்று, இராணுவத்தால் ஹஸன் கொலை தொடர்பாக அழைத்துச்செல்லப்பட்ட ஜஹார் என்பவரும் கண்களைக் கட்டிய நிலையில் அழைத்துச் செல்லப்பட்டார். 12ம்திகதியளவில் இவர் திருமணம் முடிக்க இருந்ததாகவும் இவர் கொடுத்த தகவல்களுக்காக புலிகள் ஐம்பதினாயிரம் ரூபா கொடுக்க இருந்ததாகவும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹஸன் கொலை தொடர்பில் இவர் போக மேலும் இருவர் கைது செய்யப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

கடற்படையினரால் கைதான மீனவர்களின் படகுகளில் ஆயுதங்கள்

ரண்கள் புலி
வதாலும்
படுகின்றன
தினம் பால
காவலரண்
பதட்டம் நி
மக்களில் ப
தனர். பு
(14.4.98)
பொலிஸ்
தாக்குதலுக்
1.15 அள
தாக்குதலி
ஷாபி நகல
முஸ்லிம் சி
லப்பட்டுள்

இதே தி
மணிபோல்
சேர்ந்த
சுட்டுக்கொ
வத்திலோ,
இந்த நபர்
கான காரண
தெரியவில்
முன்னர் இ
வாலிபரும்
பிணக்குப்ப
அந்த வா
பார்த்துக்
எச்சரித்து
அவரின்
தொடர்பு
காரணமென்
இன்னுமொ
கொ[illegible]
நடந்த[illegible]
ரண் தாக்கு
பட்டவர்க
சாலைக்கு
ஈடுபட்டதா
தமிழ் நபர்
சாடும் வ
அதற்காக
பட்டுள்ளா
தெரிவிக்கி
கூட புலிகள்
தூரம் அச்சு
கலாம் எ
காட்டுகிறது

இச்சம்பவா
சில நிகழ்
பெற்றுள்ள

ஹஸ[illegible]
வத்தா[illegible]
என்பவர்
அடிப்படை
களாக ஒரு

# மூதூர் : போரும் பொது மக்க

வேறெங்குமில்லாதவிதத்தில் முஸ்லிம்களிடம் பணம் அறவிடும் நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. எப்போதும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சுறுத்தல் மக்கள் மத்தியில் நிலவிக்கொண்டேயிருக்கிறது.

கடந்த 22.3.98 அன்று கூட மூதூர் முஸ்லிம்கள் நால்வரை புலிகள் கடத்திச்சென்று பணக்கோரிக்கை விடுத்திருந்தனர். அப்துஸ் ஸமது, ரஸில், சித்தீக், ஆகிய நால்வரையே மூதூரின் பல்வேறு இடங்களில் இருந்து ஒரே நாளில் கூட்டிச்சென்று ஒருவருக்கு தலா ஒரு லட்சம் கோரியிருந்தார்கள். பின்னர் ஏதோ ஒரு தொகை வழங்கப்பட்டு ஆட்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். மூதூரில் வருடாந்தம் கொண்டாடப்படும் புஹாரி கந்தூரி தினத்திற்கு முன்னர்

02.04.1998 அன்று தோப்பூர் பொலிஸ் நிலையத்தைத்தாக்க வந்த புலிகள் முஸ்லிம்களின் கடைகளை கொள்ளையிட்டுச் சென்றதுடன் ஒரு கடைக்கு தீவைத்தும் சென்றுள்ளனர். புலிகள் நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்கள் சிலரும் காயமடைந்துள்ளனர். இது பற்றி தினமுரசில் வந்த செய்தியில் பொலிஸார் இல்லாத பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு அங்கிருந்த பொருட்களே பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்களின் கடைகளிலிருந்த உடைமைகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளன. பொருட்கள் சூறையாடப்பட்ட கடைகளில் ஒன்று முன்னர் புலிகளினால் கொல்லப்பட்ட அபுஉபைதா என்பவரின் சகோதரருக்குச் சொந்தமானதாகும்.

படுகிறது.

புலிகளால் இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள் போக படையினராலும் முஸ்லிம்கள் பாதிப்புறும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

ஹஜ் பெருநாள் தினத்துக்கு மறுநாள் கடலில் மீன்பிடித்ததாகக் கூறப்படும் பல முஸ்லிம்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருமலை கடற்படைத்தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பத்துப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றதாகக் கூறப்படும் முப்பதுக்கும் மேற்பட்ட மீனவர்களை 4 கடற்படைப் படகுகளில் வந்த படையினர் கைது செய்து கண்களைக் கட்டி மூதூர் இறங்கு துறைக்கு காலை 10.30மணிபோல் கொண்டுவந்தனர். பின்னர் இவர்கள் அனைவரையும் திருமலைத் தளத்

இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர்கள் அனைவரும் முஸ்லிம்களாக இருக்கமாட்டார்கள் என்ற ஊகமும் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், பெருநாள் தினத்துக்கு மறுநாள் அதிகமான முஸ்லிம்கள் கடலுக்குச் சென்றிருக்கமாட்டார்கள். இவர்கள் இறால்குழியைச் சேர்ந்த தமிழர்களாக இருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது. எனினும் பலரது தகவலின்படி இவர்கள் முஸ்லிம்கள் என்றே அறியப்படுகின்றது. அத்துடன் இதுவரை இவ்வளவு தொகையானோர் கைதானதில்லை என்பதாகவும் பலர் தெரிவிக்கிறார்கள். கைதான இவர்கள் பற்றி இதுவரை எந்தத் தகவலும் பெறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சில முஸ்லிம் கிராமங்களை அண்டியுள்ள இராணுவ, பொலிஸ் காவல

உள்ளூர் முஸ்
தாகவும் அவ
வத்தினரால்
தாகவும், அ
விடுவதற்கு
வருவதாகவும்
தெரிவிக்கின்ற
தெரிவிக்கப்ப
படி பெருநாள்
இராணுவப்
இருந்த கஸ
செய்த நபர்
தாகவும் அவ
தொடர்பில்
தொடர்புடை
கவும், அதன்
செய்யப்பட்ட
வரையும்
கொன்றுவி
அன்றிரவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ன் தாக்குதலுக்குள்ளா
லிம்கள் பாதிக்கப்
பருநாளைக்கு மறு
க்கிராம இராணுவக்
கப்பட்டதால் அங்கு
யது. அத்துடன் ஊர்
கருக்குள் வந்திருந்
ட்டு தினத்தன்றும்
தூர் 64ம்கட்டை
லரண் புலிகளின்
ாகியது. நண்பகல்
இடம்பெற்ற இத்
ன்று பொலிசாரும்,
சர்ந்த எட்டு வயது
னாருவனும் கொல்

று இரவு 8.30
பெரியபாலத்தைச்
என்ற நபரும்
ட்டுள்ளார். இராணு
லிசிலோ அல்லாத
கொல்லப்படுவதற்
துவென்று சரியாகத்
சில நாட்களுக்கு
இன்னொரு தமிழ்
க்கிள் ஒன்று
ாகவும் அப்போது
'உன்னை நான்
றேன்' என்று
ச் சென்றதாகவும்
க்கு புலிகளுடன்
அந்த வாலிபரே
சால்லப்படுகிறது.
சாரார் இவர்
ாத்தன் பகல்
பொல காவல
பின்னர் காயப்
வரும் வைத்திய
து வரும் பணியில்
அப்போது ஒரு
இவர் புலிகளைச்
ஏசியதாகவும்,
வர் கொல்லப்
றும், கருத்துத்
இந்தச் சம்பவமும்
ம்களை எந்தளவு
க்குள் வைத்திருக்
டயே எடுத்துக்

கிடையே வேறும்
மூதூரில் இடம்

ாடா இராணு
யப்பட்ட ஜஹார்
ப தகவல்களின்
களின் கையாட்
ணுட்பட எட்டு

ம்

செயற்படுவ
சிலர் இராணு
யப்பட்டுள்ள
க் கொன்று
முயற்சித்து
த் தகவல்கள்
டன் பின்னர்
ருத்துக்களின்
ன்று, முன்னர்
வுப்பிரிவில்
ரைக் கொலை
சய்யப்பட்ட
ன் கொலை
என்பவரைத்
று கூறியதா
அவரும் கைது
இவர்களிரு
அல்லது
க்குடனேயே
இராணுவ

முகாமை புலிகள் தாக்கமுயன்ற தாகவும் அறிய முடிகிறது.

அத்துடன் இரவு பகல் எந்த நேரமென்றில்லாமல் துப்பாக்கி, குண்டுச் சத்தங்கள் நகரை அதிர வைத்துக் கொண்டிருக்கின்றன. மக்களின் பாதுகாப்புக்காக ஆங்காங்கே முகாம் அமைத்திருக்கின்ற இராணுவமும், பொலிசும் தங்களைப் பாதுகாப்பதில் அல்லது தக்கவைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன. அத்துடன் மூதூரில் அமைந்துள்ள காவலரண்களில் பெரும்பாலானவை புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியே இருக்கின்றன. போதிய படைகள் இல்லாத காரணத்தால் சில முகாம்கள் வாபஸ் பெறப்பட்டும் உள்ளன.

புலிகள் எங்காவது தாக்கத் தொடங்கினால் அல்லது வந்துவிட்டார்கள் என்று செய்தி பரவினால் நகருக்குள் கடைகள் மூடப்பட்டு சமூகநிலை ஸ்தம்பிதமடைகிறது. பாடசாலையும் நேரத்துடன் மூடவேண்டிய நிலை உருவாகிறது. ஏப்.16ம் திகதி புலிகள் கட்டைபறிச்சான் ஆலிம்சேனை பகுதிக்குள் ஊடுருவிவிட்டார்கள் என்று தகவல் கசிந்ததை தொடர்ந்து அதற்கருகாமையில் இருந்த அல்-ஹிதாயா மகாவித்தியாலய ஆரம்ப வகுப்பு சிறார்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். அவ்வேளையில் குறிப்பிட்ட இடத்தில் ஏதாவது தாக்குதல் நடந்திருந்தால் அப்பாடசாலைச் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் அபாயமும் நிகழ்ந்திருக்கும்.

புலிகளின் தாக்குதல் சம்பவங்களில் இருந்து எவராவது கொல்லப்பட்டாலும் நகருக்குள் கடைகள் அடைக்கப்பட்டு ஒரு வகை துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நிலை அரச பாதுகாப்புத்தரப்பையும் கோபமூட்டியிருக்கிறது. 'உங்க ஆக்கள் அவங்கட ஆக்கள் செத்தால் கடையெல்லாம் மூடுறீங்க, எங்கட ஆக்கள் (சிங்களப்படையினர்) செத்தால் கட மூடுறதில்லை' என்று பழகிய தமிழில் முஸ்லிம்களுடன் கோபம் காட்டுகிறார்கள். அத்துடன் நகருக்குள் பல நெருக்குதல்களையும் உருவாக்குகிறார்கள்.

மீன்பிடித்தல் நேரத்தடை, போக்குவரத்துக்கட்டுப்பாடு, வீதித்தடை, நடமாட நேர வரையறுப்பு என நாளுக்கு நாள் பொது மக்கள் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

மூதூருக்குள் பெரும் எண்ணிக்கையான புலிகள் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுவதால் மூதூர் நகரம் எந்த நேரத்திலாவது தாக்குதலுக்குள்ளாகலாம் என எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அத்துடன் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் மூதூரை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவோம் என புலிகள் தெரிவித்திருப்பதாக அறியப்படுவதாலும் மக்கள் நிறைந்து வாழும் மூதூர் நகரின் பாதுகாப்புத்தளங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சம் படையினரை விட மக்கள் மனதில் கூடிக்கொண்டே வருகிறது. ஏனெனில் அவ்வாறான ஏதும் தாக்குதல் நடந்தால் அதிகம் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்களே. இப்போதும் கூட அச்சம் காரணமாக சில குடும்பங்கள் இரவில் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுகின்றன.

### மூதூரில் தமிழ் மக்கள் நிலைமை

போர் புரியும் இரண்டு தரப்பினரிடையே அப்பாவி மக்கள்தான் எப்போதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். மூதூரைப் பொறுத்தவரை நகரப்பிரதேசம் பெரும்பான்மை முஸ்லிம்களைக்கொண்டது. குறிப்பிட்ட எண்ணிக்கையான கிறிஸ்தவ மத அடையாளம் கொண்ட தமிழர்களே - குறித்த எண்ணிக்கையில் இந்துக்களும் - நகருக்குள் வாழ்கின்றனர். ஏனைய பெரும்பான்மைத் தமிழர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே அவர்களின் நிர்வாகத்தின் கீழ் வாழ்பவர்கள் - புலிகளை நோக்கி இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் எந்தத் தாக்குதல்களிலும் இவர்கள் பாதிக்கப்பட்டே வருகிறார்கள். இதனால் புலிகள் பெரும்பாலும் அங்கிருந்து ஏவுகணைத் தாக்குதல் நடாத்துவதை விடுத்து முகாம்களுக்கருகே வந்தே தாக்குதல் நடாத்துகிறார்கள். என்றாலும் அண்மைய சில நிகழ்வுகளில் பொது மக்கள் நிலைகள் மீதும் எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இறால் குழி, உப்பாறுப்பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதும் எறிகணைத் தாக்குதல்களில் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்கே என இராணுவத்தால் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அவர்களின் தற்போதைய நிலை இரண்டுங்கெட்டான் நிலையாகி பலவந்த வெளியேற்றத்துக்குட்பட்டதுபோல் உள்ளது. குறித்த இப்பிரதேசங்கள் புலிகளின் மிக முக்கிய கேந்திரஸ்தானங்கள் என்பதும், மக்களைவிட புலிகளே அங்கு அதிகம் என்பதும் பொதுவான அபிப்பிராயமாகும்.

இராணுவக்கட்டுப்பாடில்லாத பகுதிகளிலிருந்து ஊருக்குள் வரும் தமிழ் மக்கள் அன்றாடம் பொருட்கள் கொள்வனவு செய்வதிலும், பயணத்திலும்

→ 20

**மூதூர் - 1996ம் ஆண்டு புள்ளிவிபரத் தரவுகள்**

| | |
|---|---|
| மொத்த சனத்தொகை | 55,361 |
| பரப்பளவு | 179.4 சதுர கிலோ மீற்றர் |
| கிராம சேவகர் பிரிவு | 42 |
| கிராமங்கள் | 76 |
| வட்டாரங்கள் | 07 |
| மொத்த வாக்காளர் | 27,420 |
| ஆண்கள் தொகை | 27,080 |
| பெண்கள் தொகை | 28,281 |
| மொத்தக் குடும்பங்கள் | 13,122 |
| **முஸ்லிம்கள்** | 53.1% |
| குடும்பங்கள் | 6,654 |
| மொத்த எண்ணிக்கை | 29,397 |
| **தமிழர்கள்** | 46.2% |
| குடும்பங்கள் | 6,372 |
| மொத்த எண்ணிக்கை | 25,560 |
| **சிங்களவர்கள்** | 0.7% |
| குடும்பங்கள் | 99 |
| மொத்த எண்ணிக்கை | 404 |



## திருமலை - மூதூர் படகுச் சேவை :
# இன்னுமொரு தீராப் பிரச்சினை

மூதூர் மக்கள் அனுபவித்து வரும் போர்க்கால நெருக்குதல் களிடையே அவர்களின் பிரதான, ஒரே போக்குவரத்துத் தொடர்பான படகுச் சேவையும் அதிகம் நெருக்குதல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மூதூரை திருமலை நகரத்துடன் இணைக்கும் எட்டு மைல் தூர இக்கடற்போக்குவரத்துச் சேவையே இங்குள்ள ஆயிரக்கணக்கான மக்களின் பிரதான வழி. அன்றாட தொழில் தேவைகள், வேறு இடங்களுக்கான பயணம், கல்வி, மேலதிக வைத்தியத் தேவைகள் என அத்தியாவசிய விடயங்களுக்காக மக்கள் இவ்வழியினூடாகவே பயணம் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். மூதூரில் பணியாற்றும் உயரதிகாரிகளும், தினமும் இவ்வழியேதான் வந்து போக வேண்டியிருக்கிறது.

இக்கடற்போக்குவரத்துக்கான வசதிகள் காலாகாலமாக வசதி குறைவான நிலையிலும், பூரணமற்ற நிலையிலுமே இருந்து வந்திருக்கிறது. 'வத்தைகள்' எனும் பெரிய தோணிகளிலிருந்து தற்போது இயந்திரப்படகுகள் என்ற தரத்துக்கு மாறியிருந்தாலும் இச்சேவைகளின் சீரற்ற தன்மைகள் மக்களைப் பாதித்துக்கொண்டே வந்திருக்கின்றன.

1994ம் ஆண்டு பயணிகளை ஏற்றிச் சென்ற படகொன்று மூழ்கி பலரை பலிகொள்வதற்கு முன்னரான காலப் பகுதியில் தனியார் படகுகள் பல சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இதனால் சிரமமிருந்தாலும் ஓரளவு நேர ஒழுங்கிற்கு இப்படகுச் சேவைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. விபத்துக்குப் பின்னர் படகுச் சேவையில் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது. ஒரு தனியார் படகும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான படகுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அத்துடன் படகில் பயணம் செய்வோரின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டது. பயணத்திற்கு முதல் மணித்தியாலயக் கணக்கில் வெயிலில் வரிசையாக் காத்து நின்று பெயர்களைப்பதிந்து செல்லும் நிலையும் ஏற்பட்டது. இது மக்களை மேலும் மேலும் சிரமப்படுத்தியது. எந்த அவசரக் காரியங்களையும் செய்யமுடியாது மக்கள் தவித்தனர். அவசியம் ஏற்பட்டால் அதற்காக மேலதிக நாட்களை செலவளிக்க வேண்டிய தேவையேற்பட்டது. இந்த நிலைமைகளையெல்லாம் ஓரளவாவது சமாளிப்பதற்கு மேலதிக படகுச் சேவையொன்றை மக்கள் கோரி வந்தனர். இந்தக் கோரிக்கை நீண்ட காலத்தின் பின் செவியேற்கப்பட்டு இன்னொரு படகு மூதூர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதன் பிறகு இன்று வரை இம் மூன்று படகுகளுமே சேவையில் ஈடுபட்டுவருகின்றன. என்றாலும் இப்படகுகளில் பெரும்பாலும் மூன்றும் ஒரே காலத்தில் இயங்குவது குறைவாகத்தான் இருக்கின்றது. எப்போதும் ஒன்றோ, இரண்டோ பழுதடைந்துவிடும். திருத்த வேலைகளும். நீண்ட நாட்களை எடுக்கும். எஞ்சிய படகுதான் எல்லோர் தேவையையும் நிறைவேற்றும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும். அண்மையில் பல நாட்களாக ஒரு படகுதான் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதன் போதும் மக்கள் தங்கள் போக்குவரத்து வசதி கோரி குரல் கொடுத்துக் கொண்டே வந்தனர். பின்னர், சேருவில, கந்தளாய் ஊடான திருமலைக் கான நீண்ட தூர பஸ் சேவையை நடத்தும் திட்டம் அமுல்படுத்தப் பட்டது. என்றாலும், எட்டு மைல்களை 40 மைல்களால் கடக்க வேண்டியமை, ஒழுங்கற்ற பாதை, எட்டுக்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் போன்றவற்றால் இப்பயணத்தை அதிக மக்கள் விரும்பவில்லை. அத்துடன் சில காலமாக நிற்பாட்டப்பட்டிருந்த கிண்ணியாத் துறைக்கான சிறிய இயந்திரப்படகுச்சேவையும் போக்குவரத்து கஷ்டங்களைக் குறைப்பதற்காக மீளாரம்பிக்கப்பட்டது. இந்தப்படகுப் பாதையில் கடலை அண்மிய சில இடங்கள் புலிகளின் பிரதேசமாகும். இதனால் கரைக்கு அண்மையாக பயணித்த படகுகள் கடும் அலைகளுக்கு மத்தியில் ஆழமான பகுதியில் செல்கின்றன. 'கரையால போனால் என்ஜினைக் கழட்டிட்டுப் போவாங்கள்'' என்ற பயமே இதற்குக் காரணமாகின்றது.

இது தவிர, இப்பகுதியில் நடக்கும் தாக்குதல்கள், கடற்கைதுகள் போன்றவற்றாலும் பயணங்கள் ஸ்தம்பிதமடைகின்றன. கடந்த 9.4.98 அன்று கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் காரணமாக பயணம் தடைப்பட்டிருந்தது. முதலாவது 'லோஞ்சில்' போவதற்காக 7 மணிபோல் வந்தவர்களெல்லாம் 11 மணியளவிலேயே - அதிலும் குறித்த எண்ணிக்கையினரே - செல்ல வேண்டியேற்பட்டது.

இயந்திரப் படகுச் சேவை நடத்துனர்கள் மக்களின் நிலையறிந்து ஓரளவு திருப்தியான சேவையை வழங்கி வருகிறார்கள். என்றாலும் இன்னும் ஓர் சரியான நேர ஒழுங்கு பின்பற்றப்படாததால் நடத்துனர்களின் நேரப்படி காத்திருந்தும் செல்ல வேண்டியிருக்கிறது.

அத்துடன் மூதூர் இறங்கு துறையில் இராணுவ, பொலிஸ் கப்பரண் அமைக்கப்பட்டிருக்கிறது. இது முன்பொருமுறை தாக்குதலுக்குள்ளானதில் சிலர் கொல்லப்பட்டிருந்தனர். மூதூரைப் பொறுத்த வரையில் எப்போதும் தாக்குதல் அச்சம் இருப்பதால் மக்கள் குழுமும் இடமான இப்பகுதியில் இராணுவ காவலரண்கள் இருப்பது அபாயமானதாகவே படுகிறது. அத்துடன் பெருமளவான படையினர் பயணிகள் படகுகள் மூலமாக மூதூருக்கு அழைத்துவரப்படுவது வழக்கம். இது பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிற ஒன்றாகும். மிக அண்மையில் தான் கடற்படைப் படகுகளில் இவர்கள் அழைத்து வரப்படுகின்றனர். என்றாலும் சிலவேளைகளில் மக்களைவிட அதிகளவில் படையினர் குழுமியிருக்கும் மூதூர் இறங்கு துறையைப் பார்க்கையில் ஓர் அச்சம் உள்ளுக்குள் ஏற்படுகிறது.

இவ்வாறான பயணச் சிக்கல்கள் மூதூர் மக்களின் வாழ்வில் ஒன்றாகிப் போய்விட்டது. இன்னும் கூட இவர்கள் தங்கள் 'பிரதிநிதிகள்' மூலம் வசதியான படகுச் சேவையைக் கோரி வருகிறார்கள். அத்துடன் அவர்களது இன்னொரு நீண்ட நாள் கோரிக்கை ''அம்புலன்ஸ் படகுச் சேவை'' இதுவும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. பிரச்சினைகளில் வாழ்பவர்கள் மேலும் மேலும் பிரச்சினைகளோடு வாழ வேண்டும் என்ற ஏதும் விதியூடே வாழ்வது போலத்தான் மூதூர் மக்களின் வாழ்க்கை.

இவர்களின் பிரச்சினையை ஓரளவாவது உணர்ந்து தீர்க்க அரச பிரதிநிதிகள் விரும்பினால், 'கடற்படையினர் பாதுகாப்பில்லாமல், அதி வேகக் கடற்படைப் படகில் இல்லாமல், கடும் காற்றும் மழையுமான ஒரு காலத்தில் பயணிகள் படகொன்றில் வந்து ஒரு கிழமை மூதூரில் தங்கியிருந்தாலே போதும்!

சத்தியபுத்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வக்கிரம் என்றால் என்ன?

அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க புதிய மண்டபத்தில் 'மாற்று' அமைப்பினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற எழுத்தாளர் டானியலின் படைப்பாக்கம் தொடர்பான இலக்கியக் கலந்துரையாடல் ஒன்றின் போது இந்தக் கேள்வி எழுப்பப் பட்டது.

எழுத்தாளர் டானியல் பற்றிய தனது அவதானிப்புக்களைத் தெரிவித்து முதலில் பேசிய ரஞ்சகுமாரையும், அவரைத் தொடர்ந்து அவர் தெரிவித்த சில கருத்துக்களை தனது பாணியில் விளக்கிப் பேசிய ரவீந்திரனையும் தொடர்ந்து சபையோரும் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

டானியல் ஒரு நாவலாசிரியராகவே பரவலாக அறியப்பட்டிருக்கிறார் என்ற போதும், அவரின் படைப்பாற்றலுக்குச் சிறந்த ஆதாரமாக விளங்குபவை அவரது சிறுகதைகளே என்றும், அவரது சிறுகதைகளில் சில இலங்கையின் முதற்தரமான சிறுகதைகளுடன் வைத்தெண்ணப்படக் கூடியவை என்றும், அவரது 'டானியல் கதைகள்' என்ற தொகுதியில் உள்ள 'தக்காளிப்பழங்கள்' ஒரு அற்புதமான சிறுகதை என்றும் ரஞ்சகுமார் தனது பேச்சின்போது தெரிவித்தார். டானியல் தனது வாழ்நாளில் பல உண்மைகளை தரிசித்தும் அறிந்தும் இருந்த போதிலும் அவற்றைச் சொல்லத் தயங்கினார். குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைதொடர்பான விடயத்தில் அவர் தான் அனுபவ ரீதியாக அறிந்த உண்மையை விட்டு விட்டு, தனது கருத்துக்களைப் பிரதானப்படுத்துவதில் கவனம் செலுத்தினார். உண்மைகளைப் பகுதி உண்மைகளாக சொல்லும் நிர்ப்பந்தத்தை அவர் தனக்குள் உருவாக்கிக் கொண்ட படுத்தப் படுகின்றது என்பதே முக்கிய மானது என்ற கருத்து அங்கு முன்வைக்கப் பட்டது.

சிந்தனைக்குரிய இந்தக் கேள்வி ஒரு முக்கியமான கேள்வியாகும்.

டானியலிடம் வக்கிரமான அல்லது விகாரமான அல்லது பிறழ்வுபட்ட ஒரு பார்வை குறிப்பாக பாலியல் குறித்து அப்படிப்பட்ட ஒரு பார்வை இருந்தது என்று கூறுவதன் மூலம், அவரது பார்வை இலக்கியவாதிகளால் பரிகசிக்கப்படுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இந்த மாதிரியான ஒரு விமர்சனம் எண்பதுகளின் ஆரம்பத்திலேயே யாழ்ப்பாணத்தில் யேசுராசா போன்றவர்களால் முன் வைக்கப்பட்ட ஒன்று தான். தமிழ் நாட்டில் கூட இத்தகைய விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

டானியலின் படைப்புகளின் குறிப்பாக நாவல்களின் பலவீனத்தின் அடிப் படையே இதுதான் என்பது போலவும் அவரிடம் இருந்த விகாரமான அல்லது வக்கிரமான மனோ நிலையே அல்லது பார்வையே அவரது படைப்பாற்றலைக் கெடுத்தது என்பது போலவும் விமர்சனங்கள் வந்ததுண்டு. இன்னும் ஒருபடி மேலே போய் அவரது படைப்புகளை நிராகரிக்கப் போதுமான காரணமாகவும் இது சொல்லப்பட்டு வருகிறது.

ஆனால் எல்லோரும் கவனிக்க மறந்து விடுகின்ற இரண்டு விடயங்கள் இங்கே இருக்கின்றன. ஒன்று, இந்த 'விகாரத்தின்' அல்லது 'வக்கிரத்தின்' பின்னால் இருக்கின்ற அரசியல். இரண்டாவது, இதை விமர்சிக்கின்ற அரசியல் அல்லது பண்பாட்டின் அரசியல்.

டானியலின் படைப்பின் பலமெல்லாம் ஆவேசமும் வெளிப்பட்ட விதம் அது. அது பாலியல் வக்கிரம் அல்ல அவரது பார்வை. படைப்பின் பலவீனம் அதனால் உருவாகவில்லை. மாறாக அது படைக்கப்பட்ட விதத்தினால் உருவானது. சரியாகச் சொல்லப் போனால் அவரது படைப்பின் வெற்றியே அவரது அரசியல் தான்.

கணேசலிங்கத்துக்கு காதல் குறித்து உள்ள அபிப்பிராயமும், டானியலுக்கு உயர் சாதிய பெண்கள் குறித்து உள்ள அபிப்பிராயமும் போலத் தான் டால்ஸ்டாய்க்கு மனித விடுதலை குறித்து இருந்த அபிப்பிராயமும். அவை அவர்களது ஒரு குறிப்பிட்ட விடயம் குறித்த பார்வை. ஆனால் முன்னிருவருடன் ஒப்பிடவே முடியாதளவுக்கு டால்ஸ்டாய் மேதையாக உயர்ந்து நின்றது அவரது படைப் பாற்றலும், ஆளுமையும் தனது கருத்துகட்குரிய மனிதர்களை உருவாக்கும் அவரது முயற்சியை தூக்கி எறிந்து விட்டு வெற்றி பெற்று விட்டன. இவர்களுக்கு இது நடக்கவில்லை, அவ்வளவு தான்.

இரண்டாவது விடயம், அவரது பார்வை 'வக்கிர'மானது. 'வக்கிரமானது' என்று சொல்லுவதற்கு நாம் கொண்டிருக்கும் அளவு கோல். 'சோரம் போதல்' என்பதை ஒரு முக்கியமான விடயமாக ஏன் நாம் கருத வேண்டும்? டானியல் காட்டும் இத்தகைய சோரம் போதல் காட்சிகளை உயர்சாதிப் பெண்களை இழிவுபடுத்தும் விடயமாக நாம் கருதி விவாதிப்பது சமூகத்தின் இன்றைய சாதியச் சார்புடைய ஒழுக்கவியல் அடிப்படையில் நின்றல்லவா? நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விடுவதாக அவர் கூறுகின்றார் என்ற ஒருவகையான உயர்சாதி ஒழுக்கவியல் சார் சிந்தனையின் வெளிப்பாடாக இதைக்

தாலோ என்னவோ அவரால் பல யதார்த்தமற்ற பாத்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முற்றிலும் யதார்த்தத்திற்குப் புறம்பான காட்சிகளும் அவரது படைப்புகளில் வந்திருக்கின்றன என்று தெரிவித்த ரஞ்சகுமார், டானியலிடம் ஒருவகை வக்கிரமான பார்வை இருந்தது. உயர்சாதிப் பெண்களே சோரம் போபவர்கள். அதுவும் 'தாழ்த்தப்பட்ட' ஆண்களிடம் சோரம் போபவர்கள் என்று காட்டுவதில் டானியலின் கவனம் குவிக்கப்பட்டிருந்தது என்றார். 'தாழ்த்தப்பட்ட' சமூகத்தினரின் நாய்கள் கூட வீரம் மிக்கவையாகவும், வர்க்க உணர்வு மிக்கவையாகவும் அவரது படைப்புக்களில் வரும் என்பது ரஞ்சகுமாரின் அவதானிப்பாக இருந்தது.

ரவீந்திரன் தனது பேச்சில், டானியல் தனது வர்க்கச் சார்பினை மாற்றிக் கொண்டார். சாதியம் மட்டுமே அவரது கவனிப்புக்குரிய பொருளாக இருந்தது. அவரிடம் ஆரம்பத்தில் இருந்த உழைக்கும் வர்க்க நிலை மாறி சாதிய சார்பு நிலை மட்டுமே பின்னாளில் மேலோங்கி இருந்தது என்றார்.

இதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலின்போது (வழமையான இலக்கியக் கூட்டங்களுக்கே உரிய இலட்சணமான ஒரு நேரடித் தாக்குதலை ரவீந்திரன் அரங்கேற்றிய போதும்) பயனுள்ள கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

அந்த இடத்தில் எழுப்பப்பட்ட ஒரு கேள்வி தான் இந்த 'வக்கிரம் என்றால் என்ன?' என்ற கேள்வியாகும்.

'வக்கிரம் என்பது இலங்கை வழக்கல்ல. அது இந்திய வழக்கு Perversion என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய பதமாகவே அது பாவிக்கப்படுகிறது. Perversion என்றால் பிறழ்வு என்று நாம் பாவிக்கலாம்.' என்று கருத்துத்தெரிவித்தார் சண்முகலிங்கம் அவர்கள்.

பிறழ்வு என்பதை விட 'விகாரம்', 'மன விவகாரம்' போன்ற சொற்களும் இலங்கையில் இப்பதத்திற்கான சொற்களாக வழக்கிலுள்ளன. 'வக்கிரம்' என்ற சொல்லின் அர்த்தம் என்ன என்பதல்ல கேள்வி, அது என்ன அர்த்தத்தில் பயன் அவரது அனுபவச் செழுமையும், கதை சொல்லும் நேர்த்தியும், எழுத்தாளுமையும், அவர் சார்ந்திருந்த அரசியலும் தான். அவரது பலவீனம், அவருக்கு மட்டுமேயல்லாத, அவரது அணி சார்ந்த எல்லா எழுத்தாளர்கட்குமே வாய்த்த கருத்து மனிதர்களை உருவாக்கும் வாய்ப்பாட்டு எழுத்துக்களை உருவாக்கும் 'இலக்கிய வழிகாட்டல்' காரணமாக வந்தது. படைப்பாற்றற் திறனை வெளிக்காட்டிய பல ஈழத்து எழுத்தாளர்களை, நாணயக் கயிற்றைப் பூட்டி, நுகத்தடிக்குள் மாட்டி ஒரே தடத்தில் நடக்க வைத்த 'பெருமை' அன்றைய இலக்கியக் கோட்பாட்டாளர்களையே சாரும். அவரதும் அவர் போன்ற பிற எழுத்தாளர்கள் பலரதும் பலவீனம் அவர்களிடம் இருந்த உயர்சாதி எதிர்ப்பு 'வக்கிரம்'அல்ல. மாறாக இந்தக் கோட்பாட்டுக்கு கதையெழுதும் போக்கினால் ஏற்பட்டதேயாகும். ஆயினும் கொடுமைகள் தாமே அழிவதில்லை' போன்ற கொடுமையான கதைகளை டானியல் ஒரு போதும் எழுதியிருக்கவில்லை. அவரிடம் அவரது அணியைச் சார்ந்த மற்றெல்லோரையும் விட சிறந்த அனுபவமும் படைப்பாற்றலும் இருந்தது.

உண்மையில் டானியலிடம் உயர்சாதிப் பெண்கள் குறித்து இருந்த பார்வையை 'வக்கிரமான' பார்வை என்று சொல்வது, அவரது அரசியலை, அவர் சார்ந்து நின்ற சாதியப் பின்னணியை, அது அனுபவித்து வந்த ஒடுக்குமுறையை, கணக்கிலெடுக்க மறுக்கும் ஒரு போக்காகும். எமது இலக்கியங்களில் இத்தகைய 'வக்கிரங்கள்' தாராளமாகவே இருக்கின்றன. இராவணனால் கவரப்பட்ட சீதைக்காக இலங்காபுரியையே தகனம் செய்த கம்பராமாயணம் முதல் தனியொருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாடிய பாரதி வரை பல 'வக்கிரங்களை' நாம் கண்டிருக்கிறோம். ஆனால் அவற்றை நாம் ஒதுக்குவதில்லை. அவற்றை நாம் எமது அரசியலாக ஏற்றுக் கொண்டு விடுகிறோம். அவற்றை வக்கிரமாகக் கருதுவதில்லை.

டானியலிடம் இருந்ததும் இதுதான். அவரிடம் இருந்த எதிர்ப்புணர்வும், கொள்ள முடியாதா? 'உயர்சாதிப்' பெண் 'தாழ்ந்த சாதி' ஆணுடன் சோரம் போவதாகச் சொன்னால் அதை வக்கிரமான பார்வை' என்று முக்கியத்துவம் கொடுத்து பேசுவதற்கு காரணம் எமது உயர்சாதி கலாசார அரசியலே தானா? பஞ்சபாண்டவர்களுடன் வாழ்ந்த திரௌபதியை பதிவிரதை என்று ஏற்றுக் கொள்ள வைப்பதற்காக பிற்கால பிராமணீய சிந்தனையாளர்கள் எடுத்த அதீத முயற்சிகளுக்கு காரணமும் கூட இதே ஒழுக்கவியலே அல்லவா?

அப்படியானால், டானியலிடம் மட்டுமல்ல, அவரை வக்கிரமான பார்வை உடையவர் என்று விமர்சிக்கிறவர்களிடமும் கூட அதே 'வக்கிரம்' இருப்பதாகச் சொல்ல முடியாதா?

ஆக, வக்கிரம் என்பது ஒருவரது பார்வையை இழிவுபடுத்த, அந்தப் பார்வைக்கு எதிரான பார்வை உள்ளவர்கள் பயன்படுத்தும் ஒரு சொல். டானியலின் படைப்பில் குறையும், குற்றமும் காண்பவர்கள் கூட அவரது காலத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சார்ந்து நின்ற அவரது அரசியற் சார்பில் குறை காண முடியாது. அன்று அவர் வகித்த பாத்திரம், தனிப்பட்ட முறையில் ஒரு உரிமைப் போராட்டப் பாத்திரம் மட்டுமல்ல, முற்போக்கான பாத்திரமும் கூட. ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருந்து வரும் குரல்களில் இத்தகைய வேகங்களும் எதிர்ப்புணர்வுகளுடன் கூடிய பார்வைகளும் இருக்கவே செய்யும். ஆண்கள் என்றாலே காமுகர்கள் என்கிற ஒரு பெண்ணிலைவாதியும், தமிழ் விடுதலைப் போராளிகள் என்றாலே தம்மைக் கொன்று விடுவார்கள் என்று அஞ்சுகிற ஒரு கிழக்கு மாகாண முஸ்லிமும், சிங்களவர்கள் என்றாலே படுகொலையாளர்கள் என்று கருதும் ஒரு குடாநாட்டுச் சிறுவனும் கொண்டிருக்கும் பார்வைகளில் வக்கிரத்தை அல்ல நாம் காண வேண்டும்; அங்குள்ள அரசியலை. ஆக வக்கிரம் என்ற சொல், டானியல் குறித்த விமர்சனத்துக்கு பொருத்தமான ஒரு சொல் அல்ல என்பதே என்னுடைய கருத்தாகும்.

-அரவிந்தன்-

# ஓவியக் கண்காட்சிகள் இரண்டு

அண்மையில் தலைநகரில் இரண்டு முக்கியமான ஓவியக் கண்காட்சிகள் இடம்பெற்றன. ஒன்று, யாழ்ப்பாணத்து ஓவியக் கலைஞர் சனாதனனின் தனிநபர் கண்காட்சி. மற்றையது பெண்கள் தினத்தை நினைவு கூருமுகமான பல்வேறு பெண்களின் ஓவியக் கண்காட்சி.

சனாதனன் இந்தியாவில் நுண்கலை ஓவியத் துறையில் பட்டம்பெற்ற இளம் ஓவியர். பல்வேறு கண்காட்சிகளை நடாத்தியவர். (இவரின் ஓவியங்கள் பற்றிய அறிமுகக் கட்டுரையொன்று சரிநிகர் இதழ் 143ல் வெளியாகியிருந்தது) எனினும் குறித்தமட்டத்துள் அறியப்பட்டவராக இருந்த இவரின் சுமார் 19 ஓவியங்களின் (வர்ணம், கறுப்பு வெள்ளை) கண்காட்சியும், விற்பனையும் கொழும்பு, தர்மபால மாவத்தையிலுள்ள 'ஹெரிடேஜ் ஆர்ட் கலரி'யில் இடம்பெற்றது.

யுத்த கால நெருக்குதலில் மனித இருப்பைப் பார்க்கின்றன இவரது ஓவியங்கள். யுத்தச்சூழலில், விடுதலைக்கான போராட்டச் சூழலில் வாழ்ந்த இவர் ஓவியங்களில் இன்றைய அரசியலை தனித்துவமான பாணியில் வெளிப்படுத்துகின்றார். கலை, இலக்கிய ஊடகங்களூடாக இன்று பல்வேறு மட்டத்தில் அரசியல் பேசப்பட்டும், பிரக்ஞை ஏற்படுத்தப்பட்டும் வருகின்றது. அந்தவகையில் இவரின் ஓவியங்களும் ஈழத்தின் ஒரு மக்கள் கூட்டத்தின் இருப்பின் அரசியலை பல்வேறு மட்டங்களுக்கு எடுத்துச்செல்கின்றது. இக்கண்காட்சியின் ஆரம்ப தினத்தன்று பல்வேறு சமூகத்தவர்களும், வெளிநாட்டினர் சிலரும் வந்திருந்து ஓவியங்களை நன்கு அவதானமாகப் பார்த்ததுடன், பல்வேறு கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கலை ஊடாக எம்இருப்பை இவர்கள் தெரிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாய் இது இருந்ததெனலாம்.

இவரின் வர்ண ஓவியங்களைவிட கறுப்பு வெள்ளையாலமைந்த மென்கோட்டு ஓவியங்களே அதிக அழுத்தத்தை தந்தன என்பது பலரதும் அபிப்பிராயமாகும்.

* * *

'பெண்கள் தொடர்பூடகக்கூட்டமைப்பு', 'சூரியாபெண்கள் அபிவிருத்தி நிலையம்' போன்ற பெண்கள் அமைப்பு உட்படவான பல்வேறு பெண்கள் அமைப்புகள் பெண்களின் ஓவியக் கண்காட்சியொன்றை அண்மையில் கொழும்பு கலாபவனத்தில் நடாத்தின.

''பெண்களின் படைப்பாக்கங்களின் கொண்டாட்டம்'' என்ற மகுடமிட்டு பெண்கள் தின நிகழ்ச்சியில் ஒன்றாகவே இக்கண்காட்சியும் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சமூகத்தையும் சார்ந்த பெண்களது 100க்கும் மேற்பட்ட ஓவியங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இந்த ஓவியங்களை இரண்டு வகையாக வகைப்படுத்தக்கூடியதாக இருந்தது. ஒன்று, மரபார்ந்த ஓவியர்களின் மரபார்ந்த ஓவியங்கள். இவ் ஓவியங்கள்தான் அதிகமாக இடம்பெற்றிருந்தன. மற்றையது, ஓவியக்கலையை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தி பிரக்ஞைபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற ஓவியங்கள். இவை குறைவாக இருந்தாலும் நிறைவாக இருந்தன. வாசுகி, அருந்ததி போன்று அறியப்பட்ட பெண் ஓவியர்களின் பெண்கள் மற்றும் அரசியல் பற்றிப்பேசுகின்ற ஓவியங்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வாசுகியின் ஓவியங்களில் வர்ணங்கள் அழுத்தம் தருகிற வகையில் பிரயோகிக்கப்படாதது ஒரு குறைபோலத் தெரிகிறது. இவர்கள் தவிர இன்னுமொரு தமிழ்ப்பெண்ணின் ஓவியங்களும் நன்றாக இருந்தன. சிங்களப்பெண் ஓவியர்களில் அனேகரும், முஸ்லிம் பெண்களும் அழகியல் பார்வை கொண்டவர்களாகவே உள்ளனர். நிலந்தி சந்திரிகாவின் 'இராணுவ வல்லுறவு' என்ற ஓவியமும், லக்மினி சம்பிகாவின் 'விடுதலை' என்ற ஓவியமும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவாய் அமைந்திருந்தன. பொதுவாக எல்லோரும் ஓவியத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதுபற்றி இன்னும் சொல்லவேண்டியிருக்கிறவை:

இக்கண்காட்சியில் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டும் என்ற வகையில் அவர்களால் வரையப்பட்ட எல்லாவ்வகையான ஓவியங்களையும் காட்சிக்கு வைத்திருந்தனர். பெண் ஓவியர்கள் 'பெண்களை' தங்கள் பார்வையூடாக வெளிப்படுத்துவது மாதிரியான ஓவியங்களைத் தெரிந்து வைத்திருந்தால் பெண்கள் தினக் 'கொண்டாட்டத்துக்கு' ஓர் அழுத்தத்தை தந்திருக்கும். ஓவியங்களில் அழகை மட்டுமே ரசிக்கிற ஏற்பாடுகளை பெண்கள் அமைப்புக்களுமா செய்ய வேண்டும்?

பெண்கள் தின நிகழ்வுகளில், பெண்ணுரிமைக்காகப் பாடுபடும் அமைப்புக்கள் பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் படைப்புக்களை வைத்திருந்தால் பயனுள்ள நிகழ்வை நடாத்தியதாய் இருந்திருக்கும். அழகுகளுக்குள் உணர்வுகள் மறைந்து போவதும், பத்தோடு பதினொன்றாய் 'பெண்கள் நன்றாக வரைகிறார்கள்' என்று கண்காட்சிகள் அமைந்து போவதிலும் எம் போன்ற பார்வையாளர்களுக்கு உடன்பாடில்லை.

'நாம் பெண்கள் தின நிகழ்ச்சிகளில் ஒன்றாய் ஓவியக்கண்காட்சியும் நடாத்தினோம்' என்று நிரல்படுத்துவது தான் இது போன்ற நடவடிக்கைகளின் நோக்கம் என்று நடாத்துனர்கள் கருதினால் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

எனினும் அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கிறார்கள்: '' இவர்களின் வெளிப்பாடுகள் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையும், அவர்களது வாழ்வின் அதிசயங்களையும் பெண்களின் மகத்துவத்தையும் வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன. இக்கண்காட்சியில் பெண்கள் தங்களது உணர்வுகளை ஆக்கபூர்வமாக வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

இந்த பல்வேறுபட்ட வெளிப்படுத்தல்களை உலகை புரிந்து கொள்ளவும், அவை உலகிற்கு ஆற்றும் பங்களிப்பையும் கண்காட்சிக்கு வருபவர்கள் புரிந்து கொண்டு அதற்குரிய அந்தஸ்தினையும், கௌரவத்தினையும் அளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.''

உஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களின் சுகாதாரம் :
# கொழும்பின் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் !

ரத்னா



அண்மையில் கொழும்பில் உள்ள 'பிரபலம் இல்லாத' டிஸ்பென்சரி ஒன்றுக்கு மருத்துவம் பார்க்கச் சென்ற எனக்கு, அங்கே இடம்பெற்ற சந்தேகத்துக்கிடமான சங்கேதப் பாஷைகள், பேச்சுவார்த்தைகள் என்னை அதிகம் யோசிக்க வைத்ததன் விளைவு, ஓர் சகிக்க முடியாத உண்மையை அனுபவித்துணரும் வாய்ப்பை பெற்றுத் தந்தது. ஓரிரு மாத முயற்சிகளின் பின், நட்பைத் தேடிக்கொண்டு சட்டவிரோதச் செயலொன்றின் நேரடி நிகழ்வைக் காணும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டேன். வெளித்தோற்றத்தில் சாதாரண டிஸ்பென்சரியாக பலருக்கு தோன்றும் அவ்வீடு, பல பெண்களின் மயான பூமியாக மாறியிருந்தமையை யாரும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லைத் தான்.

பரந்த அந்த வீட்டின் பிரத்தியேக அறைக்குள் கலவரமான முகபாவத்துடன் செல்லும் பெண்கள். ஓடித்திரியும் தாதிமார். நெடுநேரம் அமைதியாக ஆனால் குழப்பத்துடன் வாசலில் அங்கும் இங்கும், அலைந்து திரியும் ஆண்கள் என சூனியம் நிறைந்த அச்சூழ்நிலை சற்றுப் பயங்கரமானது.

அறையில் 'உஷ் சத்தமிடாதே' என வாயில் விரல் வைத்து அமர்ந்திருக்கும் குழந்தையின் படம். பகல் நேரத்திலும் மெல்லியதாக எரிந்து கொண்டிருக்கும் மஞ்சள் மின்குமிழ். சுவரோரம் போடப்பட்டிருக்கும் வாங்குகள். வரிசையாக போடப்பட்டிருக்கும் வாங்குகளில் ஒவ்வொரு பெண்ணும், ஏதோ, எதற்கோ தன்னை தயார் படுத்திக் கொண்டு இயந்திரம் போல் வரிசையாக அமருகின்றாள். டோக்கனின்படி ஒவ்வொருவரும் உள் எழுந்து போகின்றனர். கட்டிலில் படுக்கின்றனர். ஒரு தாதி உதவிக்கென. வைத்தியத்துக்கென ஒருவன். தாதி கூறத் தான் வைத்தியன் எனத் தெரிந்தது. சிறிது நேரத்தில் அரசல் புரசலாக சிறுசிறு சத்தங்கள். பெண்ணின் ஈனஸ்வரமான அழுகுரல். தாதியின் அதட்டல்... அனைத்தும் முடிந்து விட்டது. பெண் தள்ளாடியபடி வர, தாதி அவளது யாரையோ அழைத்து வர, அவன் அப்பெண்ணை அழைத்து வாங்கில் அமர்த்துகிறான். அடுத்த பெண் உள்ளே செல்லத் தயாராகின்றாள்.

உள்ளே நடந்தது என்ன? என்ற கேள்விக்குப் பதில், ஒரு நீண்ட குறடு போன்ற ஆயுதம், அப்பெண்ணின் யோனிக்குள் விடப்பட்டு அவளது கரு சிதைக்கப்படுகின்றது. யோனி வழியே செங்குருதியும், தசைத்துண்டங்களும் அவளது கரு சிதைக்கப்பட்டதற்கு அடையாளமாக வெளியேறிக் கொண்டிருக்கிறது.

அருவருக்கத்தக்க இந்நேரடி நிகழ்வை காண நேர்ந்தமை பெரும் உளவியல் தாக்கத்துடன், ஒரு விடயத்தை ஆராயும் ஆவலை உண்டு பண்ணியது. விளைவு, சுகாதாரம், ஆரோக்கியம் என்பன எவ்வளவு தூரம் சிறப்பாக பெண்களை அடைய வேண்டிய நிலையிலுள்ளது என்ற கேள்வி ஆகும். இவ்வாறான சட்டவிரோத கருச்சிதைவு நிலையங்களில் பெண்களின் உயிர்கள் துச்சமாகி விடுகின்றமை, பெண்களது சுகாதாரம், ஆரோக்கியம், உடல் நலம் தொடர்பான அரச கொள்கைகள் வெறும் ஏமாற்றுத் தானா என எண்ணத் தோன்றுகின்றது. உண்மையான நேர்மையான கொள்கை கொண்டிருப்பின், சட்டவிரோத பாதுகாப்பற்ற இவ்வாறான கருச்சிதைவுகள் எப்பொழுதோ வழக்கொழிந்து போயிருக்கும்.

இலங்கையில் சர்ச்சைக்குரிய விடயமாக பழமைபேண்வாதிகளால், ஆணாதிக்கவாதிகளினால் ஆக்கப்பட்டிருக்கும் கருக்கலைப்பு, சட்டரீதியானதாக அமைய வேண்டும் என 1995ல் பெண்கள் குழுக்கள் கோரிக்கையை முன்வைத்தன. எனினும், மதரீதியான, சம்பிரதாயபூர்வமான காரணங்கள் சுட்டிக் காட்டப்பட்டு நீதி அமைச்சு இதனைப் பிற்போட்டது.

இலங்கையில் 1883ம் ஆண்டு சட்டத்தின்படி கருக்கலைப்பு சட்டத்திற்கு முரணான விடயமாகும். இந்திய சட்டவிதிகளைத் தழுவி இலங்கையினால் இதுவரை இச் சட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. எனினும், இந்திய கருக்கலைப்புத் தொடர்பான சட்டங்கள் மீள் பரிசீலனைக்குள்ளாகி திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் நூறு ஆண்டுப் பழமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது.

கணிப்பின்படி உலக நாடுகள் முழுவதிலும் 7 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கருக்கலைப்பு சட்டரீதியாக அனுமதிக்கப் பட்டுள்ளது.

1. பெண்ணின் உயிரைக் காப்பாறுதல், 2. உடலியல் சுகாதாரத்தைப் பேணுதல், 3. உளவியல் சுகாதராத்தைப் பேணுதல், 4. பாலியல் வல்லுறவு அல்லது 5. கரு பாதிப்பு, 6. பொருளாதார மற்றும் சமூகக் காரணங்கள், 7. கோரிக்கையின் அடிப்படையில்.

மேற்கூறப்பட்ட பட்டியலில் 7வது காரணத்தைத் தவிர்த்து பிற காரணங்களின் அடிப்படையில் இந்தியாவில் கருக்கலைப்புச் சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பின்பற்றி கருக்கலைப்புக் கொள்கையை வடிவமைத்த இலங்கையிலோ, முதலாவது காரணத்தை அடிப்படையாகக் கொண்டே கருக்கலைப்புக்கு சட்டரீதியான அனுமதி வழங்கப்படுகின்றது.

சட்டரீதியான அனுமதி எவ்வாறாயினும் இலங்கையில் கொழும்பைச் சூழவுள்ள பொரல்லை, தெமட்டக்கொடை, நாவல பிரதேசங்களில் இய்ங்கி வரும் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களில் நாளாந்தம் 500 தொடக்கம் 700 கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன.

இலங்கையின் சுகாதார அமைச்சு மற்றும் மகளிர் விவகார அமைச்சு அங்கீகாரமளித்திருக்கும் பெண்கள் சாசனத்தின்படி, பாதுகாப்பான குடும்பத் திட்டங்களைப் பின்பற்ற இடமளிக்கப்படுகின்ற போதிலும், கருச்சிதைவுபற்றி எதுவும் கூறப்படவில்லை. பெண்கள் விவகார அமைச்சரான ஹேமா ரத்நாயக்கா அவர்கள் கருச்சிதைவு தொடர்பாக பின்பற்றும் கொள்கையானது, பெண்களுக்கு மிகச்சவாலாக அமைகின்ற இந்நிலைமையின் யதார்த்தத்தை புரிகின்றார்கள் இல்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது. அவரின் கருத்தின்படி ''தனிப்பட்ட ரீதியிலும் நான் கருக்கலைப்பை ஏற்கவில்லை. நம்நாடு என்ற ரீதியிலும் கருக்கலைப்பை சட்டரீதியாக்குவது பொருத்தமானது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. பாலியல் வல்லுறவுக்குள்ளாகும் பெண்களின் கோணத்தில் இது நீதியற்றது தான். எனினும், சுமார் ஒரு சதவீதமான இவ்வாறான சம்பவங்களுக்காக நாட்டின் பாரம்பரிய தொன்மைகளில் கைவைப்பது சரியென நான் நினைக்கவில்லை. குறிப்பாகத் தீர்மானங்கள் எடுக்கும் போது இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் அவர்களது மத நம்பிக்கைகளுக்கு அகௌரவம் செய்யாதிருக்க நாம் முயற்சிக்க வேண்டும்''.

எனினும், இலங்கைப் பெண்கள் கருச்சிதைவு சட்ட ரீதியாக்கப்படுவது தொடர்பாக என்ன அபிப்பிராயங்கள் கொண்டிருக்கின்றனர்? டாக்டர் ஷிராணி பண்டாரநாயக்கா அவர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி, 2,524 திருமணமான பெண்களில் (வயதெல்லை 16-29) 59%னர் கருச்சிதைவு சட்டமாக்கப்பட வேண்டும் எனச் சம்மதம் தெரிவித்திருந்தனர். இவ் ஆய்வு 17 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் சனத்தொகையில் பெண்கள் 52%னர். இவ் 52%க்கு, சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு இதுவரை கால அரசும் அரசாங்கங்களும் பெற்றுக் கொடுத்துள்ள வாக்குறுதிகள் தாம் அதிகம்.

ஒரு புறம் பெண்களின் சுகாதாரத்தை பல்வேறு மட்டங்களில் அபிவிருத்திச் செய்து விட்டோம் என அரசும், அரசைச் சார்ந்தோரும்' தமது நியாயங்களை முன்வைக்கின்றனர். மறுபுறம் பெண்களின் சுகாதார நிலைமைகள் எவ்விதத்திலும் மேம்படவில்லையென நிரூபிப்புகளையும், ஆதாரங்களையும் முன்வைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வாளர்கள் தர்க்கிக்கின்றனர். தர்க்கிப்புக்கள், விளக்கமளிப்புக்கள் எவ்வாறாயினும் பெண்களின் உரிமைகளுக்காய் நேர்மையாகப் போராடுபவர்களின் பார்வையில் சுகாதாரத் துறையில் பெண்கள் பல முக்கியமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் என சுட்டிக் காட்டப்படுகின்றது. இதன் ஒரு பரிமாணம் தான் சட்டவிரோதக் கருச்சிதைவு மரணங்கள்.

பொ.ஐ.முவின் பெண்கள் விவகார அமைச்சர் (குறிப்பாக மகளிர் விவகாரத்துக்கென தனி அமைச்சு சுதந்திரம் பெற்றதன் பின்னர் இவ் அரசாங்கத்தால் தான் ஸ்தாபிக்கப் பட்டது) ஹேமா ரத்னாயக்கா அவர்கள், அண்மையில் செய்தித்தாள் ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில், ''பெண்களின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்து அவர்களைச் சிறந்த குடும்பப் பெண்களாக்குவதே எமது பரம காரியம்' எனக் குறிப்பிட்டிருந்தார். ஆணாதிக்க அரச அமைப்பில் கொலுப்பொம்மைகளாக வீற்றிருக்கும் பெண் பிரதிநிதிகள், சம்பிரதாய பெண்ணை உருவாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சம்பிரதாய பெண்ணை உருவாக்கும் முயற்சியின் விளைவுகளாகவே பெண்களின் உயிரைத் துச்சமென மதிக்கும் பிரச்சினைகள் பல உருவெடுத்துள்ளன எனலாம்.

அடுத்த இதழில் முடியும்

*பரந்த அந்த வீட்டின் பிரத்தியேக அறைக்குள் கலவரமான முகபாவத்துடன் செல்லும் பெண்கள். ஓடித்திரியும் தாதிமார். நெடுநேரம் அமைதியாக ஆனால் குழப்பத்துடன் வாசலில் அங்கும் இங்கும், அலைந்து திரியும் ஆண்கள் என சூனியம் நிறைந்த அச்சூழ்நிலை சற்றுப் பயங்கரமானது.*

*அறையில் 'உஷ் சத்தமிடாதே' என வாயில் விரல் வைத்து அமர்ந்திருக்கும் குழந்தையின் படம். பகல் நேரத்திலும் மெல்லியதாக எரிந்து கொண்டிருக்கும் மஞ்சள் மின்குமிழ். சுவரோரம் போடப்பட்டிருக்கும் வாங்குகள். வரிசையாக போடப்பட்டிருக்கும் வாங்குகளில் ஒவ்வொரு பெண்ணும், ஏதோ, எதற்கோ தன்னை தயார் படுத்திக் கொண்டு இயந்திரம் போல் வரிசையாக அமருகின்றாள். டோக்கனின் படி ஒவ்வொருவரும் உள் எழுந்து போகின்றனர். கட்டிலில் படுக்கின்றனர். ஒரு தாதி உதவிக்கென. வைத்தியத்துக்கென ஒருவன். தாதி கூறத் தான் வைத்தியன் எனத் தெரிந்தது. சிறிது நேரத்தில் அரசல் புரசலாக சிறுசிறு சத்தங்கள். பெண்ணின் ஈனஸ்வரமான அழுகுரல். தாதியின் அதட்டல்... அனைத்தும் முடிந்து விட்டது. பெண் தள்ளாடியபடி வர, தாதி அவளது யாரையோ அழைத்து வர, அவன் அப்பெண்ணை அழைத்து வாங்கில் அமர்த்துகிறான். அடுத்த பெண் உள்ளே செல்லத் தயாராகின்றாள்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வண்ணத்துப்பூச்சியுடன் வாழ முற்படுதல்

பொ. கருணாகரமூர்த்தி

சித்தார்த்தன் கனீத்தாவுடன் என்று தான் விமான நிலையத்தில் வந்து இறங்கினானோ அன்றிலிருந்து பெர்லின் தமிழ் வட்டகை அவனை ஏதோ மழலையர் தோட்டத்தில் குண்டு வைத்த ஒரு கிரிமினலைப் போலவும், மனு சமூகத்துக்கே ஒவ்வாத பிராணியைப் போலவும் வினோதமாகப் பார்க்கிறது.

முப்பத்தியிரண்டு வயதாகியும் கட்டைப் பிரமச்சாரியாய் தனிமையில் கிடந்து மறுகிய போது அவனைக் கண்டே கொள்ளாத- அவனுக்காகப் பரியாத தமிழ்ச் சமூகம் இப்போது ஒரு தாய்லாந்துக்குமரியைக் கொண்டு வந்து இறக்கி விட்டான் என்ற மாத்திரத்தில், இவனால் எமது கலாசாரம், பண்பாடு, மரபுகள் எல்லாமே சீரழிந்து போய் விட்டதென்று கூக்குரலிடுகின்றது.

எங்கிருந்து கனீத்தாவைக் கூட்டி வருகிறான் என்ற சூட்ஷமம் மட்டும் பிரத்தியட்ஷமாகிச் சென்றால் நித்திரையிலேயே அடித்துக் கொன்று விடுவார்கள் போலிருக்கிறது.

'என்ன மச்சான்... சப்பட்டையொண்டைத் தள்ளி வந்திட்டியாம்...'

'இவளுக்குச் சப்பட்டையில்லை... வேணுமெண்டால் வந்து பார்...'

இவனுடன் கொஞ்ச நாள் ஒன்றாக வேலை செய்த நடுவயதுக்காரர் ஒருவர்,

'இவ்வளவு காலமும் ஒழுங்காயிருந்திட்டு திடிரெண்டு இப்பிடிக் குறுக்கை இழுப்பீரெண்டு நான் கனவிலும் நினைக்கேல்ல... சய்க்... இரண்டு நாள் பாங்கொக்-பார்க்கப் போன- உம்மோட தொத்திக் கொண்டு வந்தவள் எண்டால் ஐட்டம் சமசியந்தான்... எதுக்கும் காசு களஞ்சைக் கனக்க வீட்டில வைச்சிருக்காத... அள்ளிக் கொண்டு பறந்திடுவளவ...'

றெடிமேட் நற்சான்றிதழும், எச்சரிக்கைப் பத்திரமும் ஒன்றாகவே வழங்கினார்.

இன்னொருவர்-

'ச்சாய்!... தோட்டக்காட்டுப் பெட்டை எண்டாலும்... ஒரு தமிழ்ப் பெட்டையாய்ப் பார்த்துக் கூட்டியராதையுமன்... இனிப் பிள்ளையளுமல்லே - ஞங் சொங் ஷுங்- எண்டப் போகுதுகள்'

'அங்கை தான் பாரும் முதல்ல ட்றை பண்ணின்னான்... ஆனால் அங்கை யாரும் ஜெர்மனிக்கு வரத்தயாராயில்லையாம்... உம்மடை தமிழ்ப் பற்றையிட்டு எனக்குச் சதுரம் முழுக்கச் சிலிர்க்குதெண்டால் கேளுமன்...'

'மலையகத்துப் பெண் என்றால் இரண்டாந்தரந்தான்' என்ற கருத்து ஜென்மத்தில் கீரிமலையைத் தவிர வேறொரு மலையையும் கண்ணால் கண்டிராத பேர்வழிகளிடம்கூட ஜீன்ஸில் பற்றி, பிளேனில் தொற்றி ஜேர்மனியில் வந்து இறங்கி விட்டிருக்கும் அழகை என்னவென்பது?

இதுவரையில் ஒரு நாளும் சித்தார்த்தனுடன் முகங் கொடுத்தே பேசியிருக்காத வெகுதூரத்து உறவு மாமியொருவர் வலியவே போன்பண்ணி ஒரு மணிநேரம் உபதேசங்கள் நிறைந்த ஒரு விரிவுரை எடுத்தா. அதன் சாராம்சமாவது:

'அவளவை சாகஸக்காரியளாம்... குடும்பத்துக்கெல்லாம் துண்டாய் ஆகாதாம்... ஏதோ செலவளிச்சுக் கூட்டி வந்தனீர் கொஞ்ச நாளைக்கு வைச்சிருந்திட்டு கலைச்சு விடும்' என்பது தான்.

கட்டினவள மாதிரி வெளியிலயெல்லாம் கூட்டிக் கொண்டு திரியவேண்டாமாம்... உலகம் முழுக்க விஷயம் நாறிச்சென்றால் அறவே பிறகு ஒருத்தரும் பெண்தராயினமாம்...'

'அப்ப ஏன் இவ்வளவு காலமும் ஒருத்தரும் முன் வந்து பெண்தரவில்லை? என்று எழுந்து கொண்டிருந்த ஸ்பிறிங் கேள்வியை உள்ளே மடித்து மடித்து இருத்தினான். மாமியிடமே கல்யாண வயதில ஒன்றுக்கு இரண்டு பெண்களிருக்கு, இரண்டுக்கும் லண்டனிலேயோ கனடாவிலேயோ எக்கவுண்டன்ட், இஞ்ஜினியர் றேஞ்சில மாப்பிள்ளைகள் தேடுகினம்.

இதெல்லாம் முதலிலேயே சித்தார்த்தன் எதிர்பார்த்தது தான். இருந்தும் அவற்றைப் பக்கமாகத் தூக்கிப் போட்டு விடும்படி அவனுக்குத் தைரியம் தந்ததெல்லாம் கனீத்தாவின் வெளிப் படையான போக்கும் மனது நெக்குருகிப் போகவல்ல மாதிரி பல்வேறு தினுசுகளில் வெள்ளையான அவளது மந்திரப் புன்னகைகளுந்தான்.

ஒரு சமயம் ஈச்சஞ் கொட்டைப்பற்கள் முழுவதையும் காட்டி அப்பாவிச்சிறுமியாய், ஒரு சமயம் ஏராளம் வெட்கம் கலந்து, ஒரு சமயம் பச்சைக் குழந்தை மாதிரி, ஒரு சமயம் சரசமும் காதலும் சொட்ட, ஒருசமயம் குறும்பாக, ஒரு சமயம் ஸ்நேகபாவமாய், ஒரு சமயம் கருணை கனிய'.

இந்த ரசங்களையெல்லாம் கவனிக்கும் எவருக்கும் மனதுள் செல்லமாய் கடிக்கும்.

இயல்பிலேயே மயக்கம் தோய்ந்த அவள் விழிகளிலே எதற்கோவான ஏக்கமும், கொம்பு தேடும் ஒரு கொடியின் பரிதவிப்புமிருந்தது.


பத்து நாளேயான உறவில் சித்தார்த்தனை அறியாமலே அவளை ஜீவபரியந்தம் வரித்தும் அணைத்தும் கொள்ளும் காபந்துக் கரங்கள் அவனுள் எழுந்து கொண்டு விட்டன.

சித்தார்த்தன் தன் அத்தியந்த நண்பன் அமலனுடன் சேர்ந்து திட்மிட்டுவிட்டுத்தான் தாய்லாந்துக்கு சிங்கப்பூரூடாக இருவருமாக புறப்பட்டார்கள். ஆனால் அமலனோ முதலிலேயே சொல்லி விட்டிருந்தான்:

'மச்சான்... ஊரிலயிருந்து கனகாலமாய் அம்மா கொழும்புக்கு வாறதுக்கு முயற்சி பண்ணிக் கொண்டு இருக்கிறா... சிலவேளை கப்பல் ஓடத்தொடங்கி அவ கொழும்புக்கு வந்திட்டாவேயென்றால்... நான் தாய்லாந்து விஜயம் கட் பண்ணிக் கொழும்புக்குத் தான் போவன்...'

சிங்கப்பூர் வந்து இறங்கியதும் தமிழ் உணவகங்களும் தோசையும், போளியும், இடியப்பமும், வாழையிலையில் மரக்கறி சாப்பாடும், கோயிலும் குளமும், நோக்கின திக்கெங்கிலும் புடவையிலும் பஞ்சாபியிலும் காணப்பட்ட தமிழ்ச் சனங்களும் ஏதோ யாழ்ப்பாணத்துக்கே வந்துவிட்ட மாதிரி அவர்களுக்குக் குதூகலமாயிருந்தது.

அவர்கள் தங்கியிருந்த அந்த ஹொட்டலிலும் வெளிநாடுகளுக்குப் போக வந்த நம்ம ஆட்கள் நிறையப்பேர் தங்கியிருந்தார்கள். அவர்கள் தான் முதலில் இவர்களை தெக்கோ மார்க்கெட், கனீபாஸ், கல்யாணசுந்தரம், கோமளவிலாஸ், வீரமாகாளி அம்மன் கோவில் என்று கூட்டிச் சென்றார்கள். ஒரு நாளிரவு செட்டிநாட்டில் காடைக்கறியுடன் சாப்பிட்டுவிட்டு வந்து அக்கும்பலி-



டையே பீடா சக கோல்ட்லீ:ப் புகையுடன் பேசிக்கொண்டிருக்கும் போது சித்தார்த்தன் 'நாளைக்கு தாய்லாந்து எம்பஸிக்கு விசாவுக்குப் போகவேணும்.' என்று உளறினான். அமலன் கண்ணைக் காட்டி புடையனைப் போல் 'உஸ்உஸ்' என்று சீறி எச்சரிக்கவும் சித்தார்த்தனுக்கு ஒன்றுமாய் விளங்கவில்லை. அவன் அலங்க மலங்க முழித்துக் கொண்டிருக்க அமலன் ஜெர்மனில் சொன்னான்:

'தேவையில்லாத இடத்தில், தேவையில்லாத ஆட்களின் சமூகத்தில், தேவையில்லாத தகவல்களைக் கொட்டாத குரங்கே!'

'அப்படி என்னத்தைச் சொல்லிப் போட்டன்?'

'தாய்லாந்துக்குப் போறனெண்டு ஊளையிட்டாய்...'

'ஓ... ஜா... மை காஷ்... மை ட்றிப்... யாருக்கென்ன நஷ்டம்?'

'குரங்கே... மேற்கையிருந்து சிங்கப்பூருக்கு வாற சனம் சுழிச்சுப் போட்டு பிறகேன் பாங்கொக்குக்கு ஓடுறதெண்டு இஞ்சை எல்லாருக்கும் தெரியும்...- தேவையில்லாம வாயைக் கொடுத்து நாறாதை...'

'ஆமோ... அப்படியுமொன்றிருக்கோ...?'

'அப்ப நாங்கள் தாய்லாந்துக்குப் போகயில்லையெண்டு எல்லாருக்கும் சத்தமாய் சொல்லட்டே...?'

மறு நாள் காலையே அமலனின் தாய் கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டதாக தகவல் வரவும் அவன் எயர் லங்காவில் அங்கே பறக்கவும்,

சித்தார்த்தன் கூட்டத்தை காய் வெட்டிவிட்டு தனியே டாக்ஸியில் போய் தாய்லாந்து விசா எடுத்துக் கொண்டுவந்து மறுநாள் பாங்கொக் பறந்தான்.

முதல் நாள் பூங்கா, கடற்கரை, திறந்தவெளி உணவகங்கள் என்று சுற்றிப் பார்த்தான். இரண்டாம் நாள் காய் கறி, பழங்கள் குவிந்துள்ள மார்க்கெட்டுகளெல்லாம் போய் அங்கு என்ன புதிதாகக் கிடைக்குதென்று அலசினான். கொழும்பிற் போலவே புளிப்புக் குறைவான மாங்காய்த் துண்டங்களைத் தோல்சீவி அம்பரல்ல, கெக்கரிக்காய், அன்னாசி நறுக்குகளுடன் கோர்த்துக் குச்சியிற்குத்தி உப்பும் மிளகுப் பொடியும் தூவி விற்றார்கள்.

மிளகாய் வெங்காயம் போட்டு தாளித்த ஆவிபறக்கும் பெரிய சுண்டல் கடலையுடன் இறால் பொரியலைக் கலந்து விற்றார்கள். மேலும் பன்னிரண்டு வருஷங்களாய் கண்ணாலும் காணாமலிருந்த றம்புட்டான் பழம், விதைகளற்ற தேனாக இனித்த கொய்யாப் பழம், செவ்விளனி, மாம்பழம் என்று கண்டதெல்லாவற்றையும் வாங்கி ஆசை தீரச்சாப்பிடுகையில் எதுக்கும் அமலனும் கூட வந்திருந்தால் இன்னும் ஜாலியாயிருந்திருக்குமென எண்ணினான்.

றெடிமேட் உடுப்புகள் விற்கும் கடையொன்றில் நிற்கையில் மேலே வந்து விழுந்து மாரால் உரசிவிட்டு அவனைக் கடந்து அப்பாலே போன ஓர் விடலைப் பெண் நின்று திரும்பிப் பார்த்துக் கண்ணடித்தாள். அன்று மாலை இன்னொருத்தி கூட்டத்துடன் நடக்கையில் அருகாக வந்து பிருஷ்டத்தில் ஸ்பரிசித்தாள். வெளி நாட்டுக்காரன் எவனுக்காவது டொலரில் விலைபோக பின்னும் முன்னும் இளசுகள் அலைந்து கொண்டிருந்தன.

பாங்கொக் வீதிகளில் அவ்வப்போது தேமதுரத் தமிழோசை காதில் வந்து விழுந்தாலும் அவர்கள் மத்தியில் தான் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்தவன் மாதிரி நடந்து கொண்டான். மதறாஸ் றெஸ்ரோறன்டில் பிடித்துக் கொண்ட சிலரிடம் கூசாமல் 'ஐ கம் :.ப்றம் ஷிஷேல்ஸ்' என்றான்.

சித்தார்த்தனை காலையில் அரும்பி, மதியம் போதாகி, மாலையில் மலர்ந்துவிட்டிருந்த நோய் வெளியே புறப்படச் சொன்னது. ஹொட்டலுக்கு வெளியில் நின்று கொண்டிருந்த டாக்ஸிகள் ஒன்றில் ஏறி 'இரவு நேரம் பாங்கொக்கில் என்னப்பா விஷேசம்?' என்றான்.

கேட்ட பின் தான் அக்கேள்வி அபத்தமானதாகப் பட்டது. இவன் மனதைப் படித்துக் கொண்ட டிரைவர் சொன்னான்.

'றோசாப்பூக்கொத்துகளாட்டம் பெண்கள் பாங்கொக்கில் மாதிரி, உலகத்தில வேறெங்கும் பார்க்க முடியாதே?'

அப்பதிலில் தன்னாட்டுப் பெண்களையிட்டான அவனது கர்வமும் கலந்திருந்தது.

'பார்த்தால் போச்சு...' அசுவாரசியமான தொனியில் சொல்லிவிட்டு வெளியே வேடிக்கை பார்த்தான்.

டாக்ஸி -கேள்ஸ் கார்டன்- என்றொரு நைட் கிளப்புக்கு விரைந்தது. பாரிய வளவொன்றில் அமைந்திருந்த அக்கிளப்பின் வெளிவளாகத்திலும் உள்ளேயும் நிறைந்திருந்த வெள்ளைக்காரர்களைப் பார்க்க திரும்பவும் ஜெர்மனிக்கே வந்துவிட்டோம் போலிருந்தது. புறப்படுகையில் இருந்த தைரியம் மறைய, மனதில் கூச்சமும், தயக்கமும் கூட்டணி சேர்ந்தன.

'ச்சே இந்த அமலன் வெளிக்கிட்ட மாதிரியே தன் கூட வந்திருந்தால் தனக்கேன் கால் பின்னுது... கடைசியில் தனியே விட்டிட்டு காலை வாரிவிட்டானே இடியற்...' என்று சபித்தான். இதயத்தின் அடிப்பு வேகம் ஆர்முடுகியது. தேகம் வியர்த்தது.

தான் வேற்று உலகம் ஒன்றுக்கு வந்துவிட்ட மாதிரி உணர்ந்தான். கோல்ட் லீ:.பை பற்ற வைத்துக் கொண்டு சிந்தித்தான். 'நூற்றுக்கணக்கான கனவான்கள் இதே நோக்கத்தில் வந்திருக்க நான் எந்தக் கொம்பனுக்குப் பயப்பிட வேணும்? இப்படி உள்ளூரவென்றாலும் உதறல் எடுத்துக் கொண்டு நிற்கிறது அவமானம்.' தனக்குத்தானே தைரியமூட்டிக் கொண்டு இப்படிக் கிளப்புகள் ஆயிரம் கண்டவனின் பாவனையில் பார்வையில் ஒருவித அலட்சியத்தை வரவழைத்துக் கொண்டு டையை சரி பண்ணி இறுக்கிவிட்டுவிட்டு கம்பீரமாக உள்ளே நடந்தான்.

உள்ளே இப்படியான இடங்களுக்கேயான வணணம். ஊதா, றோஸ், வயலற் 'லோஜன், நியோன் விளக்குகளின் ஒளிவெள்ளம். -என்டர் த டிறகன்- படத்தில் வருவது போன்று பதினாறு திக்கிலும் கண்ணாடிச் சுவராலான பாரிய கூண்டொன்றுக்குள் இளங் குட்டிகளைக் குவித்து விட்டிருந்தார்கள். சுற்றிச்சுற்றி ஆட்கள் அக்குவாறியம் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருக்க வெள்ளை சூட் அணிந்திருந்த மாமா ஒருத்தர் ஒவ்வொரு பெண்ணினதும் அங்க லாவண்யங்களை விதந்துரைத்து அவர்களின் விலையையும் மைக்கில் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு நாளைக்கான அவர்களின் விலை மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம் பாத்துக்கள் வரையிருந்தது. ஒருத்தியை யாராவது வாங்கிக் கூட்டிக் கொண்டு போய் விட்டால் அவ்விடத்திற்கு புதியவள் ஒருத்தி வருவாள். சித்தார்த்தனிடம் வந்த மாமா 'சொர்க்கத்தின் இன்ப ஊற்று அவள் நன்றாகச் சரசம் புரிவாள்... உனக்காகத் தான் ஜனித்தவள்' என்ற மாதிரிச் சொல்லிக் கொண்டு போக அவன் காட்டிய திசையில் பார்த்தான். பிந்துகோஷ் மாதிரி ஒருத்தி இவனைப் பார்த்து புன்னகைத்தாள். அப்போதே அவனுக்கு விலா எலும்புகள் நொருங்குவது கேட்டது. அவன் முகம் போனபோக்கைப் பார்த்து ஆயிரம் பாத்துக்கள் குறைத்துக் கொண்டு கொடுக்கலாமென்று காதைக் கடித்தான்.

சீமை முயல்மாதிரி பயந்து கொண்டு தோற்றத்தில் அப்பாவி மாதிரியிருந்த ஒருத்தியை வாங்கினான். மாமா மைக்கில் 'நம்பர் 23' என்றதும் அவள் எழுந்து கூண்டின் பக்கவாட்டிலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்.

பணம் செலுத்தியானதும் அவளின் போட்டோ ஒட்டியிருந்த ஒரு பத்திரத்தைக் காட்டினார்கள். மெடிகல் :. பிட்னெஸ் சேர்டிபிகேட் என்பதைத் தவிர மீதமெல்லாம் தாய் மொழியில் கிளறியிருந்தது. ஜீன்ஸுள் நுழைந்து கொண்டு நொடியில் அறைக்குளிருந்து புறப்பட்டவள் காலங்காலமாக அவனையே காதலித்தவளைப் போல சித்தார்த்தன் கைவிரல்களைக் கோர்த்துக் கொண்டு போய் டாக்ஸியில் ஏறினாள்.

டாக்ஸியில் என்ன அவளுடன் பேசுவது என்றே அவனுக்குத் தெரியவில்லை. சற்றுத் தூரம் போனதும் அவளே பேசினாள்:

'சாருக்கு எந்த ஊர்?'

'பிறந்தது ஸ்ரீலங்கா... இப்ப இருக்கிறது ஜெர்மனி.'

'ஏன் அவ்வளவு தூரத்தில?'

சித்தார்த்தனுக்கு கொஞ்சம் புழுகவேணும் போலிருந்தது.

'உத்தியோகம்' என்றான் யோசிக்காமல்.

ஹொட்டல் அறைக்குள் வந்ததும் ஜக்கெட்டை கழற்றி ஹாங்கரில் போட்டு விட்டு கட்டிலில் அமர்ந்து கொண்டு பசிக்குதென்றாள். மேசையில் இருந்த மெனுவை அவளிடம் கொடுத்து 'வேண்டியதை ஓடர் பண்ணிக் கொள்' என்றான்.

சேர்விஸை போனில் அழைத்து தனக்கானதை ஓர்டர் பண்ணிக் கொண்டே 'சாருக்கு' என்றாள். ஒரு பெண்ணுடன் ஹொட்டல் அறையில் தனிமையில் இருக்கும் அனுபவம் தரும் பரபரப்பே இன்னும் அடங்கவில்லை அவனுக்கு. சும்மா தானும் எதையோ ஓர்டர் பண்ணிச் சாப்பிடுவதாகப் பெயர் பண்ண அவள் இறால், கோழி என்று பல ஐட்டங்களை வருவித்து நன்கு ரசித்துச் சாப்பிட்டாள்.

சாப்பாடானதும் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டு 'உனக்கும் வேணுமா?' என்று அவளுக்கும் ஒன்றை நீட்டினான்.

'உவ்வே' என்று குமட்டிக்காட்டித் 'தன்னிடம் கெட்ட பழக்கங்கள் இல்லை' என்றாள்.

அடுத்து என்ன செய்வது... எப்படி ஆரம்பிப்பது ஒன்றும் தெரியவில்லை. அவள் ஜீன்ஸையும் கழற்றி ஹாங்கரில் போட்டு விட்டு வந்து இரண்டு கைகளையும் மேலே உயர்த்திச் சோம்பல் முறித்தவாறே கொட்டாவியும் வேறு விட்டுக் கொண்டு

'ஒரே அசதி... நான்கொஞ்சம் சீக்கிரமே படுக்கலாமா?' என்றாள்.

'என்ன காரணம் அவ்ளோ அச்தி...?'

'இரண்டு பேர் (விரல்களில் காட்டினாள்) ஒரு ஜப்பான்காரனும், ஒரு பிரெஞ்ச்காரனும் இன்று பகல் பூரா என்னைப் பிசைந்தெடுத்து விட்டார்கள்...'

'உண்மையாகவா...'

பிறேஸியரை அவிழ்த்துக் காட்டினாள். எலுமிச்சை நிறத்ததான சின்ன மார்புகள் சிவந்து அங்கங்கே கன்றிப் போயிருந்தன.

'பகலிலும் வேலை செய்வீர்களோ...?'

'எப்போதுமென்றில்லை... கேஸ் வந்தால் போன் பண்ணுவார்கள்.'

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'போகாமலுமிருக்கலாந்தானே'

'பணம் வேண்டியிருக்கே... அதுவும் நாளைக்கு எனக்கு மெடிகல் செக் அப் ஐந்நூறு பாத்துக்கள் அழுதால் தான் டாக்டர் சேர்டிபிக்கேட் தருவான்.'

'இன்று நான் நாலாயிரம் பாத்துக்கள் கொடுத்தேனே... உனக்கு அதில் எத்தனை கிடைக்கும்?'

' அவங்கள் கமிஷன் நூறு போக, மீதியெல்லாம் அரசாங்கத்துக்கு டாக்ஸ் கட்டி விடுவார்களாம். ஐநூறு தான் தந்தார்கள்.'

'உண்மையாகவா...?'

தன் ஹான்ட் பாக்கைத் திறந்து ஐந்து நூறு பாத் தாள்களை எடுத்துக் காட்டினாள்.

'சரி நான் உனக்கு ஆயிரம் பாத்துக்கள் தாறேன்.'

'மிகவும் நல்ல மனது உங்களுக்கு...!'

சிகரெட்டை அணைத்து விட்டு சித்தார்த்தனும் போர்வைக்குள் புகுந்து கொண்டான். எனினும் முன்னேறத் தயக்கமாயிருந்தது. தன்னை இதுவரை வருத்திக் கொண்டிருந்த காமத்தில் பாதி விடை பெற்றுக் கொண்டு விட்டது போலிருந்தது. சும்மா அவள் மேல் கையைப் போட்டு இடையைக் கட்டி நெருக்கினான். வெந்நீர்ப்பை மாதிரி வெது வெதுப்பாயிருந்தது. எனினும் பணத்துக்கே வந்தவளாயினும் ஏற்கெனவே கசங்குப்பட்டு வந்திருப்பவளை இன்னும் தான் முகர்வது தர்மந்தானா எனமனதின் ஒருமூலை தத்துவ விசாரம் செய்யவும் இறுக்கத்தைச் சற்றே தளர்த்தினான்.

அவள் 'விஷயத்தைச் சீக்கிரம் முடித்தீர்களாயின் நான் தூங்குவேன் கொண்டமை எடுங்கள்' என்றாள்.

'கொண்டமா?'

'... ம்!'

'ஏன் நீ கொண்டரல்லயா?'

'...ப்ச்!'

'ரொம்ப அவசியமா...?'

'பின்னே உங்களுக்கு எயிட்ஸில்லையென்று எப்படி நம்பிறது?'

- நியாயந்தான் , நான் எந்தவொரு பெண் கூடவும் இதுவரை போனதேயில்லேடி- என்பதைச் சொன்னால் கூட இவள் நம்பிவிடுவாளா என்ன... இப்படி எத்தனை பேர் தான் வாக்குறுதி கொடுத்தார்களோ... இப்படி ஒரு தொழில் பண்றவள் நம்பவுங் கூடாது. இவளுடன் பேசித்தன்னை நிரூபிக்க முயற்சிப்பது அபத்தமாயிருக்கும்.

'நிஜமாக நீ கொண்டெம் கொண்டு வரவில்லையா...?'

'பெண்ணைக் கூட்டிவர முன் கொண்டெம் வாங்கி வைத்து விடவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா?'

கைகளைக் கொட்டிச் சிரித்தாள். அவனுக்குத் தன் முட்டாள்த் தனம் உறைத்தது.

'பத்து மணியாகிறதே கொண்டெம் எங்கே கிடைக்கும் இனி...?'

'கடைகள் எல்லாம் பூட்டியிருப்பார்கள்... ச்சொ.'

ரிஸெப்சனில் விசாரிக்கலாமென்று போனைச் சுழற்றினான். பெண் குரலொன்று

'ஹலோ கான் ஐ ஹெல்ப் யூ சேர்?' என்றது. வெட்கம் பிடுங்கித்தின்ன

'சொறி' என்று விட்டு வைத்தான்.

அசதியில் இருப்பவளை வெளியில் அனுப்பி 'எப்படியாவது கொண்டுவா' என்று அனுப்புவது நியாயமாகப் படவில்லை. நான் போய் இனியாரை விசாரித்து... கொண்டெமுக்காக பாங்கொக் வீதிகளில் லோலோவென்றலைந்து... வெட்கக்கேடு. மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ஒன்றுமில்லாமல் இரவெல்லாம் இவளுடன் என்ன ஜென் பௌத்தம் பற்றிய விசாரமா செய்ய முடியும்... விடியும் வரை எப்படித்தான் இவளுடன் கட்டிலைப் பகிர்ந்து கொள்வது? அவளைத் திரும்பிப் பார்த்தான். கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். பணத்துக்காக வாறவளிடம் எதையும் அனுபவிக்க முடியாதென்று சும்மாவா சொன்னார்கள்.

எரிச்சல் அதிகமாக அவளிடம் சொன்னான்: 'நீ வீட்டுக்குப் போறதென்றால் போ.'

திடுப்பென எழுந்து கட்டிலில் உட்கார்ந்தவள் கேட்டாள்:

'நிஜமாகவா?'

'யெஸ்...'

'ஏன் என்னைப்பிடிக்கலையா...'

'பிடித்தென்ன கொண்டெம் இல்லையே?'

'கொண்டெமில்லாவிட்டால் பயங்கரமான றிஸ்க்... அப்படியே நாலு இடத்தில் நேர்ந்தால் சுகாதாரமாயிருக்காதே...?'

'உன் நியாயத்தை ஒப்புக்கொள்கிறேன்... நீ போகலாம்'

'ஒன்றும் கோபமோ வருத்தமோ இல்லையே...?'

'இல்லை.'

ஆயிரம் பாத்துக்களை இழக்க வேண்டியிருக்குமே என்பதால் அவன் சொன்ன பிறகும் தயங்கிக் கொண்டு நின்றாள்.

'அப்படியாயின் நீங்களாகத் தான் அனுப்பி வைத்தீர்களென்று ஒரு துண்டு வேணும்.'

டைரியில் ஒரு தாளைக் கிழித்து எழுதி அத்துடன் ஆயிரம் பாத்துக்களையும் கொடுத்தான்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டு அவனை வணங்கி விட்டு விடைபெற்றாள்.

மறு நாள் டாக்ஸிக்காரன் சித்தார்த்தனைத் தூரத்தில் கண்டதும் பெரிதாக ஸலாம் வைத்தான்.

'கொம்பனி எப்படி?'

இவன் உதட்டைப் பிதுக்கியதைப் பார்த்து விட்டு சொன்னான்:

'உங்கள் டேஸ்ட் எனக்குப் புரிகிறது சார்... அந்த வகைப் பெண்கள் கிராமங்களில் தான் கிடைப்பார்கள்... என்ன ஒரு இரு நூறு கிலோ மீட்டர்வரை பணயம் செய்ய வேண்டி வரும்...'

'அதனாலென்ன...'

அவன் வந்த நோக்கமே அதுதானே.

(௨)

அன்றே ௨00 கி.மீட்டர் தொலைவிலிருந்த சராபுரி (நம்ம பக்கத்து ஊர்பெயர் மாதிரியில்லை) என்ற ஊருக்குப் புறப்பட்டார்கள். சற்றே மலைப்பாங்கான பகுதி அது. ஐயன்னா வளைவுகளில் காரை இலாவகமாக ஓட்டிக் கொண்டே டாக்ஸிக்காரன் சொல்லிக் கொண்டு வந்தான்.


'நாகரீகம் பரவாத கிராமம் அது. நீங்கள் இங்க ஒரு நாளைக்கு அழுத பணம் அங்கே ஒருவாரத்திற்குப் போதும்.' பேயிங் மருமகனாக 'அவர்கள் குடும்பத்தில் உங்களை ராஜா மாதிரி உபசரிப்பார்கள்.'

சராபுரி சேர்ந்து முதன் முதலில் அவன் கூட்டிப் போன இடமே சித்தார்த்தனுக்குப் பிடித்துப் போய் விட்டது.

வயதிலும் தோற்றத்திலும் அதிகம் வித்தியாசமில்லாமல் லட்டும், ஜாங்கிரியும் மாதிரி இரண்டு பெண்கள் இருந்தார்கள். மாலிகா, கனீத்தா என்று இருவரும் சகோதரிகளாம். யாரை வேணுமானாலும் வைத்துக் கொண்டு இரண்டு வாரங்கள் தங்க 3500 பாத்துக்கள் என்றார் (அப்பன்காரர்) மாமா.

எடுத்த எடுப்பிலேயே ஐயாயிரம் பாத்துக்களை வீசி அவர்களை அசத்தினான் சித்தார்த்தன்.

என்ன வகைச் சாப்பாடெல்லாம் பிடிக்குமென்று கனீத்தாவைக் கொண்டு மாமி கேட்பித்தார். உள்ளதே அரைகுறை, அதிலும் அவர்கள் பேசும் ட, ஸ, ல பேதங்களில்லாத மழலை ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள



அசாதாரண திறமை வேண்டியிருந்தது. முதலில் குளிக்க வெந்நீர் போட்டுத் தந்தார்கள். குளித்து முடிந்ததும் ஒருத்தி துவாலையைக் கொண்டு வந்து தலையை நன்கு உலர்த்தி விட்டாள். இன்னொருத்தி பெண்களுக்குச் செய்வது போல் அகில் புகையைக் கொண்டு வந்து பிடித்தாள்.

சாப்பாடானதும் இரு பெண்களையும் மாமியாரே அனுப்பி வைக்க அவர்கள் இடமும் வலமுமாக வள்ளி தெய்வானையென வந்து நின்றனர்.

கனீத்தாவின் கண்களின் அதீத காந்தம் முதற் பார்வையிலேயே அவனைக் கவர்ந்து விட்டிருந்தது. அவளிடமே அவர்கள் அவனுக்கு காட்டிய அறையினுள் தன் சூட்கேஸைக் கொண்டு போய் வைக்கச் சொன்னான்.

அவனது முதலிரவு அலாதியாய் அமைந்தது. மகா அனுபவஸ்தன் போல ஒரு சிப்பம் கொண்டெம் எடுத்துப் போயிருந்தான். ஒன்றுக்குத்தானும் வேலையிருக்கவில்லை. இவன் -எல் போட் கேஸ்- என்பதைப் புரிந்து கொண்டு அவனுக்கேற்ற விதத்தில் பாந்தமாக கனீத்தா அனுசரித்தாள். சித்தார்த்னுக்கும் அவளை விவரிக்க முடியாத வகையில் பிடித்துப் போனது. போகப்போக கனீத்தாவுடனான பிணைப்பின் ஆழம் அவளை ஒரு விலைமாது என நினைக்கவே அவனால் முடியவில்லை. அவனுக்கும் அவளுக்கும் ஏதோ ஜென்ம ஜென்மாந்தர உறவிருப்பதாகவும் அதன் தொடர்ச்சியாகத் தான் தான் தாய்லாந்து வந்து அந்தக் கிராமம் சராபுரியில் அவளைச் சந்திக்க நேர்ந்ததாகவும் எண்ண வைத்தது. வாலிபம் வந்த நாள் முதற் கொண்டு தான் கொண்ட காமத்திற்கும் விரகத்திற்கும் முதன் முதலில் அர்த்தம் கற்பித்தவள் யாராக இருந்தாலென்ன அவளுக்கு தான் ஒருவிதத்தில் நன்றிக் கடன் பட்டவனாக உணர்ந்தான். அவளைப் பிரிதல் என்பதே இயலாத காரியமாகவிருக்கும் போலிருந்தது.

மறுநாள் காலை பனிமூட்டம் படிந்து வெளிச்சம் தோன்ற ஜன்னல் வழியே கீழே மலையின் அடிவாரத்தில் வீதிகளும் வீடுகளும் உருவாகின. வெளியே செல்வதற்காக புறப்பட்ட மாமா இவன் அறைக்கு வெளியே வரும்வரை காத்திருந்து சொல்லி விட்டுத் தான் போனார்.

'ஏனப்படி...?'

'அதுதான் வழக்கம்.'

மதியம் இவன் குளிப்பதற்கு ஆயத்தமாகவும் 'மைத்துனன்' என்று சொல்லிக் கொண்டு ஒரு இளைஞன் வந்தான். அவனுக்குத் திருமணமாகி விட்டதாவும் இப்போ இரண்டு வீடுகள் தள்ளியிருப்பதாகவும் கனீத்தா சொன்னாள். அரை லிட்டருக்கும் மேல் ஒலிவ் எண்ணெய் கொண்டு வந்து அவனுடம்பெல்லாம் தேயோதேயென்று சூடுபறக்கத் தேய்த்து ஜோராக மசாஜ் செய்து விட்டான். சுகமாக இருந்தது. சித்தார்த்தன் நூறு பாத்துக்கள் கொடுக்கவும் வாங்கிக் கொள்ள கடைசி வரை மறுத்து விட்டான்.

மாலை கனீத்தாவுடன் அந்த ஊரைச் சுற்றினான். ஊரை வளைய வரும் சிறிய அருவியும், அதன் சிறு நீர் வீழ்ச்சியும், எங்கும் கோப்பியும், சோயாவும் பயிரிட்ட தோட்டங்களுமாக பசுமையாக இருந்தது சராபுரி.

இன்னொரு நாள் அங்கு கூடும் சந்தையைப் போய் வேடிக்கை பார்த்தான். அங்கும் நிறைய செங்கரும்பும், இளநீர்க் குலைகளும் வந்திருக்கவே புகுந்து விளையாடினான் சித்தார்த்தன்.

சராபுரியின் யார் வீட்டு வெள்ளைக்கார மருமகனோ ஒருத்தன் முகத்தில் தேன் நிலவுக்களை மாறாமல் ஒரு தாய்லாந்துக்காரியை அணைத்துக் கொண்டு அங்கே வந்திருந்தான்.

ஒரு இரவு வாடகைக்கார் வைத்துக் கொண்டு திருவிழா நடந்த பங்சொங் என்ற பக்கத்துக் கிராமத்திற்கு கனீத்தாவுடன் போய் நாட்டுக் கூத்தும் கிராமிய நடனங்களும் பார்த்தான். நம்மூர் நாட்டிய நாடகங்கள் போல ஆனால் பாவங்களும், முத்திரைகளும் குறைவான பல நடன நிகழ்வுகள் அங்கே நடைபெற்றன.

மாமியார் வேறு இறைச்சி, நண்டு, கணவாய், இறால், எனத் தினம் ஒரு சமையல் வேளைக்கொரு சூப்பென்றாக்கி அவனைத் திக்கு முக்காடப் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஒரு கிழமை கடந்து விட்டிருந்தது. கனீத்தாவுடன் சுற்றோ சுற்றென்று ஊரைச் சுற்றியாகி விட்டது. எனினும் பிரிதலை மனதால் எண்ணிப் பார்க்கவே முடியாததாக இருந்தது.

ஒரு நாள் அவளுடன் பேசிக்கொண்டிருக்கையில் 'நீ என்ன உசத்தி?' என்று அறிவு ஜீவித்தனமான எதிர்க் கேள்வியெல்லாம் போடமாட்டாள் என்ற துணிவில்

'எதற்கு இப்படியான ஒரு வாழ்க்கை முறை?' என்றான் நோவேற்படாதவாறு.

'அப்பாவுக்கு குறைவான வருமானம்... நான் தான் குடும்பத்தைக் கவனிக்க வேணும், மேலே கொண்டு வரவேணும்... நிறையப் பணம் சம்பாதித்து ஒரு சுப்பர் மார்க்கெட் கட்டிக் கொண்ட பின்னால் நான் சுதந்திரப் பறவையாகி விடுவேன்...'

வெகுளித் தனமாகச் சொன்னாள்.

'அதற்கிடையில் எயிட்ஸும் வந்து விடலாமல்லவா...'

இரண்டு நிமிடம் மௌனம் காத்தபின் சொன்னாள்:

'எயிட்ஸ் கொலனியில கொண்டுபோய் குடியேற்றி-விடக் கூடிய ஆபத்தும் இருக்குத் தான்... ஆனால் வேற வழி எதுவும் தெரியல்லே... வாழ்க்கை அவ்வளவு தூரம் இறுக்கமாயிருக்கு'

பணம் அதிகம் சம்பாதிக்க விரும்பியவர்கள் தங்கள் வயதுக்கு வந்த பிள்ளைகளை இலகுவான மூலதனமாக்கிச் சம்பாதித்தனர். அது அங்கீகரிக்கப்பட்ட தேசியத் தொழிலாக குற்றவுணர்வோ லஜ்ஜையோவின்றி தேசம் முழுவதும் நடை பெற்றது.

'உன்னை நான் திருமணம் செய்து கொண்டால்...'

'நிஜமாலுமா...?'

'ம்...'

'நடக்கக் கூடியதா...?'

'ம்...'

'அப்போ என்னையும் ஜெர்மனிக்குக் கூட்டிப் போய் விடுவீர்களில்லை...'

'ம்...'

'என் கனவுகள் எல்லாம் எளிதாய் விடுமில்லை?'

அவன் கேள்வியின் முழு - த்வனியையும்- அவள் புரிந்து கொள்ளவில்லையென்றே பட்டது.

பெர்லினில் அவர்கள் விமானம் தரையிறங்கியது. கண்களை அகல விரித்து விரித்து எல்லா இடங்களையும் அதிசயித்துப் பார்த்தாள்.

அவளை வேடிக்கை பார்க்க நண்பர்கள் கூடினர்.

சித்தார்த்தன் வீட்டிலிருக்காத, மற்றும் வேலைக்குப் போன நேரங்களில் வந்திருந்த நண்பகளிலொருவன் 'நானும் போய் கூட்டி வாறதுக்கு தாய்லாந்தில ஒரு பொம்பிளை ஒழுங்கு பண்ணித்தரேலுமோ' என்றானாம்.

இன்னொருவன் தான் சாப்பிடக் கொடுத்த கடலையால் தன்னையே சுண்டிப் பார்த்தானாம்.

இன்னொருவன் 'சோக்கான குட்டி' என்று கன்னத்தில கிள்ளிறானாம்.

இவர்களெல்லாம் 'தங்களோடையும் அவள் படுக்க வந்திடுவாள்' என்று நினைக்கிறார்கள் போல. சித்தார்த்தன் கண்டிப்பாக அவளிடம் சொல்லி வைத்தான்.

'ஃப்ரெண்டென்று சொல்லிக் கொண்டு நானில்லாத நேரம் வாற ஒரு நாயையும் உள்ளே எடுக்காதே.'

சித்தார்த்தன் வேலையால் வந்ததும் பொழுது போக்குக்காக ஒவ்வொரு தினமும் ஒவ்வோரிடத்துக்கு அவளை அழைத்துப் போவான். சில நாள் கழித்து மாலை நேர ஜெர்மன் வகுப்பொன்றிலும் அவளைச் சேர்த்து விட்டான்.

ஜெர்மன் படிப்பது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

'ஏன் சித்தார்த்தன்... அவசியம் நான் ஜெர்மன் படிக்க வேணுமா?'

'அப்போ தானே பார்ட் ரைம் ஜொப் பென்றாலும் கிடைக்கும்'

'கிடைத்து...'

'வீட்டுக்கு நீ பணம் அனுப்பவேண்டாமா... உன் கனவுகள் நிறைவேற வேண்டாமா...?'

'சரி...' என்றாள் மூன்றாம் பிறை ஸ்ரீதேவி மாதிரி மன்னையுடன்.

ஒரு மாதம் கழித்து பெர்லின் திரும்பிய அமலன் நேராக அவனிடம் வந்து

'காழ் காழ் காழ்' என்று கத்தினான். வாழைப் பழத்தை வாங்கிச் சாப்பிடச் சொன்னால் தோலையும் மடியில கட்டிக் கொண்டு வந்து நிக்கிறியே வெலுத்தி... நான் கொழும்பிலேயே அறிஞ்சிட்டன்'

'அதுக்குள்ள அங்கேயும் நாறிட்டுதே... நாறட்டும். ஆனால் என் உணர்ச்சிகளின் இரசாயனத்தை கொஞ்சமாவேனும் புரிஞ்சு கொண்டு குதிக்கிற உங்களில் ஒருவரேனும் பேசுகிறீர்களில்லையே எண்டது தான் எனக்குக் கவலையாயும் ஆச்சர்யமாயுமிருக்கு.'

'இருக்குமிருக்கும் ... முன்னபின்ன காணாமலிருந்திட்டுக் கண்டறியாத ஒண்டைக் கண்டால்- உப்பிடித்தான் சிலருக்குப் பித்தம் தலைக்கேறிச் சித்தம் பிசகிறதாம்... பிறகு இந்த மாதிரி விளங்காத்தனமாய் எல்லாம் புசத்தவுஞ் செய்வாங்களாம்... ஃப்றொயிட் சொல்லியிருக்கிறார். விசர் பிடிச்ச குக்கனே எக்கேடாவது கெட்டுப்போ.'

'அதென்ன குக்கன்?'

'விசர்பிடித்தால் வாலைத் தொங்கப் போட்டுக் கொண்டு, நாக்கால ஒழுக ஒழுக அலையுமே நாலுகால்ல... கண்ட இடத்தில அடிச்சுக் கொல்லுவாங்கள்... அதைத் தான் சற்றே கௌரவம் வேண்டி சங்கத் தமிழில் உரைத்தோம்...'

அமலன் போன பின்பு கனீத்தா அவனிடம் கேட்டாள்:

'ஏன் உங்கள் ஃப்ரென்ட் கோவிச்சிட்டுப் போறார்?'

'அவனுக்குக் கொஞ்சம் எரிச்சல் தாற மாதிரியான பைல்ஸ் வியாதி... அதோட தண்ணி வித்தியாசத்தில் சலமும் வேற கடுக்குதாம்...'

'நீங்கள் ஒன்றும் என்னைச் சமாதானப்படுத்த முயல வேண்டாம்... உங்க ஃப்ரென்ட்ஸ் எவருக்குமே நீங்கள் என்னைக் கட்டிக் கொள்றது இஷ்டமில்லை, இது எனக்குப் புரியாமலில்லை...'

'நீ கண்டு கொள்ளாத எந்த இடியட்டையும்.'

ஒரு சனிக்கிழமை சித்தார்த்தன் கனீத்தாவையும் காரில் கூட்டிக் கொண்டு காய்கறிகள் வாங்குவதற்கு ஆசியன் கடை ஒன்றுக்குப் போனான். அவனுக்குப்பிடித்தமான குரங்குவாலன் பயற்றங்காயும், நல்ல பிஞ்சு வெண்டைக் காய்களும் கிடக்கக்கண்டு கடைக்காரரிடம் ஒவ்வொரு கிலோ போடச் சொல்லவும் இன்னொரு உதவியாளர் உள்ளேயிருந்து கத்தினார்:

'அது ஊத்தவானின்ரை ஓடருக்கு எடுத்து வைத்திருக்கிறன்...'

கடைக்கார இளவல் நெளிந்து விட்டு

'அண்ணை குறை நினைக்காதையுங்கோ... உந்த இரண்டு ஐட்டத்திலயும் எங்களுக்கு வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பவ்பத்துக் கிலோ ஓடர் இருக்கு... இருக்கிறதே போதும் போல தெரியேல்ல... இண்டைக்கு வேற மரக்கறியில பார்த்து எடுங்கோ... சோக்கான முத்தல் பலாக் கொட்டையெல்லாம் அங்காலயிருக்குப் பாத்தியளே... அடுத்த முறையாகட்டும் உங்களுக்கு நான் வேண்டிய மரக்கறி எடுத்து வைத்துத் தாறன்.' என்று சொல்லிக் கொண்டிருக்கவும் நடுத்தர வயது தாய்லாந்து மாமி ஒருவர் காரில் வந்து பெரிய கூடையுடன் இறங்க கடைக்காரின் காய்கறிகளின் இருப்பில் பாதி வெண்டைக்காய் பயற்றங்காயுட்பட அவருக்கே வியாபாரமாகியது. அவர் தானாம் ஊத்தவான்.

—▶16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



15→

கனீத்தாவைக் கண்டவர் மிக வாஞ்சையுடன் வந்து அவளுடன் பேசி அவளைப்பற்றி விசாரித்தார். அவள் என்னை அறிமுகம் செய்யவும் எனக்கும் நமஸ்கரித்தார். அவரது ஊரும் சரசாபுரிக்கு மிகச் சமீபம் தானாம், திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்ந்தார். இவள் போன் நம்பரைக் கேட்டு வாங்கிக் கொண்டார்.

''எதுக்காம் இத்தனை காய்கறி?'

''அவ தாய்ப் பெண்கள்- வேலை செய்யிற-கிளப்பொன்றுக்கு சாப்பாடு சப்ளை பண்ணிறவாம்...' இரகசியமாக கண்ணடித்தாள்!

கனீத்தாவுக்கும் சமையல் செய்வதுவும், வீட்டைச் சுத்தம் பண்ணுவதுவும், ஜெர்மன் வகுப்புக்குப் போய் வருவதுவும் தினமும் நேரசூசிகை போட்டது போல் செய்து செய்து அலுப்புத் தட்டத் தொடங்கியது.

சித்தார்த்தனுக்கும் கனீத்தாவின் நூடில்சையும், சூப்பையும் சாப்பிட்டுச் சாப்பிட்டு நூடில்சைக் கண்டாலே புரட்டத் தொடங்கியது.

ஒரு வித்தியாசம் இருக்கட்டுமேயென்று தமிழ்நாடு றெஸ்ரோறன்டுக்குக் கூட்டிப்போனால் புளிப்பும், கொத்து மல்லியிலையும் அறவே பிடியாது, கனீத்தா சரியாகச் சாப்பிட மாட்டாள்.

சீன, தாய்லாந்து றெஸ்ரோறன்டுக்குப் போனால் அவனால் அனுபவித்துச் சாப்பிட முடியாதிருக்கும்.

ஒரு நாள் அவனது எண்ணங்கள் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்த போது ஐந்திணைக் கவிதை ஒன்று ஞாபகம் வரவும் புன்னகைத்தான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த கனீத்தா 'தனிமையில் என்ன மோனப் புன்னகை?' என்றாள்.

'ஒன்றுமில்லை ஐந்திணை ஐம்பது என்றொரு பழைய இலக்கியத்தில் முன்பு படித்த கவிதை ஒன்று ஞாபகம் வந்துது அதுதான்...'

'நல்ல வேடிக்கையாக இருக்குமா?'

'அல்ல... காதலை, அன்பை, விட்டுக் கொடுத்தலை உணர்த்துவதாக இருக்கும் அற்புதக் கவிதை'

'சொல்லுங்கள் பார்க்கலாம்'

*'சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்றெண்ணிப்*
*பிணைமான் இனிதுண்ண*
*வேண்டி கலைமா- தன்*
*கள்ளத்தின் ஊச்சம்*
*சுரமென்பதென்ப காதலர்*
*உள்ளம் படர்ந்த நெறி...*

அதாவது காட்டில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு ஜோடி மான்களுக்குக் கடுமையான தாகம் எடுத்ததாம். எங்கும் நீருக்காக அலைந்து அலைந்து விட்டுக் கடைசியில் ஒரு சுனையை அடைந்த போது அது வற்றி ஒரு சொற்ப தண்ணீரே அங்கு காணப்பட்டுதாம். ஆவல் மிகுதியால் இரண்டு மான்களுமே நீரில் இறங்கி வாயைத் தண்ணீரில் வைத்துக் கொண்டாலும் சுனையிலுள்ள நீர் மட்டிலும் சற்றும் குறையவே காணோமாம்.

கலைமானோ பாவம் பெண்மான் தாகம் தாங்க மாட்டாதது அஃதே குடிக்கட்டும் என்று தான் குடிப்பது போலப் பாவனை பண்ண, பெண்மானோ ஆண்மானுக்குத் தான் தாகம் அதிகம் அதுவே முழுவதையும் குடிக்கட்டும் என்று நினைத்து தானும் சும்மா குடிப்பது போலப் பாவனை பண்ணிற்றாம்...'

கனீதாவுக்கு கவிதையினதோ, கவிதை சுட்டும் சம்பவத்தின் நயமோ சிறிதும் பிடிபடவில்லை. இவளுக்கு தான் தொப்ளர் இபெஃக்ட்டைப் புரிய வைக்க நேர்ந்தால் எப்படியிருக்கும் என நினைத்தவன் வாய்விட்டே சிரித்தான்.

'என்ன வந்தது உங்களுக்கு இன்றைக்கு...?' என்றாள் கனீத்தா கோபமாக.

ஒரு மனைவியிடம் கிடைப்பதெல்லாம் இவ்வளவுந் தானா...? கவிதை, இலக்கியம், தத்துவம் சார்ந்த அவனது தேடல்களை அவளுடன் விசாரம் செய்ய முடியவில்லையென்றால்... தவித்தான்.

காதலிகூட இருந்து பாட்டுக் கலந்திட வேண்டும் என்று அவாவியவன் அனுபவமென்ன சாதாரணமானதா?

அவளின் இதயத்தை என்னதான் புரிய முயற்சித்தாலும் விளைவு ஏதோ ஃபில்டர் கண்ணாடியால் பார்த்த மாதிரி மொழி பெயர்ப்புக் கவிதை படித்த மாதிரியான அனுபவந்தான்.

அவளுக்கும் அப்படித் தான். என்ன தான் பேசினாலும், எவ்வளவு தான் பேசினாலும் ஏதோ பொச்சம் அடங்காத மாதிரியிருந்தது.

ஊத்தவான் ஒருநாள் நலங்கேட்டுப் போன் பண்ணினாள். போன் தானே பேசுகிறாள் பேசிவிட்டுப் போகட்டும்... என்று சித்தார்த்தன் நினைக்கவும் கனீத்தா டெலிபோன் றிசீவரைப் பொத்திக் கொண்டு 'அவளை எப்போது வீட்டுக்கு அழைக்கலாம்?' என்றாள்.

'வேண்டாம்' என்று சைகையால் காட்டினான்.

கனீத்தாவின் முகம் முதல் தடவையாக இருண்டது. தாயில் எதையோ சொல்லி விட்டு றிசீவரை வைத்தாள். உதடுகள் துடித்துக் கொண்டிருக்க கண்களிலிருந்து சில வைர முத்துக்கள் நிலத்தில் குதித்தன.

'நான் மனம் விட்டுப் பேசக் கிடைத்த ஒரே நட்பு, அவ இங்க வாறதும் உங்களுக்குப் பிடிக்கவில்லை' விம்மினாள்.

சித்தார்த்தனுக்கு உள்ளூரக் கலவரமாகி விட்டிருந்தது. சமாளித்துக் கொண்டு அவளைச் சமாதானப் படுத்தினான்.

'இது இந்த அளவுக்கு உன்னை நோகவைக்கும் என்று நான் நினைக்கவேயில்லை டார்லிங்...'

'ஊத்தவான் எங்கள் வீட்டுக்கு வர்றது உங்களுக்கு கௌரவக்குறைச்சல் என்று நினைக்கிறியள்... எனக்குத் தெரியும்.'

'கௌரவக் குறைச்சல் என்பதெல்லாமில்லை... எதுக்கு அவ சினேகிதம்...

இங்கே ஜேர்மன்காரர்களைக் கல்யாணம் செய்த தாய் நாட்டுப் பெண்கள் எல்லாரும் சேர்ந்து கிளப்பே வைத்திருக்கிறார்களாம்... அட்டிரஸை எடுத்து ஒரு நாள் போனமென்றால் எத்தனை பேரைச்சந்திக்கலாம்.'

'ஊத்தவான் எனக்கு அயலூர்க்காரி என்பது தான் உங்களுக்குத் தெரியுமே...

அவமாதிரி மற்ற வேறு யாரும் என்மேல பட்ஷமாயிருக்காயினம்... அவ எனக்கு விசா எல்லாம் புதுப்பித்துத்தாறன் என்டிருக்கிறா...'

சித்தார்தனுக்கு இப்போது பற்றிக் கொண்டு வந்தது. தேவையில்லாமல் விசா புதுப்பித்துத் தருகிறேன்... அது இது என்று தங்கள் வீட்டு விடயங்களில் மூக்கை நுழைக்கும் ஊத்தவானின் நோக்கங்கள் நிச்சயம் நல்லதாயிருக்காது.

'அப்ப விசா எப்பிடிப் புதுப்பிப்பது என்பது தெரியாமலோ உன்னைக் கூட்டி வந்தனான்?'

-அதற்கேன் மனிதர் இப்படிக் கோபிக்கிறார்- கனீத்தாவுக்கும் பிடிபடவில்லை.

அன்று முழுக்க மன்னையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

'சரி சரி ஒரு நாளைக்கு அவளைக் கூப்பிடு...' என்றதும் மீண்டும் முகம் மலர்ந்தது.

ஒரு நாலு நாள் போயிருக்கும் சித்தார்த்தன் வேலையால் மாலை திரும்பவும் கனீத்தா ஒரே பாட்டும் கூத்துமாய் ஸெற்றிக்கும் ஸோபாவுக்குமாகக் குதித்துக் கொண்டிருந்தாள். இயல்பிலேயே அவளுக்கு டிவி ஷம்பூ விளம்பரங்களில் வருபவர்களைத் தோற்கடிக்கும் கருகருவென்ற



நேரான கேசம். அதில் அன்று செறிவான சிறுசிறு பின்னல்கள் பின்னித் தலையில் பல நிறங்களில் மணிகள் கோர்க்கப்பட்டு குறுக்கும் மறுக்குமாக வலைவேலைப் பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

'என்ன இதெல்லாம்...?'

'இன்று ஊத்தவான் வந்திருந்தாவே...'

சரி.... எவளாவது வந்து தொலையட்டும்... இவள் மூஞ்சியை இறக்கி வையாமல் இருந்தால் சரிதான்.

'அவதான் இதெல்லாம் எனக்குப் பண்ணி விட்டா...' தலை அலங்காரத்தைக் காட்டினாள் குழந்தை மாதிரி.

'வேறை...?'

'ஃப்றைட் றைஸ், ஜியாஸி (உள்ளே பொடிபண்ணப்பட்ட இறைச்சி, வெஞ்சனங்கால் நிரப்பப் பட்டிருக்கும். விருந்துகள் விழாக்களின் போது ஆவியில் வேக-வைத்துத் தயாரிக்கப்படும் பஸ்டா வகையிலான ஒரு சீன உணவு. பார்வைக்கு சின்னச் சின்ன சமோஸாக்களைப் போலவும் மிகச் சுவையாகவுமிருக்கும்.) எல்லாம் கொண்டு வந்தாவே...'

(3)

கனீத்தாவின் பெற்றோர்களிடமிருந்து கடிதங்கள் ஒழுங்காய் வந்தன. சித்தார்த்தனையும் சுகம் விசாரித்து எழுதியிருக்கிறார்கள் என்று வாசித்துச் சொல்லுவாள்.

ஊத்தவானும் ஏதோ கட்டிக் கொடுத்த மகளைச் சீராட்ட வாற மாதிரி மாதத்தில் இரண்டு மூன்று தடவைகள் வந்து போய்க் கொண்டிருந்தாள்.

இலையுதிர்காலம் ஆரம்பித்து விட்டிருந்த ஒரு மாலை சித்தார்த்தன் வழமை போல் வேலையால் ஒரு சீப்பு பியருடன் வந்து பஸ்ஸரை அழுத்தினான். கலகலத்துக் கொண்டு வந்து கதவைத் திறக்கும் கனீத்தாவைக் காணவில்லை.

-சொல்லிக் கொள்ளாமல் எங்கும் போக மாட்டாளே... கடைகளில் குளிர் காலத்து சேல்ஸ் நேரம்.... எங்கேயாவது ஷொப்பிங் போயிருப்பாள்.- என்று நினைத்துக் கொண்டு தனது திறப்பினால் திறந்து உள்ளே வந்து காத்திருந்தான்.

இரவு எட்டு மணியுமாகியது. கனீத்தா வந்தபாடில்லை. பொலீஸுக்குத் தகவல் கொடுக்கலாமா என நினைத்தான். ஊத்தவானுடன் எங்காவது வெளியே போயிருப்பாளோ... அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் செய்யும் வழக்கமில்லையே... ஊத்தவானின் டெலிபோன் நம்பர் எங்காவது எழுதி வைத்திருக்கிறாளா என்று அலுமாரியைத் திறந்தான். அவளுக்காக அவன் முதன்முதல் வாங்கிக் கொடுத்து வெள்ளிமருவிய சூட்-கேஸைக் காணவில்லை.

ஏதோ விபரீதமாக நடந்து விட்டதென்பது புரிந்தது. அடுத்து என்ன செய்வதென்பது தெரியவில்லை. அவள் பிரிந்து போகவேணுமென்று முடிவெடுத்தால் நான் வற்புறுத்த முடியாது தான். எதையும் சொல்லிக் கொண்டு செய்திருக்கலாமே... ஆசியாக்கடைக்காரப் பையனுக்கு போன் பண்ணினான்.

தம்பி உங்களிட்ட நிறைய காய்கறிகள் வாங்குகிற அந்த தாய்லாந்து மனிசி ஊத்தவான் என்று அவவின்ர டெலிபோன் நம்பர் அல்லது அட்டிறஸ் தெரியுமோ...?'

'டெலிபோன் நம்பர் தேடினால் எடுக்கலாந் தான்... ஆனால் எனக்கு அவவின்ரை அட்டிறஸ் தெரியும் பல தடவை அவவீட்டுக்கு நானே சரக்கு சப்ளை பண்ணியிருக்கிறன்'

'ஆங்... சொல்லும்'

'Rehberge U- Bahn இல இறங்கினால்... அண்ட கிறவுண்ட் ட்றெயின் போற திசையில வலப்பக்கமாய் இரண்டாவது வீடு.'

காரை எடுத்துக் கொண்டு உடனே புறப்பட்டான். வீட்டைக் கண்டு பிடிப்பதில் எதுவித சிரமமுமிருக்கவில்லை. பஸ்ஸரை அமுக்கவும் ஊத்தவானே கதவைத் திறந்தாள்.

'கனீத்தா இங்கே வந்தாளா...?'

'ஜா வந்தாள்... அந்த அறையிலிருக்கிறா...'

ஒரு வதியும் அறையை மருவிய இன்னொரு அறையைக் காட்டிவிட்டு அவள் உள்ளே நகர்ந்தாள். சித்தார்த்தன் அந்த அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே ஒரு கட்டிலில் அசோகவனத்துச் சீதை மாதிரி அமர்ந்திருந்த கனீத்தா அவனைக் கண்டதும் நிதானமாக எழுந்துவந்தாள்.

'எதுக்கு இப்பிடி... சொல்லாமல் கொள்ளாமல்...'

கதவை முற்றாகச் சாத்திவிட்டு வந்தவள் முதல் தடவையாக அவன் கண்களை நேர் கொண்டு பார்ப்பதைத் தவிர்த்தாள். கண்கள் லேசாக ஈரங் கொண்டு மின்னின. அக்கணம் அவனுக்கு அவள் யாரோ ஒரு அந்நியள் மாதிரிப் பட்டாள்.

'சித்தார்த்தன் நீங்கள் நல்லவரில்லை... மிக... மிக... மிக... மிகவும் நல்லவர். ஆனால் எனது வாழ்க்கை அங்கேயில்லை என்று எனக்குப் படுகுது.

உங்களுக்கு எதிரில் நின்று நான் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்படும் மனத்தெம்பு எனக்கில்லை...'

'உன்னை யாரும் பயமுறுத்தினார்களா... என்ன நடந்தது... சொல்லு கனீத்தா.'

தலையை இரண்டு பக்கமும் மெதுவாக ஆட்டினாள்.

'பின்ன விட்டிட்டு போய்விடும்படி இப்ப என்ன தான் வந்திட்டுது... உன் மூளையை யார் சலவை செய்தது? ... உனக்கு இதெல்லாம் வேண்டாத சக்வாசமென்று நான் ஆரம்பத்திலேயே சொல்லி வைத்தது இதுக்குத் தான்...'

'சித்தார்த்தன்... என் மூளையை யாருமே சலவை செய்யவில்லை... நீங்கள் வீணாக ஊத்தவானைச் சந்தேகிக்க வேண்டாம், அவர் நல்லவர், என் விஷயத்தில் அவர் தலையீடு ஒன்றுமேயில்லை. பூஜ்யம். எனக்கு வழி வேறொன்று இருக்கிறது எனக்குப் படுகிறது... எதிர்காலம் பற்றி எனக்குத் தெரிகின்ற காட்சிகளையும், கோலங்களையும் இரண்டாவது மொழி ஒன்றில எடுத்துச் சொல்ல என்க்கு திறமை இல்லாமலிருக்கு. வருந்துகிறேன். இது நானே எடுத்துக் கொண்ட தீர்க்கமான முடிவு தான், இதற்குள் எவருடைய நிர்ப்பந்தமுமில்லை, சத்தியம்.'

'உனக்கு நான் என்னதான் குறை வைத்தேன்...?'

'நீங்கள் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை... ஆனால் எனக்காக நீங்களாகவே பல குறைகளை ஏற்படுத்திக் கொண்டும், ஏற்றுச் சகித்துக் கொண்டும் வாழுகிறீர்கள்... அதுதான் என் துன்பம்.'

'என்ன சொல்ல வர்றே நீ....'

(அவள் தன் மழலை ஆங்கிலத்தில் செப்பியதன், செப்ப முயன்றதன் சாராம்சம் இது.)

'சித்தார்த்தன்.... என்னைப் பாருங்கள்... நல்ல தாம்பத்யம் என்பது வெறும் மோகங்களாலோ, செக்ஸினாலோ அமைந்து விடுவதில்லை... அங்கே ரசனைக் கலப்புகளும், கருத்துப் பரிமாற்றங்கள் இதெல்லாம் இருக்கவேணும், அப்போது தான் அது சுவையானதாக மாறும்... எங்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள்... குறைந்தபட்ஷம் எங்கள் சாப்பாட்டு ரசனையாவது ஒத்துப் போகிறதாவென்று... நான் கிராமத்தில் பிறந்து நாகரீகம் தெரியாமல் வளர்ந்துவிட்ட ஒரு பட்டிக் காட்டுப்பெண். உங்களின் கவிதையிலும், இலக்கியத்திலும், தத்துவத்திலும் எக்காலத்திலும் எனக்கு ஈடுபாடு வரப்போவதேயில்லை.... எனக்காக நீங்கள் உங்களின் எத்தனையோ உறவுகளையும் நண்பர்களை இழந்து விட்டீர்கள்... உங்களின் சிறந்த சிநேகிதன் என்று நீங்கள் சொல்ற அமலனே இப்போ வீட்டுக்கு வாறதில்லை... உங்கள் பெற்றோரை நினைத்தாலே எனக்குப் பயமாகவே இருக்கிறது... இந்த ஒத்தியால் அவர்களையும் நீங்கள் இழக்கப் போவது எனக்குப் புரியாமலில்லை... எந்தக் காலத்திலும் உங்கள் தாயாரிடம் உங்கள் மருமகளை இன்ன இடத்தில் பிடித்து வந்தேன் என்று சொல்லிவிட முடியுமா...? யோசித்துப் பாருங்கள். நீங்களே சொல்றபடி பொம்மை மாதிரி இந்த உடலைத்தவிர வேறென்ன தானிருக்கு என்னிடம்...? நீங்கள் இலட்சிய வாழ்வொன்றை உங்கள் ரசனைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ள முற்றிலும் தகுதிகள் வாய்ப்புக்களும் கொண்டவர். பாயவே தெரியாத இந்தக் குதிரையோட சேர்ந்து நீங்களும் நொண்டுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது தர்மம் இல்லை. தெரிஞ்ச தேவாங்கு என்பதற்காகத் தோளில் போட்டுக் கொண்டு அவதிப்பட வேண்டிய அவசியமில்லை. இலேசாகவும் உல்லாசமாகவும் பனிச்சறுக்கல் மாதிரிப் பயணிக்கக் கூடிய உங்கள் கால்களுக்குள் புகுந்து கொண்டு இடைஞ்சல் பண்ணிக் கொண்டு நான் சமாதானமாக இருப்பேனென்று நினைக்கிறீர்களா... அதில எனக்குச் சம்மதமோ, இஸ்டமோ இல்லை. எனக்கு நன்றாகவே தெரியுது எனது பாதை வேறு. அதில தான் நான் பயணப்படவேணும், பயணப்படவும் முடியும். அதனால் அந்தப் பாதைக்குத் தான் நானிப்போ வந்திட்டன். அதில எப்பிடி சறுக்கப் போறேனென்றது எனது விதி. என்னோடு சேர்ந்து வர்றதென்பது, உங்களுக்கு முற்றிலும் புதியதும் துன்பமான அனுபவமாயுமிருக்கும், உங்களால அது முடியவும் முடியாது. என் மேலான பிரேமையால சமூகத்தையும், உறவுகளையும் கணக்கிலெடுக்காது என்னோடு வாழவிரும்பும் உங்களுடைய மனோ தைரியத்தை நான் போற்றுகிறேன். என்னைப் புரிந்து கொள்வீர்களா சித்தார்த்தன்?'

அன்று நள்ளிரவாகும்வரை அவர்கள் விவாதித்துக் கொண்டார்கள்.

அடுத்த கோடையில் ஒரு நாள் தற்செயலாக பிஷ்மார்க் வீதியில் Butterflies என்கிற தாய்லாந்து செக்ஸ் கிளப் அருகே சித்தார்த்தனின் காருக்கு முன்பாகப் போன டாக்ஸி நிறுத்தப்பட வேறும் இரண்டு குமரிகளுடன் கனீத்தா இறங்கிப் போவதைக் கண்டதும் அவன் ஹோர்ணை அடித்தான்.

'ஹாய்... சித்தார்த்தன்...' என்று கண்கள் விரிய

'எப்பிடியிருக்கிறீர்கள் சித்தார்த்தன் சௌக்கியமா...?'

'சௌக்கியமே...'

'நீ... எப்படி...?'

'சௌக்கியத்துக்கு குறைவில்லை... புதுசா கார் பழக ஆரம்பித்திருக்கிறன்... சீக்கிரம் லைசென்ஸ் கிடைத்திடும்...'

'அப்படியா... சந்தோஷம்...'

'ஊரிலிருந்து கடிதங்கள் எல்லாம் வருகிறதா...?'

'வந்து கொண்டேயிருக்கு.... எல்லோருமே சௌக்கியமாம். இவளைப் பார்த்தாயா... எந்நாட்டுக் காரிதான் வந்து ஒரு வருஷமேயாகவில்லை, அதற்குள் தங்கஃரில் புதுவீடு வாங்கி விட்டாளாம்... நானும் விரைவில் ஒரு சூப்பர் மார்க்கெட் வாங்கிவிடுவேன்....'

அவள் கண்கள் கனவுகளால் நிரம்பியிருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பி.ராமமூர்த்தியின் பார்ப்பனியம்

எஸ். வி. ஆர்

"தமிழ் நாட்டவரான எஸ்.வி. ஆர்." என்ற மகத்தான கண்டுபிடிப்புடன் பெ. முத்துலிங்கத்தின் 'எழுதாத வரலாறு' பற்றி நான் சரிநிகரில் எழுதியுள்ளவற்க்குப் பதிலளித்துள்ள சூரியசந்திரன் (சரிநிகர் 140) நான் பி.ராமமூர்த்தி மீது 'உண்மைக்குப் புறம்பான அபாண்டங்களைச் சுமத்தியுள்ளதாகக்' குற்றம் சாட்டியுள்ளார். 'சரிநிகரி'ல், மேற்சொன்ன நூலுக்கு 'நேத்ரா எழுதிய மதிப்புரைக்கு எதிர்வினையாகவும், எனது எதிர்வினையைக் கிண்டலடித்த சி. சிவசேகரத்திற்குப் பதிலாகவும் 'சரிநிகர்' ஜூலை 03.-16, 17-30, நவம்பர் 6-19, நவம்பர் 20-டிசம்பர் 3, டிசம்பர் 4-17, 1997 ஆகியவற்றில் நான் எழுதியவற்றில் பி. ராமமூர்த்தி கூறியுள்ள கீழ்க்கண்ட விஷயங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்பதை அறிவுள்ள எந்த வாசகருக்கும் நினைவூட்ட வேண்டியதில்லை.

1. பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறியதற்குக் காரணம் வ.வே.சு. அய்யர் நடத்தி வந்த குருகுலம் பற்றிக் காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவர் கொண்டு வந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டதுதான்.
2. "பாம்பையும் பார்ப்பனனையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடித்துக்கொல்" என்று பெரியார் கூறினார்.

இந்த இரண்டு பிழையான விஷயங்களையும் பி. ராமமூர்த்தி எழுதிய 'விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்' (அதன் முழுமையான தலைப்பு 'ஆரிய மாயையா? திராவிட மாயையா?- விடுதலைப்போரும் திராவிட இயக்கமும், என்பதாகும்) என்ற நூலிலிருந்து பெ. முத்துலிங்கம் எடுத்துக் கையாண்டுள்ளார் என்பதும், முழுப்பொய்களும் அபத்தங்களும் அடங்கிய அந்த நூலைத் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி. வீரமணி வரிக்கு வரி மறுத்து 'விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்' என்ற நூலை எழுதியுள்ளார் என்பதும், ராமமூர்த்தியின் நூலில் சில பக்கங்களில் ஆர்.எஸ். எஸ். வாடை அடிக்கிறது என்பதும் மட்டுமே பி. ராமமூர்த்தி தொடர்பாக நான் எழுதியுள்ளவை. 'பி.ராமமூர்த்தி ஒரு பார்ப்பனர்' என்று கூட நான் எழுதவில்லை- அதற்கான ஏராளமான நியாயங்கள் இருந்தபோதிலும்.

பெரியாரின் வரலாறு பற்றி மிக மேலோட்டமாகத் தெரிந்து வைத்துள்ள ஒருவருக்குக்கூட பெரியார் காங்கிரசைவிட்டு வெளியேறியதற்கான காரணமாக இருந்தது, காஞ்சிபுரத்தில் 1925இல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவர் கொண்டு வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதுதான் என்பது தெரியும். ஆனால், சி.பி.எம். கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினராக இருக்கும்போது 1983இல் மேற்சொன்ன நூலை வெளியிட்ட பி.ராமமூர்த்திக்கு இந்தச் சாதாரண விஷயம் கூடத்தெரியவில்லை. வ.வே.சு. அய்யர், காங்கிரஸ் கட்சியின் நிதியைக்கொண்டு சேரன் மாதேவியில் நடத்தி வந்த குருகுலத்தில் பார்ப்பன மாணவர்களுக்கும், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியாக உணவு பரிமாறப்படும் வழக்கத்தைப் பெரியார் மட்டுமல்ல- அன்றைய தமிழகக் காங்கிரஸ் தலைவர்களான வரதராஜுலு நாயுடு போன்றோரும் கண்டனம் செய்தனர். அன்றைய காங்கிரஸ் கட்சியிலிருந்த பார்ப்பனரான டி.எஸ்.எஸ். ராஜன் கூட தனது பிள்ளையை அக் குருகுலத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டார். குருகுலத்தில் வ.வே.சு. அய்யர் கடைப்பிடித்த முறைதான் காங்கிரசிலிருந்து பெரியார் வெளியேறுவதற்கான காரணமாக இருந்தது என்ற பிழையான தகவலுடன் பி. ராமமூர்த்தி நிறுத்திக் கொள்ளவில்லை. 1983இல் வெளியிடப்பட்ட அந்த நூலில் 'புரட்சித்தோழர்' பி. ராமமூர்த்தி வருணாசிரமதர்ம முறைக்குச் சப்பைக் கட்டு கட்டுகிறார்.

"அந்தக்காலத்தில் நிலவி வந்த வர்ணாஸ்ரம பிரிவினையின் படி அங்கே பிராமணர்களுக்கு தனியான இடத்திலும் மற்ற ஜாதியினருக்கு வேறு இடத்திலும் உணவு பரிமாறப்பட்டது" (பக்கம் 137)

இந்தக்கொடுமையான வழக்கத்தைப் பற்றிய மிக மென்மையான விமர்சனம் கூட ராமமூர்த்தியின் நூலில் இல்லை.

சேரன்மாதேவி விவகாரத்தில் காந்தி முன்வைத்த சமரசத்திட்டம் குறித்தும் பிழையாகவே எழுதியுள்ளார் ராமமூர்த்தி:

"இப்பொழுது அந்த தேசியப் பள்ளியில் இருக்கும் மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு அளிக்கப்படுவது நீடிக்கட்டும். இனிப் புதிதாக சேர்க்கப்படும் மாணவர்களுக்கு ஒரே பந்தியில் உணவு அளிக்கப்படும். இந்த யோசனையை ஈ.வெ.ரா நிராகரித்தார்." காந்தி சொன்ன யோசனை என்ன என்பதை 'இந்து' நாளேட்டின் நூறாவது ஆண்டு சிறப்பு மலரிலுள்ள ஆதாரங்களிலிருந்து மேற்கோள்காட்டியுள்ளார் கி. வீரமணி: "எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடட்டும். ஆனால், சமைப்பதற்கு மட்டும் பிராமண சமையல்காரர் இருக்கட்டும்." (வீரமணி நூல். ப.97)

"வருங்காலத் தலைமுறையினருக்கு உண்மை வரலாற்றை எடுத்துரைக்கவே இந்தப் புத்தகத்தை எழுதினேன்" என்று பி. ராமமூர்த்தி தனது நூலைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்கிறார். அந்த 'உண்மை வரலாற்'றுக்கு மற்றொரு சாம்பிள், மேற்படி நூலின் 136ஆம் பக்கத்தில் 'வைக்கம் போராட்டம்' பற்றி, ஒரு சாமானியனுக்குத் தெரிந்த விஷயத்தைக் கூடப் போலிட்பீரோ உறுப்பினராக இருந்த பி. ராமமூர்த்தி தவறாக எழுதுவதாகும். திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள வைக்கம் என்ற இடத்தில் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்றிருந்த கொடுமையான வழக்கத்தை எதிர்த்து 1924-25ஆம் ஆண்டில் பெரியார் வெற்றிகரமாக நடத்திய போராட்டத்தை 1921ஆம் ஆண்டில் வைக்கத்தில் நடந்த ஹரிஜனங்களின் கோயில் நுழைவுப்போராட்டம் என்று பி.ஆர். எழுதியுள்ளார். (ப.136)

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடக்கி வைத்த சுயமரியாதைத திருமணம் "சட்டப்படி செல்லாது என்று 1952ல் தெரிய வந்தது" என்றும், அச்சமயம் சென்னை சட்ட மன்றத்தில் "பிரதான எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சட்டம் கொண்டு வருமாறு காங்கிரஸ் வலியுறுத்தியதன் விளைவாகச் சுயமரியாதைத் திருமணச் சட்டம் என்று ஒரு தனிச்சட்டம் நிறைவேற்றப் பட்டது" என்ற ஆகாசப்புளுகைத் துணிந்து கூறுகிறார் பி. ராமமூர்த்தி (ப.142). சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் 1953ஆம் ஆண்டு இரண்டு பார்ப்பன நீதிபதிகள் அளித்த தீர்ப்பை "1952இல் தெரியவந்தது" என்று சாமர்த்தியமாக எழுதுகிற அவர் 1967இல் பதவியேற்ற சி.என். அண்ணாதுரை (அண்ணா) அமைச்சரவையால் 1968ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தின் மூலமே 'சுயமரியாதைத் திருமணங்கள்' சட்டபூர்வமானவையாயின என்ற அரசியல், சமூகவியல், சட்டவியல் உண்மையை முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போல் மறைத்து விடுகிறார். தாங்கள் செய்யாததைத் தங்கள் சாதனையாக உரிமை கொண்டாடுபவர்களில் 'கம்யூனிஸ்ட்டு'களும் உள்ளனர்.

பி.ஆரின் வரலாற்று மேதைமைக்கு மேலும் சில சான்றுகள்:

1951ஆம் ஆண்டில் அன்றைய சென்னை மாநில அரசாங்கம் தனது சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கோபுரத்தை 'சத்யமேவ ஜெயதே' என்ற வாசகத்துடன் இணைத்து உருவாக்கிக்கொண்டது. 1967இல் பதவியேற்ற அண்ணா 'சத்யமேவ ஜெயதே' என்பதை வாய்மையே வெல்லும்' என்று தமிழில் மாற்றியமைத்தார். அதற்கும் கூட இராஜாஜி போன்ற பார்ப்பனர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'சத்தியம்' என்ற செழுமையான சமஸ்கிருதச் சொல்லிற்கு 'வாய்மை' என்ற தமிழ்ச்சொல் இணையானதல்ல என்று வாதாடினர். 1967இல் ஆட்சிக்கு வந்த அண்ணா "அரசின் சின்னமாக தஞ்சாவூர் கோபுரத்தையே ஏற்றுக் கொண்டு விட்டார்" என்ற அபாரமான கண்டிபிடிப்புச் செய்துள்ளார் பி.ராமமூர்த்தி.

1908ஆம் ஆண்டில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி. கைது செய்யப்பட்டு பின்ஹே என்ற நீதிபதியால் இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். அதனைக்காரணமாகக்காட்டி சனாதன தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக, திருநெல்வேலி மாவட்டக் கலெக்டராக இருந்த ஆஷ் என்ற வெள்ளைக்காரக் கலெக்டரை 1911 ஆம் ஆண்டில் சுட்டுக்கொன்றான் வாஞ்சிநாதன். இது இந்திய தேசிய வரலாறு தெரிந்தவர்களுக்கான அரிச்சுவடி. ஆனால் பி.ஆர்., ஆஷ் என்பவரை வ.உ.சி.க்குத் தண்டனை வழங்கிய அதிகாரி என்று எழுதுவதுடன் நிறுத்திக்கொள்ளாமல் (1911-ஆம் ஆண்டு நடந்த) ஆஷ் கொலைக்குப்பிறகு குஜராத் மாநிலம் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் சுப்பிரமணிய பாரதியார் கலந்து கொண்டதாகவும் எழுதியுள்ளார்! சூரத் மாநாடு நடைபெற்றதோ 1907 ஆம் ஆண்டில்!!

1937ல் "பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரை முதன் முதலாக அரசியலுக்குக்கொண்டு வந்ததே நானும் காமராஜரும்தான்" என்ற அண்டப்புளுகு புளுகும் பி.ஆர். (ப.118) அதே புத்தகத்தின் 313ஆம் பக்கத்திலோ 1936ஆம் ஆண்டிலேயே தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தொழிற்சங்கப் போராட்டமொன்றின் தீர்வுக்காக அப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திய தேவரைத் தான் சார்ந்து நின்றது என்கிற அளவுக்கு அவர் (தேவர்) முக்கிய அரசியல் புள்ளியாக இருந்திருக்கிறார் என்றும் எழுதியுள்ளார். 1948 - 1951 இல் இந்தியப்பொதுவுடமைக் கட்சி தடை செய்யப்பட்டபோது தலைமறைவாக இருந்தவர்களில் பி.ராமமூர்த்தியும் ஒருவர். கடைந்தெடுத்த காங்கிரஸ் பிற்போக்குவாதிகளான மதுரை ஏ. வைத்திநாதய்யர் வீட்டிலும், தஞ்சை நிலப்பிரபு குன்னியூர் சாம்பசிவ ஐயர் வீட்டிலும் பி.ஆர். தலைமறைவாக இருந்தார் என்பதை முத்துராமலிங்கத் தேவரே குறிப்பிட்டுள்ளார். (வீரமணி நூல் ப. 423-424)

> "பி. ராமமூர்த்தியின் நூலில் ஆர். எஸ். எஸ். வாடையே அடிக்கிறது."

(முத்துராமலிங்கத்தேவர் தொழிற்சங்கத் தலைவர்; இந்தியத்தேசியப் போராட்டத்தில் பலமுறை சிறை சென்றவர்: சுபாஸ் சந்திரபோஸைப் பின்பற்றியவர். எனினும், அவரிடமும் சாதி ஆணவம் இருக்கத்தான் செய்தது. 1957ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சாதிக்கலவரம் மூண்டதற்குக் காரணமே அவரது சாதி ஆணவப் பேச்சால் தூண்டப்பட்டவர்கள் இம்மானுவேல் சேகர் என்ற தலித் தலைவரைக்கொலை செய்ததுதான். அதன் தொடர்பாக தேவர் கைது செய்யப்பட்டபோது, தேவர் கைதைக் கண்டனம் செய்தவர்கள் கம்யூனிஸ்ட்டுகள், தி.மு.கவினர் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சியினரும் ஆவர். தேவரைக்கண்டனம் செய்து அவரைக் கைது செய்தது நியாயம் தான் என்று 'விடுதலை'யில் எழுதிய, பல ஊர்களுக்குச் சென்று கூட்டம் போட்டுப் பேசிய ஒரே தலைவர் பெரியார்தான். சென்ற ஆண்டு நெடுக தென் மாவட்டங்களில் நீடித்த சாதிக் கலவரங்களின்போது ஒருபுறம் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கும், மற்றோர் புறம் அம்பேத்கர், இம்மானுவேல் சிலைகளுக்கும் அவமரியாதை நடந்து வந்த சமயத்தில் சி.பி.எம். கட்சியின் இன்றைய தமிழ் மாநிலச் செயலாளர் என். சங்கரய்யா, முத்துராமலிங்கத் தேவரும், அம்பேத்கரும் இரு கண்கள் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.)

ஆனால் (1938க்குப்பிந்திய பெரியார் பற்றி) பி.ராமமூர்த்தி எழுதுகிறார்: "பிராமணர்கள், அனைவரையும் விட பிறப்பால் உயர்ந்தவர்கள் என்கிற மடமையான ஒரு தத்துவத்தை முழுமூச்சுடன் எதிர்ப்பது நியாயம். ஆனால் இதர உயர்சாதியினரிடமும் உள்ள அதேபோன்ற ஜாதீய ஆதிக்க உணர்வுகளை எதிர்ப்பதற்கும் பெரியார் பிற்காலத்தில் ஒன்றும் செய்யவில்லை". முத்துராமலிங்கத் தேவர் விஷயத்தில் மட்டுமல்ல, தனது சாவிற்கு ஆறு கிழமைகளுக்கு முன்பும் கூட (11-11-73) மதுரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் முக்குலத்தோர் எனப்படுபவர்களில் ஒரு பிரிவினரான கள்ளர்களின் ஜாதிய உணர்வை விமர்சித்து, அவர்கள் தமது சூத்திரத் தன்மையிலிருந்து நீங்க வேண்டும் என்று பேசியதால் கல்லடித் தாக்குதலுக்குள்ளானார் பெரியார். (விடுதலை - 20.11.73)

பி.ராமமூர்த்தி கொட்டிக்குவிந்துள்ள அபத்தங்களையும், அண்டப் புளுகுகளையும் கி. வீரமணி தனது 600 பக்க நூலில் விரிவாகத் தொகுத்துத் தந்துள்ளார். இந்திய வரலாறு பற்றிய அபத்தங்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கம், பெரியார் பற்றிய அவதூறுகள் ஆகியவற்றின் கர்த்தாவான ராமமூர்த்தியால் சோவியத் வரலாறும் கூட எப்படிச் சிதைக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்போம்: "1929ஆம் ஆண்டு உலக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாகும்" எனத்தொடங்கும் அத்தியாயத்தில் ('பெரியாரின் சமதர்மப் பிரச்சாரம் ஆரம்பமும் முடிவும்') அவர் கூறுகிறார்: "அதே ஆண்டில் சோவியத் யூனியனை முதல் யுத்தத்திற்குப் பிறகு 14 வல்லரசுகள் சேர்ந்து ஒழிப்பதற்காக பல சாகசங்கள் புரிந்தன. இந்த முயற்சிகளையும் அதற்கு முன்பிருந்த ஆதிக்கவர்க்கங்கள், அந்த சர்க்காரை தகர்த்து எறிவதற்காக நடத்திய உள்நாட்டு யுத்தம் ஆகியவைகளையும் முறியடித்தது...."(ப.146).

இப்படிப்பட்ட 'கம்யூனிஸ்டுகள்' பிற இயக்கங்களைப் பற்றி எழுதுகையில் எத்தகைய 'உண்மைகளை' வெளியிடுவார்கள் என்பது சூரியசந்திரனுக்கே வெளிச்சம்! பெரியார் பெருந்தன்மைக்காரர் என்பதை ஒப்புக்கொள்கிற சூரிய சந்திரன், அந்தப்பெருந்தன்மை பி.ஆரின் நூலில் எள்ளளவும் வெளிப்படவில்லை என்பதைக் காண வேண்டும்.

அடுத்த இதழில் முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் விமர்சனம்

# யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு

வடிவேல் இன்பமோகன்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டு உள்ள வவுனியா வளாகத்தின் ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனின் 'யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு' எனும் நூல் ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வளர்ச்சியில் புதியதொரு வரவு எனலாம்.

1985ல் இருந்து இவர் எழுதிய நாடகம் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பாக இது வெளிவந்துள்ளது. இக்கட்டுரைகளில் அனேகமானவை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியானவை.

1980க்குப்பின்னர் ஈழத் தமிழரின் சமூக அசைவியக்கத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. இக்காலத்தில் தமிழ் மக்களிடையே மேற்கிளம்பிய தேசிய உணர்வின் அதி உன்னத நிலை, அதன் விளைவான தேசிய விடுதலைப் போராட்டம், சிங்களப்பேரினவாதத்தின், தமிழ்ப் பிரதேசங்களின் மேலான ஆக்கிரமிப்பு, தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிர், பொருளாதார இழப்பு, மக்களின் இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை போன்றவற்றை அடையாளங் காணலாம். இவை மக்களின் இயல்பான வாழ்க்கை முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. வாழ்க்கை மாற்றம் கலைஞர்களிடம் இருந்து சமகாலத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய படைப்புக்களை எதிர்பார்த்தது. இதனால் இக்கால கலைகள் பாரம்பரிய மரபில் இருந்து விடுபட்டுப் புதிய பரிமாணத்தைப்பெற்று வளர்ச்சியடைய வேண்டிய தேவைக்குள்ளாகின்றன. இதனைச் சிறப்பாக நாடகக் கலையில் அவதானிக்கலாம். ஸ்ரீகணேசனின் இந் நூல் மேற்குறித்த சமூக மாற்றத்தினூடே ஏற்பட்ட அரங்க விருத்தியை விளக்க முற்படுகின்றது எனவே இந் நூல் ஒரு காலத்தின் தேவை எனலாம்.

ஸ்ரீகணேசன் அவர்களின் இந் நூலில் இடம்பெறும் இக் கட்டுரைகளை இரண்டு பகுதியாகப் பகுத்து நோக்கலாம்.

1. 1980க்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அளிக்கை செய்யப்பட்ட நாடகங்களுக்குக் காலத்துக்குக் காலம் இவர் எழுதிய விமர்சனங்கள்.
2. யாழ்ப்பாண அரங்கை மையப்படுத்தி ஈழத்து அரங்கு தொடர்பாகவும், தமிழ் அரங்கு தொடர்பாகவும் இவரின் சிந்தனைத் திரட்சியாய் வெளிவந்த கட்டுரைகள் என்பனவாகும்.

முதலில் இவரின் நாடக விமர்சனங்களை நோக்கின், கலைப்படைப்புகளில் இருந்து நாடகக்ககலையை வேறுபடுத்தும் பண்பு அது நிகழ்ந்து கொண்டு இருக்கும்போது உருவாகும் கலையாகும். ஏனைய சந்தர்ப்பங்களில் அதன் கலைத்தன்மையை அடையாளங் காணமுடியாது. இச்சந்தர்ப்பத்தில், நாடகக் கலையை ஏனைய, கலைகளைப் போன்று என்றும் வாழும் கலையாக மாற்ற நாடக விமர்சனம் உதவுகின்றது. இது ஸ்ரீகணேசன் அவர்களின் நாடக விமர்சனங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த உதவும். இங்கு இவரின் எட்டு விமர்சனக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு உள்ளன.

நாடக விமர்சனத்தில் பல வகைப் போக்குகள் உண்டு. அவை குறித்து விமர்சகனின் அரங்கியல் பார்வையைப்பொறுத்து அமையும். ஸ்ரீகணேசன் அவர்களின் விமர்சனங்களில் சில போக்குகளை இனங் காணக் கூடியதாக இருந்தது.

ஸ்ரீகணேசன் அவர்களின் விமர்சனங்களில் மேலோங்கி நிற்கும் பண்புகளில் ஒன்று, குறித்த நாடகக் காட்சியை மக்களின் மனக்கண்ணில் கொண்டு வருவதாகும். இங்கு, குறித்த நாடகத்தைப் பார்க்கத் தவறிய பார்வையாளனும், இவரின் விமர்சனத்தை வாசித்தவுடன் ஒரு பார்வையாளன் பெறக்கூடிய உணர்வைப் பெறக்கூடிய 'சூழலை உருவாக்கி இருந்தார். கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் 'விடிவு' நாடகத்துக்கு எழுதிய விமர்சனத்தின் ஒரு பகுதி இதனை விளக்கும்.

''நாட்டிய நாடகம் ஆரம்பத்தில் கதை சொல்வோரின் நாட்டுக்கூத்துப் பாணியில் அமைந்த வெளிப்பாடாகச் சபை வணக்கம் கூறப்படுகின்றது. ''பழைய கதைகள் கூற வில்லை, புதிய கதைகள் கூற வந்தோம்'' என ஆரம்பத்திலேயே முத்திரை குத்தப்படும் போது சபையில் உள்ளோர் நிமிர்ந்து உட்காருகின்றனர். நான்கு கதை சொல்வோரும் குறவன், குறத்திப் பாணியில் உடையலங்காரம் செய்யப்பட்டு இருந்தனர். இவர்களுடன் சேர்ந்து மேடையின் முன்புற ஓரத்தில் இசையமைப்பாளரும், பாடகர்களும் அமர்ந்து பின்னணி வழங்கிக் கொண்டிருந்தார்கள்''

மேற்குறித்த இப் போக்கை அரங்கியல் சார்ந்த ஒரு பார்வை எனலாம்.

அடுத்து இவரின் விமர்சனங்களில் குறித்த காலச் சூழலைக் கொண்டு வரும் சமூகவியல் சார்ந்த போக்கும் இருந்தது. இப்போக்கு குறித்த ஒரு காலத்தைப் பதிவு செய்வதற்கு உதவும். 80க்குப் பின்னர் யாழ்ப்பாண மக்கள் சந்தித்த அவலங்கள், இடம் பெயர்வு, சுகாதரக் குறைபாடு போன்ற பல விடயங்கள் வெளிப்படுகின்றன. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் யார்க்கெடுத்துரைப்பேன், கிளிநொச்சி மக்கள் முகம் கொடுக்கும் தண்ணீர்ப் பிரச்சினை இரு அரங்க நிகழ்வுகள் என்பன போன்ற விமர்சனங்கள் இப் போக்கினைக் குறிப்பாக அடையாளப்படுத்தி நிற்கின்றன.

ஸ்ரீகணேசன் அவர்களின் விமர்சனங்களின் ஊடே புலப்படும் அடுத்த பண்பு குறித்த கால அரசியல் பின்புலத்தைச் சுட்டிக் காட்டுவதாகும். கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் ''வேடனும் புறாக்களும்'' நாடகத்துக்கான விமர்சனத்தில் ''அக்கால அரசியல் முதியவர்களிடம் இருந்து இன்னொரு தலைமுறையினருக்கு மாறிக்கொண்டு இருப்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தம்'' என்கிறார்.

இதே போல் மண் சுமந்த மேனியர் விமர்சனத்தின் மூலம் ''வாரணம் பொருத மாரிவும்'' என்னும் கம்பராமாயணப்பாடல் பொருத்தமான அன்றைய, இன்றைய இலங்கை அரசியல் தலைவர்களின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. ''தங்கள் தலை தப்பினால் போதும் யாரும் நெஞ்சைக் கொடுக்கட்டும்'' என்னும் மனோபாவத்தையே இது சுட்டுகிறது'' என்னும் கருத்தை முன்வைக்கின்றார்.

உயிர்த்த மனிதன் கூத்துப் பற்றி, ''உயிர்த்த மனிதன் கூத்துத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றைப் பூடகமாகச் சுட்டிக்காட்டி நிற்கின்றது. அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு மக்களை அணி திரளச் செய்கின்றது'' என்கின்றார். இங்கு இந் நூலினூடே ஒரு அரசியல் வரலாறு தொடரப்படுவதை அவதானிக்கலாம்.

அடுத்து அவதானிக்கக் கூடியதாக இருப்பது நாடக அரங்கின் கல்வியியல் முக்கியத்துவத்தை இனங் காட்டும் போக்காகும். இவர் ஒரு ஆசிரியராக விளங்கிய நிலையில், கல்வியையும், அரங்கையும் தொடர்புபடுத்தி இன்றைய கல்வியமைப்பில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுவதுடன், இக் கல்வியரங்கு மாணவர்களின் திறன்களை வளர்க்க உதவும் என்கின்றார்.



யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு
கந்தையா ஸ்ரீகணேசன்
வெளியீடு :
கலை இலக்கிய வட்ட நண்பர்கள்
வவுனியா
விலை ரூபா 100.00

''சிறுவர் நாடகத்தின் மூலம் சீர்கெட்டு இருக்கும் கல்வியமைப்பைச் சீராக்க வேண்டும்'' என்றும், ''மரபு மயப்பட்டதான காலனித்துவக் கல்வியமைப்பு மாணவர்களை வெறும் பொம்மைகளாக்கி ஆற்றலற்றவர்களாக்குகின்றது. மாறாக மாணவர்களின் உள்ளுறைப் படைப்பாற்றலை வெளிக்கொணர்வதற்கு ஆற்றல் உடைய வலிமையான ஊடகமாக அரங்கு செயற்பட முடியும்'' என்னும் கருத்துக்கள் மூலம் இவரின் கல்வியியல் நோக்குப் புலப்படுகின்றது.

மேற்கண்டவாறு பல சிறப்புப் பண்புகளை இவரின் விமர்சனக் கட்டுரைகள் கொண்டு உள்ள போதும் சில விடயங்களில் ஆசிரியரின் கவனம் இன்னும் நோக்கத்தக்கது. அரங்கின் பண்பாட்டு ரீதியான பார்வை இவரிடம் இருக்கவில்லை. எமது தேசியப்பண்பாட்டு விழுமியங்கள் பல்வேறு நிலைகளில் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிச் சிதைந்து கொண்டு இருக்கும் இன்றைய கால கட்டத்தில் அரங்கில் பண்பாட்டு ரீதியான பார்வை தமிழர், தமிழ்க் கலைகளை ஆற்றுப்படுத்த உதவும்.

அடுத்து இங்கு இடம்பெறும் விமர்சனங்களிலே நாடகம் அளிக்கை செய்த காலம், இடம், ஆசிரியர் போன்ற தகவல்கள் கிடைக்கவில்லை. இந்நூல் ஒரு வரலாற்றுப் பதிவாகக் கணிக்கப்பட இவை தேவை. மேற்குறித்த விடயங்கள் சேர்க்கப்பட்டு இருந்தால் இவரின் விமர்சனக் கட்டுரைகள் முழுமை பெற்று இருக்கும்.

அடுத்து இவரின் யாழ்ப்பாண அரங்கை மையமாகக் கொண்டு எழுதிய கட்டுரைகளை நோக்கின், எமது அரங்க வளர்ச்சியில் இன்று வரை தொடரப்படும் பாரம்பரிய அரங்கு- நவீன அரங்கு, கிராமிய அரங்கு- செந்நெறி அரங்கு என்னும் விடயங்களுக்கே கூடிய அழுத்தம் கொடுக்கின்றார்.

ஈழத்துத் தமிழருக்கு என்று ஒரு இசை நடனப் பாரம்பரியம் என்னும் கட்டுரையில் செந்நெறி - கிராமியக் கலை தொடர்பான பிரச்சினையை வெளிப்படுத்துகின்றார். இங்கு பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் என்பனவற்றை எமது தனித்துவமான இசை நடனப் பாரம்பரியம் என நம்பி எமது தனித்துவமான இசை நடனங்களான கூத்திசை, பண்ணிசை, நாட்டார் இசை, கிராமிய மக்கள் மத்தியில் பயில் நிலையில் உள்ள ஆடல் வகை என்பனவற்றைக் கவனியாது விடுகின்றோம் என்பதையும், இவையே எமது தனித்துவத்தைப் பேணும் கலை வடிவம் எனக்கூறி இவற்றின் மேல் எமது கவனத்தைத் தூண்ட முயற்சி செய்கின்றார்.

பாரம்பரியமும்,நவீனத்துவமும் எமது அரங்க வளர்ச்சியில் இன்று ஒரு பிரச்சினையா? என்னும் கட்டுரையில், பாரம்பரியக் கலைகளை எவ்விதம் பேண வேண்டும் என்னும் கருத்தை முன் வைக்கின்றார். இங்கு பாரம்பரியக் கூத்தை அது இயல்புடன் வாழும் கிராமத்து மக்களே ஆட வேண்டும், பல்கலைக்கழம் போன்றன, அரைகுறைப் பயிற்சியுடன் இவற்றைப் பேண முற்பட்டால் அது நம்மை நாமே ஏமாற்றும் முயற்சி என்கின்றார். இவரின் இக்கருத்து பாரம்பரியக் கலை கிராமிய மக்களிடம் உள்ளதாலேயே இன்று மருவிச் செல்கின்றது என்றும் கற்றோர் அதன் வீழ்ச்சிக்கான காரணங்களை உணர்ந்து அவற்றைப் பேண வேண்டும் என்னும் கருத்துக்கு எதிரான கருத்துப் போல் உள்ளது.

ஒரு நாடகவியலாளன் தன் குருவுக்கு எழுதும் கடிதம் என்னும் கட்டுரையில் சமகாலக் கருவைக் கதாபாத்திரமாகக் கொண்ட ஒரு படைப்பை மேடைக்கெனத் தயாரிக்கும் போது பழைய காலக்கருவுக்கும் புராண இதிகாசக் கதை மாந்தரைச் சித்திரிப்பதற்குப் பயன்பட்ட ஒரு படிமத்தைப் பயன்படுத்துவது எவ்வளவு தூரம் பொருத்தமானது என வினா எழுப்புகிறார். இவ்வாறான செயற்பாடுகள் ஈழத்து, தமிழ் நாட்டு அரங்கச் செயற்பாட்டில் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாகப் பல வாதப், பிரதிவாதங்கள் அரங்கியலாளர்களிடையே

→19

---

**கனல்**

*'நான்கு பெண்களின் கவிதைகள்'*
*வெளியீடு:*
*சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,*
*27 A லேடி மனிங் டிறைவ்,*
*மட்டக்களப்பு.*
*விலை: 25/=*

1997ம் ஆண்டு மார்ச் மாத சர்வதேச பெண்கள் தின கவிதா நிகழ்வில் பங்கேற்றவர்களில் நால்வரின் கவிதைகள் என்ற பின்னணி அறிமுகத்தோடு இக்கவிதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது.

சுதாகரி சுப்பிரமணியம், விஜயலட்சுமி கந்தையா, ஜெயந்தி தளையசிங்கம், சுதாகினி சுப்பிரமணியம் ஆகியோரின் பதின்மூன்று கவிதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. 'கனல்' என்ற பெயரோடு மட்டும் சிறிவள்ளி அம்மன் சிதம்பரப்பிள்ளையின் 'பெயின்டிங்' அட்டையை அவதானிக்க வைக்கிறது.

இந்த நூலைப் பார்க்கையிலும், பெண்கள்/ பெண்ணுரிமை அமைப்புக்களது வெளியீடுகள், நிகழ்வுகள் பற்றிக்கூறப்படுகிற அல்லது விமர்சிக்கப்படுகிற கூற்றே முன்னெழுகிறது. அதாவது 'பெண்களென்றதற்காக முன்னெடுக்கப்படுகிறவைகளாகவே அனேகமானவை இருக்கிறது என்பதே அந்தக்கூற்று அல்லது விமர்சனம். இந்த நூலும் 'கவிதை' என்ற ஊடகம் எந்த மாதிரி இருக்கிறது என்பதை விட எழுதியவர்கள் பெண்களாக இருக்கிறார்கள் என்பதை அழுத்திக் கூறுவதாகத்தான் உள்ளது. பெண்ணியக் கருத்துக்கள், கவிதைகள் என்ற இரண்டு விடயங்கள் இங்கு உள்ளன. நூலைப்பொறுத்தவரை இவற்றைத்தனித்தனியே பார்க்க முடியாது. 'கவிதைகள் மூலமான கருத்துக்களே இவைகள். எனவே இரண்டையும் இணைத்துத்தான் பார்க்க வேண்டும். பார்த்தால் கவிதை பற்றிய கேள்வி எழுகிறது... இக் கேள்வி எழுகிறவர்களுக்கு முன்னுரை எழுதிய சித்ரலேகாவால் ஒரு விடை கூறப்படுகிறது; ''இத்தொகுப்பிலுள்ள கவிதைகளை எழுதிய சுதாகரி, விஜயலட்சுமி, ஜெயந்தி, சுதாகினி ஆகியோர் தம்மைக் கவிஞர்கள் என முத்திரை குத்திக்கொண்டவர்களல்லர். அல்லது கவிதையாக்கத்தின் தத்துவங்கள் பற்றிய விவாதங்களில் ஈடுபடுபவர்களுமல்லர். ஆனால் தமது உணர்வுகளையும், சிந்தனைகளையும், அபிலாஷைகளையும், ஆர்வங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற விருப்புடையவர்கள்''.

இந்த விருப்புக்கள் கவிதைகளாகியிருக்கின்றனவா? என்றால் இல்லையென்றே கூறவேண்டியிருக்கிறது. கவிதைகள் என்றபடியால் கவிதைகளாகவும் பார்க்கவேண்டியிருக்கிறது என்பதால்தான் மேற்கூறிய விமர்சனத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது.


கருத்துக்களை, விருப்புக்களை படைப்புத்தரத்துடன் முன்வைத்த கலை, இலக்கியங்கள் நிறையவுண்டு. 'சூரியா'வும் தேடியிருந்தால் நல்ல படைப்பாளிகளை இனங்கண்டு நல்லதொரு நூலைத் தந்திருக்கலாம். 'சொல்லாத சேதிகள்' சிறியதாக இருந்தும் நல்ல சில படைப்பாளிகளின் படைப்புக்களால் இன்னும் பேசப்படுவதாக உள்ளது. 'சொல்லாத சேதி'களுக்குப்பிறகு 'பெண்களது எழுத்துக்கள் வீழ்ச்சி கண்டுள்ளன' என்ற குறைசொல்லலுக்கு இந்த நூல் ஆதாரமாகக் கூடக் கொள்ளப்படலாம்.

பெண்ணிய அல்லது பெண்கள் அமைப்பினது கலை, இலக்கிய வெளியீடுகள் 'பெண்களை' அறிமுகப்படுத்துவதை விடுத்து 'பெண் படைப்பாளிகளை' அறிமுகப் படுத்தும் பணியைச் செய்யலாம். இது முடியாத காரியமல்ல. எம் மண் நிறையப் பெண் படைப்பாளிகளைச் சுமந்து பெற்றிருக்கிறது.

இதை ஒரு 'குற்றம்காணலாய்' எடுக்காமல் ஒரு விமர்சனமாய் கருத்திற்கொண்டு நல்ல கருத்தாழமிக்க படைப்புக்களை வெளிக்கொணர்வார்களா..?

—— நில்ஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# சுந்தரிக்கு மொட்டைக் கடிதங்கள் வரும் !

சரிநிகர் இதழ் 141இனுடைய இழுபட்டுப்போன படங்களைக் கண்டு பயந்ததனாலேயோ என்னமோ எனது வாசிப்பு கடைசிப் பக்கத்திலிருந்து தொடங்கியது. சரிநிகரில் வந்த தொடரும் ஆண்டுக்கான நல்ல சில கதைகளைத் தெரிவு செய்தால் இதுவும் இடம்பெறும்.

நமது சமூகத்தில் பால் உறவின் மீதான நெறிகள் நுழைந்தது மிகச் சமீபத்தில் அல்ல என்பதைப் போலவே, முறை சாராப் பாலுறவு, முறைசாரா உறவினர் வழியான பாலியல் வல்லுறவுச் செயல்களும் 'கல்தோன்றி மண் தோன்றும்' போதே தோன்றி விட்டது. ஆனால் அதனை எந்தத் தமிழ்ப்பெண் எழுத்தாளி/ எழுத்தாளிகள் இதுவரை இப்படிப் பட்டவர்த்தனமாய்ப் போட்டுடைத்திருக்கிறாள்/ர்கள்? சந்ததி சந்ததியாகப் பெண்கள் இந்தக் கதையில் வரும் 'மிருகம்' போன்ற, அல்லது கோயில் பூனைகளால் தங்களுக்கிழைக்கப்படும் அத்து மீறல்களை மறைத்து உள்ளுக்குள் புழுங்கியே வந்திருக்கிறார்கள். உள்ளுக்குள் புழுங்குவதே பழகிப் போனதால் அது குறித்து 'அசிங்கம்' என்ற தன்மையும், அதையும் பாழாய்ப்போன தாலிகட்டுத் திருமணத்தையும் ஒன்றாகவே பார்த்துப் பார்த்துக் கதையின் சுகந்தி போல தமது வாழ்வே இதனால் பாதிக்கப் பட்டது போல இருப்பவர் எத்தனை? உணவு, சுவாசம் என்பன போல, ஓர் அடிப்படைத் தேவை உந்துதலாக மரபணுக்களில் இருக்கின்ற பாலுணர்வை ஏற்கெனவே சமூக விலக்குகளால், தடைகளால் நெறிகளால் மூடிக்கொண்டு மனப்பிறழ்வு நோயாளியாகப் பலர் இருக்கும் நிலையில்; அந்த நெறிகளும் இன்ன பிறவுமே முன்னோடியாகச் சரியாதென எடுக்கப்படுவதனால் இருக்கும் சமூக விளைவுகள் ஒரு பக்கம். இதன் விளைவான தங்கள் பாலியல் வக்கிரங்களைப் பயந்து போகும் குணமுடைய, சிறுமிகளாகவுள்ள, இளம் பெண்களாகவுள்ள, கையறுநிலையில் இருக்கும் பெண்களிடம் தீர்த்துக் கொள்ளும் பலர். இதற்கு மறைமுகத் துணை போபவர்களாக, இதன் பாதிப்புக்களில் இருந்து வெளிவராமல் அதனை விதியே என்று சகித்துக் கொண்டிருப்பார்கள். இதையே காயமாகவும், தாங்கள் செய்த பாவமாகவும் எடுத்துக் கொண்டவர்களின் மனநிலையையும், அதன் அடுத்த கட்டத்தை நோக்கிய நகர்வையுமே இந்தக் கதை முன்வைக்கிறது.

முறைசாரா, முறைசார்ந்த உறவினரின் வல்லுறவு மட்டுமல்லாது, இன்றைய தமிழ்ச் சமூகம் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் (IPKFக்கு முன்னும் பின்னும்) வழியாக இராணுவ அல்லது அதிகாரக் கருவிகளாக இருக்கும் ஆண்களின் வல்லுறவுக்கும் எண்ணற்ற பெண்கள் முகம்கொடுக்கும் வேளை இது. இவையனைத்தும் எதிர்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படையான பிரச்சினைகளாக்கப்பட வேண்டுமேயல்லாது, நமது மரபினால் தயாரிக்கப் பட்ட கற்பு, ஒழுக்கம் இன்னபிற விழுமியங்களுடன் இச்சம்பவங்களைப் பார்த்து குழப்பமடைய வேண்டியதில்லை. தாலிகட்டுக் கலியாணத்துக் கணவனுடனான விருப்பமில்லாத உடல் உறவுக்கும், மேற் சொன்ன சம்பவங்களின் வல்லுறவுக்கும் எவ்வித வேறுபாடும் அற்ற நிலையில், இத்தகைய விடயங்கள் பெண்களால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டு, பேசப்பட்டு, சரியான மரபிலிருந்து வேறுபட்ட அணுகுமுறை வழங்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த மன, உடல் ஒத்திசைவுக்கான சமூகத்தின் தேவையைத் தெளிவாக்க வேண்டும்.

இந்நிலையில் மிகச்சரியாக, இடைநிலையில் உள்ள பாத்திரமாகவே சுகந்தி படைக்கப்பட்டிருப்பது இக்கதையின் சிறப்பு. சுகந்தியின் பாத்திரம் யதார்த்தம் மீறி மீயதார்த்த நிலையில் சிந்திப்பதும் யன்னல், வெளி, வானம், உலகு, சமூகம் என்ற அளவில் உயிரற்றவர்களோடு தன் உறவுகளை ஸ்தாபித்து வரும் அதேவேளை, 'பண்பாடு' நமக்குக் குட்டிக் குட்டிச் சொல்லித் தந்த விழுமியங்களைப் பகுத்துப் பார்க்க முடியாமல் குழம்புகின்றது இதுதான் இன்று பன்முகப்பட்ட சமூகங்களின் சமூகத்தளங்களின் பரிச்சயம் கொண்ட நம் சமூகப் பெண்களின் நிலை.

சுந்தரி தேவையில்லாத பயத்துடன் உறவு குறிப்பிடாமல் விட்ட முதிய பெண் பாத்திரம் - அடுத்த சந்ததி. ஒரு வேளை அது சுகந்தியின் அம்மாவாக, அக்காவாக, மச்சாளாக, மாமியாக, சித்தியாக இருக்கலாம் - சுகந்திக்கு முந்தைய தலைமுறை அந்தத்தலைமுறை அப்படியே தான் இருக்கிறது. இந்தக் கதையைப் படித்து விட்டு அது தளம்பலான பாத்திரம், முழுமையில்லை அது இது என்று எமது விமர்சக விற்பன்னர்கள் எழுதக் கூடும். நடைமுறை வாழ்வில் இவர்கள் எப்போதும் சந்திப்பது Perfectum ultimaiumகள் தான் என்று விட்டு விடவேண்டியது தான். இதுபோல இப்படிப்பட்ட (எல்லாக் கதைகளையும்) எழுதும் போதும் வேறு ஓர் சிக்கலும் இருக்கிறது: எனக்கு அறிமுகமான நண்பர் ஓர் முதிர் வாலிபனின் கல்யாணமாகாத பிரச்சினையைக் கதையாக்கியிருக்கிறார். அதைப் படித்த அண்டை நாட்டில் வசிக்கும் அவருடைய பால்ய நண்பர் ஜாதகக் குறிப்புகளுடன் ஓர் பெண்ணைப் பற்றி விபரமனுப்பியிருக்கிறார். இதைப் போலப் பலவுண்டு. காதல் கதை, மரணக்கதை என்று ஏதாவது எழுதினால் உங்கள் அனுபவம் பற்றி விமர்சகர்களுக்குச் சந்தேகம் வந்து விடும். இதைப் போலவே சுந்தரிக்கு ஏதும் அனுதாபக் கடிதங்களோ, அல்லது சுந்தரியின் கணவருக்கு, வருங்காலத்துக்கு, துணைக்கு மொட்டைக் கடிதங்களோ வர வாய்ப்பிருக்கிறது.

இந்தப் 'பெரிய' பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாது இத்தகைய எழுத்தாளர்களை ஊக்குவிக்கலாம். அந்தக் கதையின் முதல் இரு பந்திகளிலும் தொனித்த நடையின் தேடலும், துணிவும் பின்னர் ஏன் காணாமற் போனது? தனது கதைகளை அழகியல் செதுக்கலுக்குட் படுத்த இவர் கவனம் கொள்ளலாம்.

அடுத்தது 'தலித்தியக் குறிப்புக்கள்' பற்றி அருந்ததியன் 'எது எதிர்ப் புரட்சி'யை ஏன் எழுதினேன் என்று விளக்கம் அளித்திருக்கிறார். இதற்கெல்லாம், எ்ழுதாமல் தான் விளக்கமளிக்க வேண்டும். தலித்திய நிலைப் பாட்டின் தேவையை, அதன், அது உணரும் பிரச்சினைகளை உணர மறுப்பவர்களையும் கூட சுட்டிக் காட்டித் தானேயாகவேண்டும்.

எனக்குத் தெரிந்தவரை அருந்ததியன் சார்ந்துள்ள/ எழுதுகின்ற வார இதழ் எந்தவிதத்திலும் அமெரிக்க உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும், சி.என்.என்னுக்கும் கிட்டவும் நெருங்க முடியாது. மேற்படிகளைப் பிரச்சாரக் கருவியாகப் 'பயன்படுத்த மட்டுமே' அமெரிக்க அதிபர் தேர்தலில் நிற்கும், நின்று வாய்ப்பை/ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் (இப்போது சோசலிஷ சமத்துவ) ''க''வினர் உங்களைக் குற்றம் சொல்லுவது தான் வேடிக்கையாக உள்ளது. அநேகமாக உங்களுடன் நிகழ்ந்த சந்திப்பும் நீங்கள் எழுதிய குறிப்பும் கூட 'சரிநிகரைப்' பயன்படுத்த அவர்கள் செய்த பிரச்சாரத் தந்திரமோ் யாரறிவார். அது நிற்க, சிங்கள மொழி பேசுவோரிடையே உள்ள 'பெரவா' சாதி இன்னும் சமூகப் புறக்கணிப்பு, தாக்குதலுக்கு உள்ளாகிறதா என்று பார்த்து எழுதமுடியுமா அருந்ததியன்.

பிற்சேர்க்கை; வட்டுக்கோட்டை சாதீயச் சண்டை என்ன, ஏன் என்பனவைகளை உற்று நோக்க முடியுமா சரிநிகர்.

**எஸ்.வி.ரஃபேல்**

**பரிஸ்**

# பெண் ஒருபாலுறவிலும் மேலாதிக்கம் ?

மார்ச் 8 மகளிர் தினம் என்பதால் அதன் பிரதி விம்பம் இதழ் 142இல் எதிரொலித்தது. சுனிலா அபேசேகரவின் கருத்துக்களை பிரசுரித்து இருந்தீர்கள். பெண் ஒருபாலுறவு (லெஸ்பியன்) பற்றி கருத்துக் கூறியிருந்தார். பெண் விடுதலையாளர் எனக்கூறி கொள்ளும் ஒரு சிலரிடம் வெளிப்படையாக நிகழும், உரிமையுடன் கூறிக்கொள்ளும் ஒரு விடயமாகும் இது. ''ஆணாதிக்க'' சூழலுக்கு மாற்று எனப் பலர் மார்தட்டியும் கொள்கிறார்கள். அதே நேரம் பக்கம் 6இல் குடும்ப வன்முறை என்ற பந்தியில், சக லெஸ்பியன்களால் சித்திரவதைக்குள்ளாகுபவர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் பாலுறவிலுள்ள இந்தச் சித்திரவதை என்ன ஆதிக்கம்? பாலுறவில் ஆணாதிக்கம் எனக் கூக்குரலிடும் பெண்கள், தமக்குள்ளான உறவினை நியாயப்படுத்தி வருகிறார்கள் அல்லவா? அவர்கள் இது பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை உங்கள் பத்திரிகை வாயிலாக வினவிப் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

''வெலிக்கடைத் தமிழ்ப் பெண் சிறைக் கைதிகள்'' கண்டேன். எம் நாட்டில் தமிழர்களுக்கு சிறப்பு நீதி இருப்பது யாவரும் அறிந்ததே! லெஸ்பியன் உரிமை பற்றியும், பெண் விடுதலை பற்றியும் புரட்சிக் கொடி பிடிக்கும் அம்மணிகள், சிறைக் கம்பிகளுக்குள் நசியும் தமிழ் மாதரின் அடிப்படை மனித உரிமைகளைப் பற்றி அறியாரோ? அறிந்தும் அறியாதது போலிருக்கின்றார்களோ? அப்படியான வன்முறைகளுக்கெதிராகப் போராடும் விடுதலை, பெண் விடுதலை என்ற நாமத்தின் கீழ் இல்லையா? பெண் விடுதலை என்பது லெஸ்பியன் உரிமைகளுக்காகவும், மேல்மட்டப் பெண்கள் பாதிக்கப்படும் போது ஓரணி திரண்டு கூக்குரலிடுவதும் தாலியும், பொட்டும் அடிமைச் சின்னம் எனப் பத்தி எழுதவும் என்ற அடிப்படையின் வெளிப்பாடு மட்டும் தானா?

**கேகாலை மலர்**

# எழுதப்பட்டது மதிப்பீடு அல்ல !

நட்சத்திரன் செவ்விந்தியன் எனது கடிதத்திற்கு எதிர்வினையாக எழுதியவை குறித்து சில சொற்கள்:

நான் எழுதிய கடிதம் ந. செயுடைய அபிப்பிராயங்கள் பற்றிய கவலையால் அல்ல. ஒரு நூல் பற்றிய மதிப்பீடு என்ற பேரில் எழுதப்பட்ட சில கருத்துக்கட்கும் நூல் பற்றிய மதிப்பீட்டுக்கும் தொடர்பு அதிகம் இல்லாமையாலேயே அதை எழுத நேர்ந்தது. முருகையன் பற்றிய அவரது மதிப்பீடு மாறியமையையிட்டு நானும், ஒரு வேளை முருகையனும் மகிழ இடமுண்டு. ஆயினும் முருகையன் பற்றிக் கருத்தை உதிர்த்த தோரணையிலேயே ந.செ. தொடர்ந்தும் எல்லாரையும் குட்ட முனைவது பற்றி நான் மகிழ இடமில்லை. கருத்துக்கள் மாறுவதையோ மாறாமலிருப்பதையே விட அவை எந்த அடிப்படையில் வந்தடையப்படுகின்றன, எந்த அடிப் படையில் மாறுகின்றன என்பது முக்கியமானது.

எஸ்.வி, ராஜதுரையின் நூல் விமர்சனம் (?) ஈழத்து அரசியல் வரலாறு பற்றி அவரது அறியாமையைச் சிறிது வெளிப்படுத்தி விட்டது என்னவோ உண்மை. அதை நான் சுட்டிக் காட்டப்போக, அவர் அவிழ்த்து விட்ட அஸ்திரங்கட்கும் எனது கடிதத்திற்கும் சம்பந்தமில்லை. விஷயத் தொடர்பாகவே விவாதிக்க விரும்பும் எனக்கு அவரது பதிலில் இருந்த பயனுள்ள பகுதி காந்தி எடுத்த குண்டூசியை விடச் சற்றே பெரியது தான் (காந்தி வெள்ளையனின் கடிதத்தில் பயனுள்ளதாகக் காணத் தவறிய பகுதிகள் வேறு எவருக்கும் பயனற்வையாயிருக்க என்ன நியாயம்?)

எஸ். பொன்னுத்துரை எனது அபிமான எழுத்தாளருமல்ல. அவரை எவரும் வந்தனை செய்து வழிபட வேண்டும் என்பது எனது ஆவலுமல்ல. இடதுசாரிகள் மீது (குறிப்பாக கைலாசபதி, சிவத்தம்பி மீது) அவரது தரக் குறைவான தாக்குதல்களை நான் விமர்சித்துள்ள அதேவேளை, அவர் மீதான விமர்சனங்கள் பொறுப்பான முறையில் முன்வைக்கப்படுவதையே வலியுறுத்துகிறேன்.

'பனியும் பனையும்' அவசியமான ஒரு முயற்சி. அதில் உள்ள குறைகளை விமர்சிப்பது ஒரு விஷயம். தொகுப்பாளருக்கு நோக்கம் கற்பிப்பது வேறு விஷமம்.

எஸ்.பொ.பிற எழுத்தாளர் மீது திருட்டுக்குற்றம் சுமத்தியவர். அவரே தவறியிருந்தால், குற்றம் இன்னும் பெரியது. எனினும் பாதிப்புக்குள்ளானோரெனக் கூறப்படுவோர் முன் வராத அளவில் குற்றச்சாட்டுக்கள், அவற்றுக்கு உரிய களத்தில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்படுவது முறையானது. அல்லாத பட்சத்தில் அரட்டைகளும் வதந்திகளும் அவதூறுகளும் பத்திரிகையின் பக்கங்களை அடைத்துக்கொள்வது தவிர்க்க முடியாதது. (ஜெயபாலனை இலக்காக்கி வரும் தனிப்பட்ட தாக்குதல்கட்குச் சரிநிகர் களமாவதும் இங்கு குறிப்பிட வேண்டியது).

சந்திரஹாசனுக்கு நான் எழுதியதை அரைகுறையாகச் சரிநிகருக்கு ந.செ. எழுதிய நோக்கம் எனக்கு விளங்கவில்லை. சந்திரஹாசனது அரசியல் நிலைப்பாட்டுடன் எனக்கு இருந்த உடன்பாடும் அதனுடன் எஸ். பொவின் அரசியலின் பாரிய முரண்பாடும் காரணமாகவே கலை இலக்கியத்துறையில் அவருடன் சேர்ந்து செயற்படுவதன் அபாயம் பற்றி எச்சரித்தேன். தனிப்பட்ட முறையில் எஸ்.பொவை எனக்குத் தெரியாது. தனிப்பட்ட முறையில் அவர் பற்றி எச்சரிக்க எனக்குத் தகுதியுமில்லை.

தனிப்பட்ட கோபதாபங்களையும், காழ்ப்பையும் உமிழ்வதற்கான கழிவுக் கூடமாகச் சரிநிகர் ஆகாமலிருப்பது நல்லது என நினைக்கிறேன் வேறு விதமான அபிப்பிராயங்களும் இருக்கலாம்.

**சிவசேகரம், லண்டன்**

# யாழ்ப்பாண..

மேற்கிளம்பின. அவ்வாறான ஒரு விவாதத்துக்கான தளத்தை இங்கும் இடுகின்றனர்.

இதே கட்டுரையில் பிற மொழி நாடகங்களை நாம் தயாரிக்கும் போது எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் வினா எழுப்பி எமது பண்பாட்டுத் தளத்துக்கு பொருத்தமானவையே நாம் தயாரிக்க வேண்டும் அல்லது அவற்றை எமது பண்பாட்டிற்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு நாடகத்தில் மாற்றத்தை மேற்கொள்ளும் போது அதன் உயிர்ப்புக் கெட்டு விடும் என்னும் கருத்துச் சிலரால் முன்வைக்கப் படுகின்றது.

இருந்தும் முடிவாக நோக்கும் போது 80க்குப் பின்னரான யாழ்ப்பாண அரங்கை மையமாகக் கொண்டு வெளிவந்து உள்ள இந்நூல், குறித்த சமூகம் பற்றிய பல்கோணப் பார்வையில் அரங்கை மையப்படுத்தி வெளிவரும் முதல் நூலாக விளங்குவதுடன், நாடக விமர்சன நூல் ஒன்று ஈழத்து அரங்க வளர்ச்சியில் வெளிவருவது இதுவே முதல் தடவையாகும். இதனால் யாழ்ப்பாண அரங்கின் வளமான அறுவடைகளில் இந்நூலையும் ஒன்றாகக் கணிப்பிடலாம்.

**வடிவேல் - இன்பமோகன்**

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

இல. 04, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.

E-mail : sari@sri.lanka.net


## இராணுவ தபால் சேவை !

இறுதியாக தபால் சேவையும் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற தபால் சேவை ஊழியர்களின் மேலதிக வேலை நேர பகிஷ்கரிப்பு போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் எடுத்த நடவடிக்கை இது.

அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்ட ஒரு சேவையில், கடமையாற்றுவோர் கடமையில் ஈடுபட மறுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அரசாங்கத்தை கவிழ்க்கச் சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது சுமத்தமுடியும். கடந்த மூன்று மாத காலமாக தொடர்ச்சியாக மேலதிக வேலை நேர பகிஷ்கரிப்பு என்ற தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட தபால் சேவை ஊழியர்களின் நடவடிக்கை இப்பிரகடனம் செய்யப்பட்ட ஒரு சில நேரத்துள் பாரிய சதிக்குற்றமாக மாறியது. இப்போராட்டத்தை தலைமை ஏற்று நடாத்திய தொழிற்சங்க தலைவர்கள் 12 பேர் அரசாங்கத்தின் பிரகடனம் அறிவிக்கப்பட்ட ஒரு சில மணி நேரத்துள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டனர். அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

சாதாரண சட்டத்தின் கீழ் வேலைக்கு குந்தகம் செய்யும் ஒருவரை வேலை இடை நிறுத்தம்(interdiction) மட்டுமே செய்ய முடியும். ஆனால் அத்தியாவசிய சேவையின் கீழ் இத்தகைய வேலைகளில் ஈடுபடுவோரை தடுப்புக் காவலில் (detention) வைக்க முடியும். இதைத்தான் கடந்த சனியன்று இந்த அரசாங்கமும் செய்தது. கைது செய்யப்பட்ட தொழிற்சங்க தலைவர்கள் திங்களன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர் -அவர்கள் வேலைக்குத் திரும்பிய பின் தொடர்ந்தும் இதுமாதிரியான "சதி" வேலைகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற "நீதிமன்ற எச்சரிக்கையுடன்.

ஆக தொழிற்சங்கப் போராட்டங்களை அவை நியாயமானவையோ இல்லையோ சட்டத்தாலும் ஆயுதப்பலத்தாலும் எதிர்கொள்ளும் புதிய "ஜனநாயக" மரபை இந்த அரசாங்கம் தனது சொந்த மரபாக வெளிக்காட்டியுள்ளது.

தபால் சேவை ஊழியர்களது போராட்டம் பலத்த நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை. லட்சக்கணக்கான கடிதங்களும் பொதிகளும் தேங்கிக் கிடந்தன. வெளிநாட்டு உள்நாட்டு காசோலைகள் மாற்றப்படாமல் முடங்கிக் கிடந்தன. இது பொருளாதார ரீதியான நெருக்கடிகளை மக்களுக்கு தந்திருக்கும் என்பதும் உண்மையே.

ஆனால், இவையெல்லாம், ஒரு தொழிற்சங்கப் போராட்டத்தை ஆயுத முனையில் கட்டுப்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது.

இவ்வாறு தான் இலங்கை மின்சார சபைப் போராட்டமும் ஆயுத முனையில் நசுக்கப்பட்டது. அப்போது, இவ்வாறு தான் பொது மக்கள் மீதான சுமை பற்றி பேசப்பட்டது. உண்மையில் பொது மக்கள் மீதான சுமை பற்றி அக்கறைப்படுகின்ற ஒரு அரசாங்கம் பொது மக்களுக்கு நெருக்கடியையும், அசௌரியத்தையும், சுதந்திரமின்மையையும் ஏற்படுத்துகின்ற யுத்தம், அந்நியக் கம்பனிகளுக்கு உள்நாட்டு வளங்களை விற்றல் போன்ற விடயங்களை முதலில் நிறுத்த வேண்டும். அதைச் செய்தாலே பெரும்பாலான தொழிற்சங்க நடவடிக்கைகள் நின்று போய் விடும்.

ஆனால் அரசாங்கம், அப்படி செய்ய விரும்பவில்லை. மாறாக ஊழியர்களை கசக்கிப் பிழிந்தாவது தமது செலவீனங்களை சமாளிக்கவே அது முயல்கிறது.

உண்மையில் அப்படி என்னத்தைத்தான் இந்த தபால் ஊழியர்கள் கேட்டுவிட்டார்கள்?

தமது போராட்டக் காலத்தின் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தரப்பின் சார்பில் பேசவந்தவர்கள் ஒப்புக்கொண்ட பல விடயங்களை அமுல்படுத்த மறுக்கும், தபால் மா அதிபரை பதவி நீக்க வேண்டுமென்பதே அவர்களது கோரிக்கையாகும்.

தபால் மா அதிபர் திருமதி கொட்டகதெனிய அரசாங்க முடிவுகளைக் கூட அமுல்படுத்த மறுத்ததே அவரை பதவி நீக்குமாறு தாம் கோருவதற்கு காரணமாகும் என்கின்றார்கள் தொழிற்சங்கத் தலைவர்கள். இதற்கு அசைந்துகொடுக்க அரசாங்கம், விடாப்பிடியாக மறுப்பதே பிரச்சினை இவ்வளவு பெரிதாக வளரக் காரணமாகும். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சொல்வதைப் போல அமைச்சர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மனங்களைக் கூட நடைமுறைப்படுத்த தபால் மா அதிபர் மறுக்கிறார் என்ற குற்றச்சாட்டு உண்மையா என்று அறிய ஒரு விசாரணைக்கு அல்லவா அரசாங்கம் போயிருக்க வேண்டும்? ஆனால் அது அதைச் செய்வதற்குப் பதில் தபால் சேவையை அத்தியாவசியச் சேவையாக மாற்றியிருக்கிறது. ஊழியர்களை இதன்மூலம் அடக்கிவிட முடியும் என்று நினைத்திருக்கிறது. ஆனால், நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களோ தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று அறிவித்திருக்கின்றனர்.

அடுத்து அரசாங்கம் செய்யப்போவது என்ன?

சிவில் நிர்வாகத்தை இராணுவத்திடமும் பொலிஸிடமும் கொடுத்தது போல தபால் சேவையையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு இராணுவ தபால் சேவையை நடாத்தப்போகிறதா?

## நீதிபதிக்கு அதிகாரமில்லை!

வரைபடங்களுடன் இரு புலிகள் கைது என்ற பரபரப்பான செய்தியை வெளியிட்டுவிட்டு அடுத்த பரபரப்பு செய்தியைத் தேடுவதில் மூழ்கிப் போய்விட்டன சிங்கள ஆங்கில பத்திரிகைகள். ஆனால் படையினரால் கைது செய்யப்பட்ட செல்லையா தவமணி தேவிக்கோ சோதனை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்ற தவமணிதேவி-யின் பிரயாணப் பையில் கந்தளாய், கொத்மலை நீர்த்தேக்கங்களின் படமும், விகாரமகாதேவி பூங்காவின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது தான் தவமணி தேவிக்கு ஏழரைச் சனியானது.

யாழ்ப்பாணத்தில் இறங்கி, அச்சுவேலிக்குச் செல்லும்போது முத்திரைச் சந்தி சோதனைச் சாவடியிலிருந்த இராணுவத்தினன் இந்தப் பையைப் பார்த்து தவமணி-தேவியைப் பிடித்து விட்டான். பிறகென்ன தவமணிதேவி காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் நாட்களை கழிக்க வேண்டியதாயிற்று. உறவினர்களின் தேடுதலை அடுத்து அவர் மல்லாகம் நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டார்.

ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டிருந்த அவர் நதிமன்றில் மயங்கி விழுந்தார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு எதுவித ஆதாரமும் சமர்ப்பிக்கப்படாததால், "மனித உரிமை மீறப்படும் போது அலட்சியம் செய்தால், அவர் நீதி நிர்வாகத்தை அலட்சியம் செய்ததாக கருத இடமுண்டு" என்று கூறி அவரை விடுதலை செய்துவிட்டார் நீதிபதி. ஆனால், காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி மெகபொல பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவரை யாழ் நீதவான் பிணையில் விடமுடியாது எனக் கூறி அவரை மீளவும் கைது செய்து அனுராதபுரம் அனுப்பி வைத்திருக்கிறார். தவமணிதேவி இப்போது அனுராதபுரம் சிறையில். அவருக்குப் பிரயாணப் பை விற்றவர்கள், இன்னமும் நடைபாதையில் அதே பிரயாணப் பைகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## மந்திரிகளும் வரலாமே!

ஏப்ரல் 27 அன்று துரையப்பா விளையாட்டரங்கில் சித்தாரா இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்காக யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஊரடங்கு சட்டம் கூட இரவு 11.30 வரை தளர்த்தப்பட்டது - யாழ் நகர படைத்தளபதி சுசந்த மெண்டிஸ் உபயத்தில். அவரும் சிவில் உடையுடன் பந்தா எதுவுமின்றி வந்தார். வந்துபேசினார்.

யாழ்ப்பாண மக்கள் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதே எம் விருப்பம்எந்தவித கெடுபிடிகளும் இல்லாமல். நான் இப்போது உங்களுடன் உள்ளேன்...

நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுக்குத் தெரியும் விளையாட்டரங்கைச் சுற்றியும், மதிலிலும் இராணுவத்தினர் முழித்துக் கொண்டு நின்றதும், நிகழ்ச்சி பார்க்க வந்தவர்களை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தடவி உள்ளே அனுப்பியதும். இவ்வளவு பாதுகாப்பு இருக்குமென்றால், சுசந்த மெண்டிஸ் என்ன அமைச்சர் பிரதானிகளே கலந்து கொள்ளலாம்!

## பீஷ்மனின்...

இவ்விடயம் சம்பந்தமாக இவர் ஜனாதிபதிக்கு சமர்பித்த அறிக்கை அரசியல் வட்டாரங்களில் அதிகம் தெரிந்த ஒன்று. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமானால் வடகிழக்குத் தவிர்ந்த பிரதேசங்களில் தமிழ் மக்களின் அந்நியப்பாடுகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்குப் பதில் வரவில்லை. அது மாத்திரமல்ல ஆணைக்குழு தலைமைக்கான பதவி நீடிப்பும் வரவில்லை.

அந்த நிலையை சாளி ஏற்றுக் கொண்ட முறையிலேயே தான் சாளி எனும் மகா மனிதனின் அறவீரம் தெரிய வந்தது.

பீஷ்மர்களும், விதுரர்களும் அந்நியப் படுத்தப்பட்ட போர்களில் வெற்றி விலத்தியே நின்றது.

சாளி பிஷ்மர் போல் ஏற்றுக் கொண்டார்.

இப்படியான மனிதர்களால் தான் இன்றைக்கும் மழை பெய்கிறது. இவர்கள் தொகை குறைந்தால் மழை குறையும்.

சார்ள்ஸ் அபேசேகராவின் மரணம் அவர் போன்ற சிந்தனையாளர்களுக்கும், செயல்வாதிகளுக்கும் ஒரு சவால்.

சாளியின் மறைவு சிங்கள இனவாதத்துக்கு இதம் செய்வது. அவர்கள் சிங்கள விரோதி என்ற மனிதர் இன்றில்லை.

ஆனால், அவருக்குள் தான் ஐக்கிய இலங்கையின் ஆத்மா இருந்தது என்பதை மறந்து விடக்கூடாது. இந்த ஒளி இனி எப்படி எடுத்துச் செல்லப்படும்?

இது சாளி விட்டுச்சென்றுள்ள சவால்.

விடையை எதிர்நோக்கி நிற்கின்றோம்.

சாளியின் ஆத்மா எங்கள் எல்லோரையும் பார்த்துக் கொண்டு நிற்கின்றது.

## மூதூர்...

11ம் பக்கத்தொடர்...

பெரும் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். நகருக்குள் வருவதற்கான குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்கள் தொழில் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலைகளுக்கும் உள்ளாகிறார்கள். புலிகளின் தாக்குதல் எங்காவது இடம்பெற்றால் இவர்கள் மீதான கெடுபிடிகளும் அதிகரிக்கின்றன. அண்மைய சம்பவங்களை அடுத்து இவர்கள் நகருக்கள் வருவது இராணுவத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வியாபாரத்திற்கென நகருக்குள் வருபவர்களில் சிலர் புலிகளின் ஒற்றர்கள் அல்லது புலிகள் என்ற சந்தேகம் படையினருக்கு இருக்கின்றது. இவர்களே உள்ளூர் நிலைமைகள் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பவர்கள் என்று தெரியவருகிறது. அத்துடன் முஸ்லிம்களிடமிருந்து 'கப்பம்' அறிவிடும் நடவடிக்கைகளில் இவர்களுக்குத் துணையாக முஸ்லிம்களில் சிலர் செயற்படுவதாகவும், புலிகளியக்கத்தில் இன்னுமிருக்கிற முஸ்லிம்கள் சிலரும் ஊருக்குள் வந்து பணம் அறவிடுவதாகவும் கதைகள் உலவுகின்றன.

ஊருக்குள் புலிகளினால் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் நகருக்குள் வருகிற அப்பாவி பொதுமக்களும் உள்ளூரவாசிகளும் தங்களுக்கு முஸ்லிம் தரப்பால் ஏதும் நடந்து விடுமோ என்று அச்சத்தில் இருக்கின்றனர். நால்வர் கடத்திக்கொண்டு போன சம்பவத்தின் போதும் கூட உள்ளூர்த் தமிழ்மக்கள் சிலர் புலிகளிடம் தங்களுக்காக அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியதாகவும் பேசப்படுகிறது.

அண்மைய முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களுக்கிடையே ஊருக்குள் ஒரு தமிழரின் வீட்டின் மீது கிரனைட் ஒன்று இனந்தெரியாதோரால் எறியப்பட்டுள்ளது. கிளார்க் விவேகானந்தன் என்பவரது வீடே இத்தாக்குதலுக்குட்பட்டது. இதில் நால்வர் காயமடைந்துள்ளனர். இதுபற்றிய செய்தி வீரகேசரியில் முன்பக்கச் செய்தியாக வெளிவந்திருந்தது. ஆனால் ஹஜ் பெருநாள் தினத்திலிருந்து குறிப்பாக முஸ்லிம்கள் மீது நடந்து வரும் எந்தத்தாக்குதல் / கொலைச்சம்பவம் பற்றியோ எதுவித செய்திகளும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மூதூரில் சிங்கள மக்கள்

மூதூரைப் பொறுத்தவரையிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சிங்கள மக்கள் பரம்பரை நிரந்தரக்குடிகளாக இருந்ததில்லை. அதிகமானவை திட்டமிட்ட குடியேற்றங்கள் தான். மூதூர் நகருக்குள்ளும் இவர்கள் குடியேறியிருந்தனர். இவர்களுக்கென்று ஒரு பாடசாலையும், பன்சலையும் இருந்தது. கலவர காலங்களின் போது மூதூர் சிங்கள மக்கள் இல்லாத ஊராக்கப்பட்டது. பின்னர் இராணுவமும், பொலிசாரும் மீண்டும் தங்களைப் பலப்படுத்தி மீண்டும் குடியேற்றங்களைத் தோற்றுவிக்கத் தொடங்கிய பின்னர் மூதூரிலும் தற்போது கனிசமான தொகையினர் குடியேறியுள்ளனர். இவர்கள் முன்பு வாழ்ந்த அல்லது இவர்களது மூத்தவர்கள் வாழ்ந்த இடங்கள் பெரும்பாலும் ஏனையவர்களுக்கு விற்கப்பட்டு விட்டன. இப்போது மூதூர் அந்தோனியார் மகாவித்தியாலயத்திற்கு அருகே இவர்கள் குடியேறியுள்ளனர். வைத்தியசாலைக்கு முன்னுள்ள வீதியோரத்தில் இவர்கள் சிறு கொட்டில் கடைகளை அமைத்து வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். வீடியோக் கொட்டகைகளை அமைத்து படம் ஓடுவதும் இவர்களால் ஒரு 'கலாசாரப் புரட்சியாக' மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புலிகள் குற்றம் சாட்டுவது போல் இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் சிங்கள மக்களை குடியேற்றும் நடவடிக்கைகளும் நடந்து வருகின்றன. இறால்குழியிலிருந்த தமிழ் மக்கள் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டது அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றவே என்று புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர் என்று குறிப்பிடத்தக்கது.

பொதுவாக பொலிஸ் பாதுகாப்பில் இவர்கள் எந்தப்பிரச்சினையுமின்றி வாழ்ந்து வருகிறார்கள். தொடர்ந்து நிலைத்து தங்கள் குடியேற்றங்களை மேலும் மேலும் அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களுக்கு நகருக்குள் முகாமிட்டிருக்கும் படையினர்கள் உதவி வருகிறார்கள்.

பொதுவாக மூதூருக்குள் இவ்வாறு தான் அபபாவி மக்களுக்கெதிரான சம்பவங்கள் நிகழ்கின்றன. பெரும்பாலும் இதில் முஸ்லிம்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சில சம்பவங்கள் திட்டமிட்ட வகையில் நடாத்தப் படுகின்றன. இந்தச் சம்பவங்கள் அதிலும் குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கெதிராக விடுதலைக்காகப் போராடும் புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் புலிகள் பற்றிய அச்சத்தையே மேலும் மேலும் வளர்க்கின்றன. இந்த நிலையிலேயே இவ்வாறு அச்சுறுத்தலாக வாழ வேண்டி ஏற்படுகின்றதென்றால், இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் எந்த மாதிரி வாழ வேண்டியிருக்கும் என்ற நியாயமான அச்சம் மக்கள் மனதில் தோன்றத்தான் செய்கிறது.

பேரினவாதங்களின் ஆக்கிரமிப்பு பற்றிப்பேசி அதிலிருந்து விடுதலை பெறுவதற்காய் போராடுபவர்கள் இன்னொரு மக்கள் கூட்டத்தை ஆக்கிரமிப்புச் செய்வதென்பது எந்த விடுதலையின் பெயராலும் நியாயமானதாகப்படாது. அடக்கப்படும் இனம் இன்னொரு இனத்தை அடக்க நினைத்து அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற நிலையை மூதூர் போன்று ஈழத்தில் பல இடங்களில் காணலாம். எந்த மக்களாயினும் சரி அவர்கள் விடுதலையின் பேரில் அச்சம் தவிர்ந்து வாழ்பவர்களாயிருக்க வேண்டும். ஆனால் அந்த நிலை இன்றில்லை. முற்றிலும் மாறுபட்ட விம்பங்களே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்றுதான் அரச படையினரும் இருக்கிறார்கள். துப்பாக்கிகளுக்கு மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். மக்களுக்காய் போராடுபவர்களும் மக்களைப் பாதுகாப்பதற்காய் இருப்பவர்களும் எல்லா இனத்து மக்களையும் பயப்படுத்தி வைத்திருக்கிறார்கள். மக்களின் வாழ்வை, இருப்பை நடமாட்டத்தை, பேச்சை... என்று எல்லாவற்றையும் இவர்கள் கட்டிப்போட்டு வைத்திருக்கிறார்கள்.

எங்கு, எப்போது எது நடக்குமோ என்ற அச்சத்துடன்தான் மூதூர் மக்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றே நிகழ்வுகளின் அவதானங்களை வைத்து பொதுவாகக் கூற வேண்டியிருக்கிறது.

வெளியிடுவோர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. [illegible] இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 28.04.98.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்